பக்கங்கள்
24


# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 13 மே 2017 | விதி : 48



**மீண்டும் மஹிந்தவின் ஆட்சி வந்தால்...?**




**விருதுகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்**



**தலைவரின் மனதில் பரமதேவா**



**எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை**




**'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை தப்பித்தலுக்கு உரிமை கோரிய மூன்று இயக்கங்கள்

கூட்டமைப்பும் புலிகளும் 8

• தயாளன்

"சிறையிலிருந்து வெளியே வந்தால் நாங்கள் பத்திரமாகக் கூட்டிச்செல்வோம். அதற்குரிய ஏற்பாடுகளை பனா கொடையையே செய்யச் சொல்லுங்கள். வெளியிலிருந்து உள்ளே சென்று இவரை அழைத்து வருவது சாத்தியமில்லை" என அவர்கள் சித்தாவிடம் தெரிவித்தனர். அவர் அதைப் பரமதேவாவிடம் போய்ச் சொன்னார்.

**விடுதலைக்கு உதவிய சிறைக்காவலர் கிருஷ்ணமூர்த்தி**

பரமதேவாவும் பனாகொடையும் சிறைக்காவலர் கிருஷ்ணமூர்த்தியுடன் தொடர்புகொண்டனர். அவர் சிறையின் வெளிக்கதவின் திறப்பை எடுத்து சவர்க் காரத்தில் அழுத்தி அதைச் சித்தாவிடம் கொண்டுவந்து கொடுத்தார். சித்தா அதனைக் கொண்டு போய்த் திறப்புச் செய்பவரிடம் கொடுத்து நகல் ஒன்றைச் செய்து கொண்டு வந்தார். அது கன கச்சிதமாக பொருந்தியது என்பதை கிருஷ்ணமூர்த்தி உறுதிப்படுத்தினார். அதை பரமதேவா பனாகொடையிடம் கொடுத்தார் .

இவர்கள் ஏதோ திட்டம் போடுகிறார்கள் என்பதை ஊகித்த சக கைதிகள் அதை உணர்ந்து விட்டனர். பனா கொடையுடன் முரண்பட்டனர். இரவும்பகலும் முறை மாற்றி (ரேர்ன் போட்டு ) அவரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தனர். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பரமதேவா ஒவ்வொரு இயக்கத்தின் முக்கியஸ்தர்களையும் கண்டு ஒரேயடியாக எல்லோரும் தப்பிப் போக ஏற்பாடு செய்வோம் - என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரச்சினை இல்லை. டக்ளஸ் சொன்னால் அனைவரும் கேட்பர். புளொட்டைக் கையாளுவது சற்றுச் சிரமம். ஒரே உறையில் இரு வாள்கள் பரந்தன் ராஜனும் மாணிக்கதாசனும். இதற்கு ஒரே வழி பரமதேவாவின் புகழால் தன்னைப் பிரபல்யப்படுத்திக்கொண்ட வாசுதேவாவிடம் சொல்லி வெளியே வருவோரைச் கூட்டிச்செல்ல ஏற்பாடுகளைச் செய்யச் சொல்வதுதான். பரமதேவாவின் அண்ணன்தான் வாசுதேவா. இவர் ரிவோல்வரைச் சுற்றிக்காட்டி விலாசமடித்துத் திரிந்தாலும் ஒரு வாகனத்தை ஒழுங்கு பண்ணித் தருவதாக வாக்களித்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் இவர்களுடன் செல்வதாக ஏற்பாடு இருந்தது. ரெலோ வினர் மட்டக்களப்பில் தமக்கு எவருமே இல்லை என்று சொன்னபடியால் புளொட். ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் போகச் சொன்னார் பரமதேவா.

**புலிகளிடம் ஆயுதம் கோரிய கொமாண்டர் குன்சி**

வெளியே செல்பவர்களுக்குப் பாதுகாப்பின் நிமித்தம் ஆயுதங்கள் தேவை. புலிகளின் பிரதிநிதி ராமுவிடம் ஆயுதங்கள் கோரப்பட்டன. பொதுவாகவே புலிகள் ஆயுத விடயத்தில் மிகக் கண்டிப்பானவர்கள். அவர்களிடம் பலஸ்தீனப் பயிற்சி பெற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கொமாண்டரான குன்சி ஆறு எஸ்.எல்.ஆர் ..... என்றொரு ஆயுதங்களின் பட்டியலைக் கொடுத்தார். திருநெல்வேலிச் சமரில் எடுத்ததே ஆறு எஸ்.எல்.ஆர் தான். றிப்பிட்டர், எஸ்.எம்.ஜி. (உப இயந்திரத் துப்பாக்கி) குண்டுகள் என மேலும் சில கைப்பற்றப்பட்டு இருந்தாலும் இவர்களை நம்பி எப்படி ஆயுதங்களைக் கொடுப்பது ? இரகசியத் தன்மையோ அக்கறையோ இல்லாதவர்கள் இவர்கள்.

குறிகாட்டுவானில் சக வீரர்களைப் படகில் ஏற்றுவதற்காக வந்த கடற்படைச் சாரதி ஸ்ரேறிங்கில் தலை வைத்துப் படுத்திருக்கும்போது அவரது தலையில் சுட்டு விட்டு சுரிகுழல் துப்பாக்கியைக் கைப்பற்றியிருந்தது புளொட். அதனைக் களவு சம்பந்தமான விசாரணைக்காக வந்த பொலிஸாரிடம் பறிகொடுத்தது. ஒரு சமரிலோ, முற்றுகையிலோ ஆயுதங்களைப் பறிகொடுப்பதென்பது வேறு விடயம். எனவே இந்த விடயம் பரிசீலனைக்குரியதல்ல என்று பதிலளிக்கப்பட்டது.

**வெளியேற மறுத்த வண. பிதா சிங்கராயர்**

அடுத்தது புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் சிறையில் இல்லாவிடினும் நித்தியானந்தன் ( பல் கலைக்கழக விரிவுரையாளர்) நிர்மலா நித்தியானந்தன்(ஆசிரியை), அருட் தந்தையர்கள் சிங்கராஜா, சின்னராஜா, போதகர் ஜெயதிலக ராஜா, அவரது அண்ணன் டாக்டர் ஜெயகுலராஜா ஆகிய புலிகளின் ஆதரவாளர்கள் இருந்தனர். இவர்களில் வண.பிதா சிங்கராஜா, தான் கத்தோலிக்கத் திருச்சபைக்குக் கட்டுப்பட்டவர் என்றும் சட்டப்படி நிரபராதி என நிரூபித்த பின்பே வெளியில் வரப்போவதாகவும் தெரிவித்து விட்டார். ஏனையோர் தப்பிச் செல்லச் சம்மதம் தெரிவித்தனர்.

இவர்களில் நிர்மலா எப்போது சுதந்திரப் பறவையாவேன் - பூவரச மரங்களை, இலைகளை எப்போது காண்பேன் எனத் துடித்துக்கொண்டிருந்தார்.

புலிகளைச் சார்ந்தோரைக் கொண்டுசெல்லும் பொறுப்பைப் பரமதேவா ஏற்றுக்கொண்டார். இதில் பிரபாகரனுக்குத் திருப்தி. பரமதேவாவும் பிரபாகரனும் சந்தித்திருக்கா விட்டாலும் அவரது துணிச்சல், நேர்மை முதலான விடயங்களை ஏற்கெனவே அறிந்திருந்தவர் என்ற வகையில் பரமதேவா மீது பெருமதிப்புப் கொண்டிருந்தார்.

**நிர்மலாவை தோளிலேனும் தூக்கி வருவேன் என்ற மாணிக்கதாசன்!**

அடுத்து தப்பும் திட்டம் - மடக் கப்படும் சிறைக் காவலர்களைக் கட்டி வாயில் பிளாஸ்டர் போடும் வேலை புலிகளைச் சார்ந்தோருக்கு வழங்கப்பட்டது. நிர்மலாவை மீட்கும் பொறுப்பு புளொட்டைச் சேர்ந்த மாணிக்கதாசனிடம் கொடுக் கப்பட்டது. இப்பொறுப்பைக் கையளிக் கமுன்னர் இதில் ஏதும் நடைமுறைச் சிக்கல் இருக்கிறதா என அவரிடம் வினவப்பட்டது. அதற்கு அவர் " நான் நிர்மலா அக்காவை தோளிலேனும் தூக்கிக்கொண்டு வருவேன்" என உறுதியளித்தார்.



இவ்வாறாக ஒவ்வொரு பகுதியினருக்கும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. புலிகள் சார்பானோரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரும் தமது கடமையைச் சரியாகச் செய்தனர். நிர்மலாவை மீட்கும் பொறுப்பை ஏற்ற மாணிக்கதாசன் தான் வெளியில் போனால் போதும் என்று ஓடிவிட்டார். நிர்மலாவை நினைக்கவே இல்லை. அந்த முயற்சியில் இறங்கிப் பயனளிக்க வில்லை என்றால் மற்றவர்கள் உதவிக்கு வந்திருப்பர். ஏற்பாட்டின்படி புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோவின் வாகனத்தில் சென்றுவிட்டனர்.

வாகனத்தில் செல்வோரைப் படகு மூலம் கொண்டு செல்வதற்குரிய ஏற்பாடுகளைப் பரமதேவா ஏற்கனவே செய்திருந்தார். கல்லடி வாசிகளான சாந்தி, சூசைப்பிள்ளை, நாவலடியைச் சேர்ந்த யோகன், சின்னவன் ஆகியோர் படகுகளுடன் தயாராக இருந்தனர்.

கல்லடிச் சாந்தி மட்டக்களப்பில் ஆரம்ப காலத்தில் நடைபெற்ற பஸ் எரிப்புப் போன்ற அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். இவ்வாறான குற்றச்சாட்டில் பின்னாளில் பிரபல எழுத்தாளர் எஸ்.பொவின் மகன் Dr.அனுராவும் கைதாகி இருந்தார். அந்த வகையில் இவர்கள் எல்லோருமே பரமதேவாவுக்கு அறிமுகமானவர்கள். படகு தேவையென்ற பரமதேவாவின் கோரிக்கையைக் கல்லடிச் சாந்தியிடம் தெரிவித்தவர் சித்தா.

எனினும் புளொட்டைச் சார்ந்த காந்தியம் டேவிட் ஐயாவைக் கொண்டுசெல்லத் தவறிவிட்டனர். சிறைக்கு உள்ளே மட்டுமல்ல வெளியிலும் சொதப்பி விட்டனர் புளொட்டினர். சிறையிலிருந்து தப்பிய இயக்கம் சாராதோர், மீன் பிடிப்போர், கிறிஸ்தவ மத குருமார், இந்தியாவுக்குப் படகு ஓட்டுவோர் முதலானோர் எனத் தொடர்ச்சியாகப் பலர் உதவியதால் டேவிட் ஐயா இந்தியா போக முடிந்தது. அண்மையில் இவர் கிளிநொச்சியில் காலமானார். ஆனந்தபுரத்தில் உள்ள பொது நிறுவனமொன்று இறுதி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. கே.பி. மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன், சித்தார்த்தன் முதலானோர் இதில் கலந்து கொண்டனர். காந்தியம் மூலம் இவர் ஆற்றிய பணிகளைக் கௌரவிக்கு முகமாக முன்னாள் போராளிகள் பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

**படுவான்கரைக்குச் சென்றோரைப் பொறுப்பெடுத்த தம்பிராஜா!**

ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த வரதராஜப்பெருமாள், சின்னவன் மற்றும் பனாகொடை, சுப்பிரமணியம், காளி, வரதன், ஜெயா, மனோ, சிங்கன் சித்தா, பரமதேவா, புலிகளின் ஆதரவாளர்கள் ஆகியோர் முன்னர் தாங்கள் செய்த ஏற்பாட்டின்படி தோணியில் பெரிய களத்துக்குச் சென்று அங்கிருந்து படுவான்கரைக்குப் போய்விட்டனர். அங்கு அவர்களுக்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் தம்பிராஜா மற்றும் தவம் (நசார்) பாலிப்போடி செல்வநாயகம் (செல்வம் - யதுகுலன்) ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

மணல்பிட்டியில் மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை அவர்களுக்குச் சொந்தமான கடை ஒன்று இருந்தது. அங்கே புலிகளின் ஆதரவாளர்கள் தங்கவைக்கப்பட்டனர். பின்னர் தம்பிராஜா இவர்களைப் படகு மூலம் திருக்கோவிலில் கொண்டு வந்து சேர்த்தார்.அங்கு கவீந்திரனும் பிரபல வணிகர் ஒருவரும் இவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

சகோதரரான இருவரும் ஒரே இடத்தில் நிற்கக்கூடாது. ஒன்றாகப் பயணம் செய்யக்கூடாது. ஏதாவது நடந் தால் இருவருக்கும் ஆபத்து எனக் கருதி டாக்டர் ஜெயகுலராஜா திருக்கோவில் பகுதிக்கு அப்பால் சென்று விட்டார்.

பனாகொடை முதலானோர் உன்னிச்சைக்குச் சென்றனர். சின்னவன், வரதராஜப்பெருமாளை படுவான்கரையிலிருந்து கூட்டிச் சென்றார். தம்பலகாமத்தைச் சேர்ந்த இவரே பின்னாளில் ஈ.பி.ஆர்.எல். எவ். மேற்கொண்ட கிண்ணியா வங்கிக் கொள்ளையின் சூத்திரதாரி. காரைநகர் கடற்படைத்தளம் மீதான தாக்குதலில் இவர் உயிரிழந்தார். இத்தாக்குதலில் சோபா என்ற தோழியும் உயிர் இழந்தார். ஆயுதப் போராட்ட வரலாற்றில் முதல் உயிரிழந்த தமிழ் பெண் இவராவர்.

தமது தரப்பினரைக் கொண்டு வரும் பொறுப்பைச் சந்தோசம், பசீர்

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா

# மே 18



■ தமிழரசன்



**முள்ளிவாய்க்கால்...!**

பார்க்கும் இடமெல்லாம் பிணங்கள். துப்பாக்கிகள் ஓய்வின்றி எந்த நேரமும் சடசடத்துக் கொண்டேயிருந்தன. ஷெல் மழை போட்டியாக வருண பகவானும் மழையைப் பொழிந்து கொண்டேயிருந்தார். துப்பாக்கி, ஷெல் சத்தங்களுக்கு மேலாக மரண ஓலங்களும் அவலக் குரல்களும் எங்கும் கேட்ட வண்ணமிருந்தன. கூடவே பசிக் குரல்களும். பசிக் குரல் எழுந்து என்ன பயன்..? பசி தீர்க்கத்தான் உணவில்லையே, தண்ணீரைக் குடித்தேனும் பசியாறலாம் என்றால் அதற்கும் வழியில்லை. நிம்மதியாகக் குந்தியிருக்கவேனும் சிறு நிலமில்லையே.

பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோரும், பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகளும் சகோதரர்களை இழந்த சகோதரிகளும், சகோதரிகளை இழந்த சகோதரர்களும், கணவன், மனைவி, மாமன், சித்தப்பன், பெரியப்பன், பெரியம்மா, மச்சான், மச்சாள் என உறவுகள் ஒவ்வொருவரும் போர் அரக்கனுக்குப் பலியாகிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் கைகள், கால்கள் என அவயவங்களையும் இழந்து, பெரும் காயங்களையும் உடலில் சுமந்து கொண்டு மருத்துவ உதவிகூட இன்றி ஒட்டியிருக்கும் உயிரைத் தக்க வைக்கும் போராட்டமும் இந்தக் கொலை வலயத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட வழியே இல்லையா என்று எண்ணிக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் திரிந்த நாள்களும் எப்படி மனதில் இருந்து மறைந்தும்,மறந்தும் போகும்?

**மறையுமா..? மறப்போமா..?**

போர் அரக்கனும் அதன் கூலியாகி வந்த இலங்கை இராணுவமும் ஏற்படுத்திய கொடூரங்களும் - இழைத்த இன்னல்களும் - தந்த வலிகளும் நெஞ்சில் இன்னமும் ஆறாத காயமாக வலித்துக் கொண்டே இருக்கிறது. இறுதிப் போர் தின்று தீர்த்த ஒன்றரை இலட்சம் அப்பாவி மக்களின் உயிர் போக, குற்றுயிரும் குறையுயிருமாக எஞ்சியோர் முகாம்களுக்குள் அடைக்கப்பட்டு எந்தத் தொடர்புகளும் இன்றிப்பட்ட அவலங்களையும் இன்னல்களையும் எப்படித்தான் மறந்து போவோம்?போர்க் களத்தில் சரணடைந்தோரையும் அப்பாவி இளம் பெண்களையும் துகில் உரித்து வன்புணர்ந்து கொடூரக் கொலை புரிந்ததுடன், இளைஞர்களைக்கூட நிர்வாணமாக்கி கண்களையும் கைகளையும் கட்டி கொலை வெறி தலைக்கேறி தாண்டவம் ஆடிய இராணுவத்துக்கு மத்தியில் உயிரும் மானமும் காக்கப் போராடிய காலம் மறைந்துபோனதா? இல்லை இன்னமும் நீண்டுகொண்டுதான் உள்ளதா என்பதை உய்த்தறிய இன்றும் முடியவில்லை.

காவலர்களாக நின்ற வீரர்கள் களத்தில் செத்து மடிந்த போதும் - பகை மீது கரும்புலியாக வெடித்துச் சிதறியபோதும் வென்று விடுவோம் என்ற என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அந்த எதிர்பார்ப்பு கடைசியில் ஏமாற்றத்தில் முடிந்ததது. எல்லாமே முடிந்து போனபோது போராளிகளைச் சரணடையுமாறு தலைமைப்பீடம் உத்தரவிட்டது. மே 18 ஆம் நாள் அதற்கு முந்தைய ஒரு சில நாள்களிலும் மக்களுடன் மக்களாக போராளிகளும் கலந்து சரணடைந்தனர். சரணடைந்தோரில் ஒரு பகுதியினரை ஏற்றிச் சென்ற வாகனங்கள் எங்கே சென்றன என்றே தெரியவில்லை. பிடித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் தங்கள் போராளிக் கணவர்களையும் பிள்ளைகளையும் இராணுவத்தில் நேரடியாக ஒப்படைத்தபோதும் அவ்வாறு எவரும் ஒப்படைக்கப்படவில்லை என்று அழிச்சாட்டியம் செய்கிறது இராணுவம்.

**வற்றாத கண்ணீராறு**

போரில் மக்கள் செத்துக் கொண்டிருந்த நேரம், போரை நிறுத்த குரல் கொடுத்து காக்கவும், மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய மக்கள் பிரதிநிதிகளை [illegible] அந்த நாள்களில் காண[illegible]கிடைக்கவில்லை. தவறித்தானேனும் அவர்களின் குரல்கள் கூட ஒலிக்கவில்லை. போரை நிறுத்தத்தானேனும் அவர்களால் முடியவில்லை . அது போகட்டும், குற்றுயிரும் குறையுயிருமாக எஞ்சியோர் முகாம்களுக்குள் அடைபட்டு வெளித் தொடர்புகள் ஏதுமின்றி இராணுவப் பிடிக்குள் சிக்குண்டிருந்தவர்களைக் கூட, அப்போதைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீட்க முனையவில்லை. "அப்போது கொடுங்கோலாட்சி நடந்து கொண்டிருந்தது. எங்களால் எதுவும் செய்யமுடியவில்லை" அதே பிரகிருதிகள் அடுத்தமுறை நடந்த தேர்தலில் வாக்குக் கேட்டு வந்தபோதும், மன்னித்து அவர்களுக்கே வாக்கிட்டோம்.

இப்போது ஆட்சியை மாற்றினால் போதும் எங்கள் மக்களை அழித்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்து நீதியை நிலைநிறுத்துவோம் என்றார்கள். அதையும் செய்தோம். ஆனால் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. மக்கள் மீண்டும் முட்டாள்களாகிப் போனபோது, மீண்டும் அதேபல்லவி, இராஜதந்திரத்தால்தான் எதுவும் முடியும் என்று சாணக்கியமாகப் பேசி வாக்குகளை மீண்டும் கவர்ந்து சென்றனர். ஆட்சி மாறிவிட்டது, இனி தேனாறும் பாலாறும் ஓடாத குறைதான் என்று எங்களவர்களே சொன்னார்கள். இங்கு குருதியாறு ஓடவில்லையே தவிர கண்ணீர் ஆறு இன்னமும் வற்றாது ஓடிக் கொண்டே இருக்கிறது. வலிகளும் ரணங்களும் இப்போதும் இருந்துகொண்டே இருக்கின்றன.

**கையாலாகாத பிரதிநிதிகள்**

"போர்க் குற்றம் இழைத்தோரை விடமாட்டோம். அழிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு நீதி கிடைக்காமல் தூங்க மாட்டோம்" என்ற எங்கள் பிரதிநிதிகள், மக்கள் தம்கரங்களில் போராட்டங்களை முன்னெடுத்திருக்கையில் குறட்டை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். "நீங்கள் கேட்டதெல்லாம் நாம் வாக்குகளாகத் தந்தோமே எங்களுக்காகக் குரல் கொடுங்கள், நாதியற்று நிற்கும் எங்களுக்கு சிறு உதவியேனும் செய்யுங்கள்... "என்ற குரல்கள் எவையும் அவர்களுக்குக் கேட்கவில்லை. அழிக்கப்பட்ட மக்களுக்கு நீதி என்றவர்கள் அதைப்பற்றி சிறிதும் சிந்தித்தார்களில்லை. தங்கள் சுகபோகமே வாழ்வெனக் கிடக்கும் இவர்களை [illegible] நேர்மையான மாற்றுத் தெரிவும் மக்களுக்கு இல்லை. இந்நிலையில் சேடம் இழுத்துக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினை தீர்வுக்கு 2016 இற்குள் தீர்வு, 2 வாரத்துக்குள் நல்ல செய்தி என்று குளுக்கோஸ் ஏற்றிக் கொண்டிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

**மெல்லமெல்ல சாகும் மக்கள்**

மக்கள் பிரதிநிதிகள் மீட்சி பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த மக்கள், அவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள் என்று உணர்ந்து இன்று தமக்காகத் தாமே போராடத் தொடங்கி விட்டனர். இருந்தும் என்ன பயன்? எல்லாமே இந்த சுயநலமிகளான அரசியல் தலைமைகளிடம்தானே இருக்கிறது. மக்களின் போராட்டத்தை கண்டுகொள்ளாத அரசியல் தலைமைகள் அடுத்த தேர்தலில் வாக்குகளை அள்ள என்ன செய்யலாம் என்று வழி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் கொலை வலயத்துக்குள் இருந்து தப்பியவர்கள், தங்கள் சொந்தங்களை இராணுவத்திடம் கையளித்திருந்தனர். எனினும் தற்போது அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா என்று கூடத் தெரியாமல் புகைப்படங்களை ஏந்திக் கொண்டு போராடியபடி இருக்கிறார்கள்.

**நீளும் முள்ளிவாய்க்கால்**

முள்ளிவாய்க்காலில் எம் மக்களை அழித்து கோரத் தாண்டவமாடியது அரசாங்கம். அதன் செய்கைகளை எல்லாம் பார்த்தும் பார்க்காததுமாக நடந்தது சர்வதேசம். உலகிலேயே மிக மோசமான வன்முறைகள் - கொடூரங்கள் - வெறியாட்டங்களை சொந்த மக்கள் மீதே அரசும் இராணுவமும் முள்ளிவாய்க்காலில் கட்டவிழ்த்து விட்டன. அதிலிருந்து மிஞ்சியவர்களும் ஏனையோரும் தங்கள் இனம் அழிபட்டுக்கொண்டிருந்த அந்த நாள்களை பிரதிபலிக்கும் நாளாக மே 18 ஐ தமிழர்கள் நினைவேந்துகின்றனர்.

ஆனாலும் இறப்புக்களை தந்த முள்ளிவாய்க்கால் மே 18 உடன் நிறை வுற்றபோதும், அந்த இழப்புக் களையும் வலிகளையும் ரணங்களையும் சுமந்த அவலங்களாக இன்றும் விரிந்து கொண்டே செல்லும் புதிய புதிய முள்ளிவாய்க்கால்களில் கண்ணுக்குத் தெரியாமால் எம்மக்கள் செத்துக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 பெண்ணாகி முதுமையுமான மாயம்

கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் ஆண்கள் பலரும் பெண்ணாகவும் முதுமையான தோற்றங்களிலும் காணப்பட்டனர். இதேபோன்றே பெண்கள் சிலரும் இருந்தனர். இந்த மாயத் தோற்றத்துக்கு காரணம் வேறு ஒன்றுமில்லை புதிதாக அறிமுகமான "பேஸ் அப்"தான்.

சும்மாவே, "நான் இப்படி இருந்தால் எப்படி இருப்பேன்" என்ற கற்பனை எல்லோருக்கும் ஏற்படுவதுதான். எல்லா மனிதர்களுக்கும் இருக்கும் இந்தப் பலவீனத்தைக் கண்டுதான் "பேஸ் அப்" அறிமுகமானது. முதுமை, பெண் தோற்றங்களுக்கு மாறுவது சரி, பொதுவாக படங்களுக்குப் போஸ் கொடுக்கும்போது பெண்களும் ஆண்களும் பற்கள் முழுமையாக தெரியும்படி சிரிக்க மாட்டார்கள். இப்போ என்னடா என்றால் 32 பல்லும் தெரிய சிரிக்கும்படியாக போட்டோ போடுகிறார்கள். அட இதுவும் பேஸ்அப் கொடுப்பதுதான்.





Vkm Sasikumar
18 hrs

இருளும் ஒளியும் கலந்துகிடக்கிறது வாழ்க்கை அதில் தூரத்தில் ஒளிரும் நட்சத்திரம் ஒரு நாள் பிரகாசிக்கும் என்ற நம்பிக்கை மிச்சமிருக்கிறது.

### அது ஒரு அழகிய காலம்...!


Vairavanathan Sivarathan

ஒரு காலத்தில் இந்த facebook எவ்வளவு அழகாக இருந்துச்சு.

நாலு ஐந்து வரிக்கு மேல் ஸ்டேட்டஸ் போட முடியாது . கனக்க யோசிக்க தேவையில்லை. Facebook வந்ததும் டைம் லைன் ஐ பார்க்கிறதை விட ஒன்லைன் இல் யார் இருக்கிறது என்று தான் பார்ப்போம் . இருக்கிற எல்லா பெண்களுக்கும் ஹாய் என்று அனுப்பு விட்டு எல்லா சட் லைனையும் க்ளோஸ் பண்ணாமல் அப்படியே வைத்திருப்போம். யார் ரிப்ல பண்ணுறாங்க என்று பார்த்திட்டு உடனே அவர்களோட கதைக்க தொடங்குவோம். அப்ப எல்லாம் டைம் லைன் ஆங்காங்கே ஒரு சில பொங்கல்கள் நடக்கும். நாம பாட்டுக்கு எங்களுக்கு தெரிஞ்ச உலக கதைகளை சட் பண்ணிட்டே இருப்போம்.

எப்ப தொடங்கினேன் எப்படி தொடங்கினேன் என்று தெரியல . எதோ ஒன்று இரண்டு அரசியல் ஸ்டேட்டஸ் போட தொடங்கினேன். அவ்வளவு தான் . அன்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக facebook மாற தொடங்கிட்டு பெண்கள் சட் பண்ணுவது இல்லை. அப்படியே சட் பண்ணினாலும் அண்ணா என்று சொல்லி மரியாதையா கதைக் கிறார்கள்.

சரி நாங்களா ஏதாவது கதை போட்டு பார்ப்பம் என்றாலும் பயமா இருக்கு. ஸ்க்ரீன் ஷொட் போட நம்ம பெடியள் போராட தொடங்கிடுவாங்களோ என்று டைம் லைன் போனால் எல்லா பக்கமும் பல்வேறு பொங்கல்கள்.

பத்தாதுக்கு ஏதாவது புது அப்பிளிக்கேஷன் ஐ பயன்படுத்தி போட்டோ போட்டு பயப்புடுத்துறாங்க Facebook வரவே பயமா இருக்கு. எவன் எந்தப் பக்கம் நின்று வா வா இந்தச் சண்டைக்கு என்று கூப்பிடுவானோ என்று. ஆனால், இது எல்லாம் தெரியாமல் இதை எல்லாம் பார்க்காமல் நாங்க முந்தி இருந்த மாதிரி பல பேர் இருக்கிறாங்க facebook இல். அவங்க டைம் லைன் இல் ஒன்றும் இருக்காது. ஒருவருக்கும் லைக் போடமாட்டாங்க. ஒருவருக்கும் கொமெண்ட் போட மாட்டாங்க. ஆனால் அவங்க சட் லைன் மட்டும் ஒப்பின் பண்ணி இருக்கு. அவங்க காலம் அழகிய காலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்

## 2 கொந்தளிக்கும் வலைத்தளங்கள்



முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளான மே 18 நெருங்குகிறது. இந்த வாரமே சமூகவலைத்தளங்களில் உணர்ச்சி கொந்தளிக்கத் தொடங்கி விட்டது.

பலரும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு குறித்த படங்கள், செய்திகள், தகவல்களைப் பதிவிட்டனர். வன்னிப் போரில் தாங்கள் எதிர்கொண்ட ஆபத்துக்கள்,- கஷ்டங்கள் - துன்பங்கள் - இழப்புக்கள் - பிரிவுகள் தொடர்பான நினைவு மீட்புத் தகவல்கள் சமூக வலைத்தளங்களில் உலா வரத் தொடங்கியுள்ளன.

ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இடம்பெறும் முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் நிகழ்வுகளின் அழைப்புக்கள், ஆயத்த நிகழ்வுகளுக்கான அழைப்புக்களும் அதிகளவில் பகிரப்பட்டிருந்தன. கூடவே விடுதலைப் போராட்டத்தில் விதையாகிப் போனவர்களின் நினைவுகளும் பகிரப்பட்டன.

நினைவு தினத்தன்று வேறு ஒரு நிகழ்வுக்காக ஜனாதிபதி மைத்திரி முல்லைத்தீவுக்குச் செல்வது தொடர்பான கண்டனங்களும், கடந்த வருடம் முடிவு செய்தும் இன்னமும் நிறைவேறாத முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பிலும் கண்டனங்களும் வெளியாகின.

மே 18 நாளுக்காக கொந்தளிக்கத் தொடங்கியுள்ளன சமூகவலைத்தளங்கள்.




காதலிக்கிற பொண்ண "காதலி"ன்னு சொல்றோம்...





அப்ப கல்யாணம் பன்னா "கல்யாணி"ன்னு தான சொல்லனும்...

## 3 தீராத பாகுபலி காய்ச்சல்

பாகுபலி 2 படம் ஆயிரம் கோடி இந்திய ரூபாவை வெறும் 10 நாள்களில் வசூலித்துக் குவித்தது. ஆயிரம் கோடியை வசூலித்த முதல் இந்தியப் படம் என்ற பெருமையைப் பெற்றது இந்தப் படமே. இந்திய அளவில் தங்கல், பிகே படங்களே அதிக வசூல் குவித்த படங்களாக இருந்தன. இந்தச் சாதனைகளை ஒரே வாரத்தில் இலகுவாகத் தாண்டிய பாகுபலி 2 பற்றியே இந்த வாரமும் சமூகவலைத்தளங்களில் பேசப்பட்டன.

பலரும் தங்கல், பிகே படங்கள் வசூலான தொகைகளையும் பாகுபலி குவிக்கும் சாதனைகளையும் பட்டியலிட்டுக் கொண்டே இருந்தனர். கூடவே ஹொலிவூட் படங்களுடனும் ஒப்பிட்டு இந்த வசூல் சாதனை சமூகவலைத்தளங்களில் கணக்கிடப்படுகிறது. பாகுபலி வெளியாகி இரு வாரங்களைக் கடக்கின்ற போதிலும் பாகுபலி காய்ச்சல் இன்னமும் சமூகவலைத்தளங்களை விட்டு அகலவில்லை.




## இந்தவார மீம் (Meme)

வெளிய போனா வெயில் மண்டைய பொளக்குது..




அப்ப அத "கடப்பாற" வெயில்னுதான சொல்லனும், ஏன் "கத்தரி"வெயில்னு சொல்றாங்க...

ராஜ மாதாவாகவே இருந்தாலும் மாமியார் ஆகிவிட்டால் தவறு தான் செய்வார்...




பாகுபலியே ஆனாலும் மனைவி, அம்மாவையும்ஒரே நேரத்தில் சந்தோஷபடுத்த முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவீதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## வீழ்ந்தும் உரமாக...

பொருளாதாரம், அரசியல், இராணுவம் என்ற அனைத்திலும் தமிழர் தங்களிடம் ஏமாந்து போக மாட்டார்கள் என்று வல்லரசுகள் எண்ணியதன் விளைவே, முள்ளிவாய்க்கால் கூட்டுப் படுகொலை. படுகொலைக்கு முந்திய நான்கு மாத காலத்தில் பல பேரங்கள், பல ஏமாற்று வித்தைகள் நடைபெற்றன. உலகத்தின் இன்னொரு புள்ளியில் தமிழ் ஈழம் இஸ்ரேலாகப் பார்க்கப்பட்டது. தமிழர் பலம்பெற்றவர்களாக இருக்கக்கூடாது என்று சிங்களப் பேரினவாதம் முடிவெடுத்தது. தனக்குத் தெற்கிலும் ஒரு தலையிடி வந்துவிடக் கூடாது என்பதில் மாத்திரம் கவனப்பட்டுக் கொண்டது இந்தியா. அத்துடன் அப்போது இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த இந்திரா காங்கிரஸ் கட்சி வஞ்சம் தீர்க்க இதை ஒரு சந்தர்ப்பமாகக் கையாண்டது.

விளைவு? மிகக் குறுகலான ஒரு சதுப்பு நிலத்தில், ஒரு லட்சம் மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டது. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய அமைப்பு சிதைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான போராளிகளும், பொதுமக்களும் சிறைபிடிக்கப்பட்டனர். இவர்களில் ஒரு தொகுதியினர் இன்னமும் காணாமலாக்கப்பட்டோர் பட்டியலில். அவர்களின் உறவினர்களோ இன்னும் போராட்டங்கள் செய்து அவர்களைத் தேடியபடி.

போரில் தோற்றது கொடுமையல்ல. நாம் இன்னும் அதற்கொப்பான ஒரு தீர்வைப் பெற்றுக் கொள்ளவும் இல்லை. இன்னும் உரிமைக்குப் பேரம் பேசிக்கொள்பவர்களாகவும் மன்றாடிக் கொள்பவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எதிரியைவிட எம்முள் பலர் அதை ஒரு வணிகப் பொருளாக இன்னும் கையாண்டு கொண்டிருக்கிறோம். முள்ளிவாய்க்கால் ஒரு வணிகப் பொருளாகி இன்று எட்டாண்டுகள் ஓடி மறைந்து விட்ட நிலையில் அதை சார்ந்த அவலங்கள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

எமது நிலம் எமக்கு வேண்டும்.

எங்கள் பிள்ளைகள் எங்கே? என்ற குரல்கள் தான் அவ்வப்போது முள்ளிவாய்க்காலை நினைவுபடுத்த.... எட்டாண்டுகள் கண்முன்னே பறந்தோடி விட்டன.

இந்த எட்டாண்டுகளில் எதிரிதான் பல வழிகளிலும் வென்றிருக்கிறான். ஐ.நா. இனப் படுகொலை விசாரணைக்குக் கால அவகாசம் கொடுத்திருக்கிறது. படுகொலை தான் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த பல சர்வதேச நடுவர்களும், ஊடகங்களும் மௌனமாகிக் கொண்டன.எம்மவரும் விளையாட்டுக்களிலும், களியாட்டங்களிலும் மனதைத் திசைதிருப்பி முள்ளிவாய்க்காலை மறந்துபோக..


காலம் நகர்கிறது.

எந்தவித எதிர்பார்ப்புகளுமற்றுத் தன்னுயிரை ஈய்ந்தவர்களின் இலட்சியக் கனவுகளையும் சின்னாபின்னப்பட்டுப்போன மக்களின் வாழ்க்கையையும் இந்த மண் மறந்துவிடாது. 'வித்துக்கள் விருட்சங்களாகும்' என்பது எழுதப்படாத விதிகளில் ஒன்று.

எழுந்தால் மரமாக, விழுந்தால் உரமாக.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'


## ஆரியகுளமும் ஆயிரம் விளக்குகளும்





நாகவிகாரையில் பூசை நடந்ததாம்
ரூபவாகினி சொல்லிற்று
இனி என்ன?
"காமினி ரீ றூம்" கதவுகள் திறக்கும்
சிற்றி பேக்கரியும்
சீனிச் சம்பலும்
நகரப் பகுதியில் அறிமுகமாகும்
புத்தன் கோவிலுக்கு அத்திபாரம் போட
ரத்வத்த வரக்கூடும்
சிங்கள மகாவித்தியாலயம் திரும்ப எழுமா?
எழலாம்.
வெசாக் கால வெளிச்சக் கூட்டை
எங்கே கட்டுவார்?
ஏன் இடமாயில்லை?
வீரமாகாளியின் வெள்ளரசிற் கட்டலாம்
முனியப்பர் கோவில் முன்றிலிலும் கட்டலாம்
பெருமாள் கோவில் தேரிலும்
பிள்ளையார் கோவில் மதிலிலும் கட்டலாம்
எவர் போய் ஏனென்று கேட்பீர்?
முற்ற வெளியில் "தினகரன் விழாவும்"
காசிப்பிள்ளை அரங்கில்
களியாட்ட விழாவும் நடைபெறலாம்.
நாகவிகாரையிலிருந்து நயினாதீவுக்கு
பாதயாத்திரை போகும்.
பிரித் ஓதும் சத்தம் செம்மணி தாண்டிவந்து
காதில் விழும்.
ஆரியகுளத்து தாமரைப் பூவுக்கு
அடித்தது யோகம்.
பீக்குளத்துப் பூக்களும் பூசைக்கு போகும்.
நல்லூர் மணி துருப்பிடித்துப் போக
நாகவிகாரை மணியசையும்.
ஒரு மெழுகுவர்த்திக்காக
புனித யாகப்பர் காத்துக்கிடக்க,
ஆரியகுளத்தில் ஆயிரம் விளக்குகள் சுடரும்.
எம்மினத்தின் இளைய தலைமுறையே,
கண் திறக்காது கிடக்கின்றாய்.
பகைவன் உன் வேரையும் விழுதையும் வெட்டி
மொட்டை மரமாக்கி விட்டான்.

- புதுவை இரத்தினதுரை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

# பிழைத்து பிழைத்து சாதல்

மரணம், இதோ இந்தக்கணத்திலும் என் மூக்கருகில் வந்து சீண்டி விளையாடிக்கொண்டிருக்கிறது. இப்போது இரவு ஒன்பது மணி. 'மிக் 27' விமானங்கள் பேரிரைச்சலோடு குண்டு வீச அலைகின்றன. காதைப்பிளக்கும் இரைச்சல். உயிரைக்கரைக்கும் இரைச்சல். எந்த வீட்டிலும் வெளிச்சம் இல்லை. எல்லா விளக்குகளும் அணைந்து விட்டன. எந்த வீட்டிலும் யாருமில்லை. எல்லோரும் பங்கருக்குள்.

குழந்தைகள் பயத்தில் அலறுகின்றன. எல்லோருக்கும் அழுகை வருகிறது. ஆனால் அழமுடியுமா. அழுதால் இந்தப் பயம் நீங்கி விடுமா? இந்த அபாயம் தொலையுமா?

பயம் என்பது குழந்தைகளுக்கு மட்டுமா? எல்லோருடைய கால்களும்தான் நடுங்குகின்றன. இதயத்தின் நரம்புகளில் மரண நடனம். பிரமாண்டமான பாம்பாக அலைகிறது மரணம். அது எங்கே கொத்தப்போகிறது? யாரைக்கொத்தப்போகிறது? யாருடைய தலையில்? யாருடைய கண்களில்... ? கடவுளே, கடவுளே ...!

எல்லா வீடுகளிலும் விளக்குகளை அணைத்துவிட்டார்கள். வீட்டிலும் இருள். பங்கருக்குள்ளும் இருள். வெளியிலும் இருள். சனங்களின் வாழ்விலும் இருள். மனங்களிலும் இருள்....

இருளென்பது சூனியத்தின் வெளி.

இருளைக்கிழித்து இதோ பல்லாயிரம் 'வோல்ட்டேஜ்' ஒளிவீசும் படியாக வானத்தில் முப்பது வெளிச்சக்குண்டுகள். எங்கேயும் மறைய முடியாது. யாரும் ஒளிக்க முடியாது. அந்தளவுக்குப் பிரகாசமான வெளிச்சம். பகலைப்போல வெளிச்சம். குண்டுவீச்சு விமானங்கள் இலக்கைத்தேடுகின்றன.

எது இலக்கு? எதற்கு இலக்கு? கொல்வதற்கன்றி வேறெதற்கு? உண்மையில் அது இலக்கா, அப்படியென்றால் என்ன? தலைகள்தானே. சனங்களின் தலைகள், அல்லது போராளிகளின் தலைகள். அப்படியென்றால் அது கொலை. எப்படியோ அது அப்பட்டமான கொலை. அதில் எவெரென்றில்லை. யாராயினும் கொலை. ஒரு சிங்களக் கிராமத்தில் இப்படிக் குண்டை வீசுவார்களா? இதைப்போல, ஒரு தமிழ்க் கிராமத்தில் மாறியும் ஒரு தாக்குதலை இப்படி நடத்துவார்களா போராளிகள்?

சாவுதான் நிச்சயமானது என்று எல்லோருக்கும் புரிகிறது. ஒரு கணத்தில், ஒரே கணத்தில் அது எல்லோருக்கும் புரிகிறது.

விமானங்கள் இன்னும் குண்டுகளை வீசவில்லை. இதுதான் கொடுமையானது. குண்டுகள் வீசப்பட்டால் அதில் சிக்கிச் செத்துவிடலாம்.

சிக்கவில்லையென்றால் உயிர்தப்பலாம். அல்லது குண்டுகள் வீசப்படும் இடத்தை அறிந்தால் சற்றுப்பயம் குறைந்து விடும். இனி அந்த இடத்திலேயே மிகுதிக் குண்டுகளையும் வீசுவார்கள் என்று நம்பலாம். ஓர் இலக்கை முழுதாக அழிப்பதே இதன் நோக்கம். விதிவிலக்காக ஒரே சுற்றில் இரண்டு இடங்களில் குண்டு வீச்சு நிகழ்வதும் உண்டு. ஆனால், அதற்குச் சாத்தியங்கள் அரிது.

எனவே எங்காவது குண்டுகள் விழத் தொடங்கி விட்டால், சற்று ஆறலாம். அதற்காக 'அந்த இடத்தில் உள்ளவர்கள் மாட்டுப்படட்டும். நாம் தப்பிவிடலாம்' என்று அர்த்தமில்லை. உயிரச்சம் அந்தக் கணத்தில் எந்தத் தீர்மானங்களையும் அலசிக்கொண்டிருப்பதில்லை. எத்தகைய விவாதங்களுக்கும் அப்போது இடமில்லை.

விமானங்கள் சுற்றச்சுற்றப் பயம் கூடுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் விமானங்கள் சுற்றும்போது ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள் தங்களின் தலைக்குமேலேயே அந்த விமானங்கள் குண்டுகளைப் வீசப்போகின்றன என்று. அதனால் ஒவ்வொருவரும் பீதியுடனேயே அந்தக்கணத்தில் பங்கருக்குள்ளிருக்கிறார்கள்.

பங்கர் வாழ்க்கை என்பது நரக வாழ்க்கையே. அதிலும் குழந்தைகளுடன் பங்கருக்குள்ளிருப்பது என்றால், அதை விடக் கடினமாதும் கொடுமையானதும் வேறில்லை. புழுக்கத்திலும் இறுக்கத்திலும் குழந்தைகள் இருப்புக் கொள்ள முடியாமல் கத்துவார்கள். இதை எப்படியும் கட்டுப்படுத்த முடியாது. அவற்றுக்கு, தலைக்கு மேலே உள்ள அபாயத்தைப் பற்றிப் புரியாது. அதற்காக வெளியே வரவும் முடியாது. பதுங்கு குழிக்குள்ளிருக்கும்போது வெளியே என்ன நிலவரம் என்று யாருக்கும் தெரிவதில்லை. எனவே எப்படி வெளியே வர முடியும்? உள்ளே கொந்தளிக்கும் குழந்தை எதையும் நிதானிக்க இடமளிக்காது.

கடவுளே, இந்த விதியை என்னவென்பது? நரகத்திலே உயிர்த்தஞ்சம் அடைந்திருக்கிற கொடுமை இது. இதைவிட வேறுவழியில்லை. உயிர் வேண்டுமா நரகத்துக்குப்போ. நரகமே இப்போது பாதுகாப்பிடம். (18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைக்குட்பட்டது

**8%* வரையான அதிவிசேட வட்டி**

**வாழ்க்கைக்கு மகிழ்ச்சி தரும் வரப்பிரசாதம்**

**YYY வங்கி**

உங்கள் பணத்தை பாதுகாத்திட


* நிபந்தனைக்குட்பட்டது

■ நோக்கன்

"உங்கள் வீட்டுக் கனவை நாங்கள் நனவாக்குகிறோம்... உங்கள் வாகனக் கனவை நரங்கள் நிஜமாக்குகிறோம்.. உங்கள் ஆசைகள் அரங்கேற.... உங்கள் பிள்ளைச் செல்வங்களின் திருமணக் கனவுகளை நாம் சுமப்போம், விண்ணப்பித்து மூன்று நாள்களில் கடனைப் பெறலாம். கடன்கிடைக்கும் வரை உங்கள் விண்ணப்பப்படிவம் பற்றிய விவரங்கள் SMS மூலம் உங்களுக்கு அறியத்தரப்படும்," என்ற விளம்பரங்களை நீங்கள் பத்திரிகைகளிலும், சுவரொட்டிகளிலும், தெருக்கரையோரத்துப் பதாகைகளிலும், தொலைக்காட்சி விளம்பரங்களிலும் தாராளமாகக் காணக்கூடிய தாயிருக்கிறது. இத்தகைய விளம்பரங்க்ளைப் பெரும்பாலும் லீசிங் கம்பனிகள், நிதிமுதலீட்டு நிறுவனங்கள், பினான்ஸ் கம்பனிகள் மற்றும் வங்கிகள், பொருள்களைத் தவணை முறையில் பணத்தைச் செலுத்தக் கூடியதாகப் பொருள்களை விற்பனை செய்கின்ற காப்பரேட் கம்பனிகள் என்பனவே செய்கின்றன. மக்களுக்குக் கவர்ச்சிகரமான விளம்பரங்களைச் செய்வதன்மூலம் அவர்களைத் தமது காலடிக்குக் கொண்டுவருவதே இந்தக் கம்பனிகளின் கனவும்,நோக்கமுமாக இருக்கின்றது. அதற்காக தமது அலுவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பலலட்சம் செலவுசெய்து விசேட பயிற்சிகளை வழங்குகின்றன. இந்தப் பயிற்சியில் கம்பனியின் தயாரிப்புக்களை எப்படி விற்பனை செய்வது என்பது தொடக்கம் அவர்கள் எப்படி வாடிக்கையாளர்களின் நம்பகத் தன்மையைப் பெற்றுக்கொள்வது மற்றும் ஒப்பனை, உடை அலங்காரம் செய்துகொள்ளவேண்டிய முறைமை என்பது வரை சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

நுகர்வோர் உளவியல் மற்றும் விற்பனை வியூகம் என்பவற்றில் கைதேர்ந்தவர்களாக ஆக்குவதற்கான விசேட பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதை நீங்கள் காப்புறுதி விற்பனை முகவரிடம் அதிகமாகக் காணலாம். உங்கள் மரணத்துக்குப் பின்னால் அப்படி நடந்தால்? இப்படி நடந்தால்? உங்கள் குடும்பம் நடுத்தெருவுக்கு வந்துவிடும் என்றெல்லாம் சொல்லி ஒருவித பய உணர்வை ஏற்படுத்திச் சம்மதிக்க வைத்துவிடுவார்கள். முதல் தவணையையும் கட்டப் பண்ணிவிடுவார்கள். தொடர்ந்து அவரால் கட்ட முடியமா? என்றெல்லாம் யோசிப்பது கிடையாது. எனக்குத் தெரிந்த பலர் தாம் எடுத்த காப்புறுதியைத் தொடர்ந்து கட்ட முடியாமல் திண்டாடியதையும்., இடையிலே கட்டாமல் விட்டதையும், இதனால் அவர்களுக்கு பல ஆயிரக் கணக்கான பணம் நஷ்டம் ஏற்பட்டதையும் கண்டிருக்கிறேன். ஏன் கட்டினீர்கள்? என்று கேட்டால், ஆரம்பத்தில் காப்புறுதியை அவர்களுக்கு விற்கவந்த முகவர் பல பொய்கள் சொல்லி ஆசை காட்டி, அவரை ஏமாற்றிய விடயம் தெரியவரும். அவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். இது ஒன்றல்ல, இரண்டல்ல. பல பேர்கள் இதுபோல ஏமாந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். (சுருங்கச் சொன்னால் மக்களை ஏமாற்றுவது எப்படி? என்ற விடயமும் கம்பனிக்கு வருமானத்தைப் பெற எதை வேண்டுமானாலும் செய்யலாம். பின்பு சட்டப் பிரச்சினையாக வந்தால் அதிலிருந்து தப்ப எந்தவித குறுக்குவழிகளையெல்லாம் கையாள வேண்டும் என்பதே சொல்லிக் கொடுப்பதாகவே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அலங்கரிக்கப்பட்ட தொழில்நுட்பம் வாய்ந்த சூழலில் மக்கள் வசமுள்ள பணத்தை கம்பனியின் கைக்கு எப்படி இடம் மாற்றுவது என்பதே இப்பயிற்சியின் நோக்கம். கேட்டால் WORK SHOP, SEMINAR, MEETING என்று நுனி நாக்கால் ஆங்கிலத்தில் பேசுவார்கள். அவர்கள் நடை உடை பாவனைகள் அனைத்தையும் நம்ப வைத்துவிடும்)

தமது வலையில் வீழ்பவர்களுக்குக் காலைப்பிடித்துக் கடனைக் கொடுக்கும்வரை நல்லநண்பனாக நடந்துகொள்பவர்கள், கடனைத் திருப்பிச் செலுத்தத் தாமதமாகும்போது தமது சுயத்தையே மாற்றிக்கொள்ளுகின்றனர். வட்டிக்கு வட்டியும், வட்டிக்குக் குட்டியும், குட்டிக்கு வட்டியும் என்று மக்களைப் "பனடோல்" போடவைத்து விடுவர். பின்பு கொஞ்சம் கொஞ்சமாக உருக்குலைந்து உள்ள மிகுதியையும் "நோதேண்" இற்குத் தாரை வார்க்கும் வரை அவர்கள் நடவடிக்கைகள் ஓயாது. பின்பு ஓயாத பல அலைகளுக்கு நீச்சலடித்து நீங்கள் மொத்தத்தில் தொலைந்தே போகச் செய்துவிடுவர். அப்பவும் அவர்கள் காட்டிலேதான் மழை பெய்யும். ஏனென்றால் கடன் எடுத்தவர் கடன்பெறுவதற்குப் பொறுப்பாகக்



கொடுத்த பொருள்மாட்டிக் கொள்ளும். அல்லது கடனுக்குப் பொறுப்பு நின்றவர் மாட்டிக்கொள்வார்.

நீங்கள் இயல்பிலே கொஞ்சம் வாயாடியாக இருந்தால், நீங்கள் கடன்பட்ட நிறுவனத்திலுள்ள அலுவலரோடு அல்லது அதிகாரியோடு தர்க்கப்படப் போவீர்கள் என்று வைத்துக்கொள்வோம் அல்லது விவரம் தெரிந்த உங்கள் உறவுகளில் ஒருவரையோ அல்லது நண்பர்களில் ஒருவரையோ கூட்டிக்கொண்டு அந்த நிறுவனத்துக்குப் போய் அங்குள்ளவர்களில் ஒருவரோடு இதுபற்றி விவரம் கேட்கும் பட்சத்தில் அவர் ஒருபைல் - கோவையை - எடுத்துக்கொண்டுவந்து காட்டுவார். அப்போதுதான் உங்களுக்கு அறியாத பலவிடயங்கள் வெளிச்சத்துக்கு வரும். அரிவரிப்பிள்ளையொன்று கண்டபடி கிறுக்கி விளையாடியதுபோல விண்ணப்பப் படிவங்களின் பல இடங்களில் கிறுக்கலாக உங்கள் கையொப்பம் இருக்கும். அப்போதுதான் உங்களுக்குத் தெரியவரும் கடனெடுப்பதற்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது அந்த அலுவலர் உங்களிடம் பல இடங்களில் கையொப்பம் வாங்கியிருப்பது. சுயநினைவின்றியே நீங்கள் கையொப்பமிட்டிருப்பீர்கள். அந்த அலுவலர் கதையிலேயே உங்களை மடக்கியிருப்பார். இதுபற்றி அப்போதுகேள்விகேட்டிருந்தால் "அதெல்லாம் கம்பனி போமாலிற்றி. அதுக்கொண்டும் பயப்படாதேங்கோ. நான் எல்லாத்தையும் பார்க்கிறன்" என்று சொல்லி கண்கட்டி வித்தை காட்டியிருப்பார். ஆனால் பிரச்சினை என்று வந்த பின்னர் "என்ன பாருங்கோ நீங்கள் எல்லா விதிமுறைகளுக்கும் ஓமெண்டுதானே லோன் எடுத்தனியள். இது நாங்கள் போட்ட சைனே? வடிவாப்பாருங்கோ. வாசித்துப் பாருங்கோ. கட்டேலாமைப் போனால் இப்பிடியெல்லாம் வந்து கதைப்பியள் எண்டு தெரிஞ்சுதான் அப்பவே எல்லா போமிலையும் கையெழுத்தை வாங்கிறனாங்கள். இப்ப இதுக்கு என்ன செய்யப்போறியள்? நீங்கள் கட்டாட்டி இனி கறண்டேர்ஸிட்டை தான் அறவிடவேணும்" என்று வெருட்டுவார். வாசித்துப் பார்த்தால் நீங்கள் கடன் பெறுவதற்காக உங்கள் மூன்று சந்ததிகளையும் அந்த நிறுவனத்துக்கு அடைவுவைத்தது தெரியவரும். நீங்கள் கடன் பெற்றுக் கட்டாமல் விட்ட போது தான் நீங்கள் கொடுத்த விண்ணப்பப் படிவத்தில் சில கட்டங்களை அந்த நிறுவனத்தின் சட்டப் பகுதியினர் நிரப்பியிருப்பர். அதுபற்றி அவர்களிடம் நீங்கள் எதுவும் கேட்கமுடியாது. சட்டப்படி நீங்கள் கொடுக்கும் விண்ணப்பப் படிவத்தில் என்னமாற்றம் செய்யவேண்டுமென்றாலும் அதற்கு உங்கள் ஒப்புதல் வேண்டும்.

அதை நீங்கள் தேவைக்கேற்றவாறு முன்கூட்டியே கையொப்பமிட்டு அவர்களுக்குக் கொடுத்திருப்பீர்கள். அத்துடன் " கடனைத் திருப்பிச் செலுத்தாத பட்சத்தில் இந்த நிறுவனம்


(18ஆம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள நகை அடைவுக் கெதிராகப் பணம் கொடுக்கும் ஸ்தாபனங்களில் நாளுக்கு நாள் அடைவு வைக்கக்கூடும் மக்கள் தொகை அதிகரிப்பது எம்மை அதிகளவு சிந்திக்க வைத்திருக்கிறது. நிதி ஸ்தாபனங்களை நோக்கிய இவர்கள் படையெடுப்பு நாளுக்கு நாள் ஏன் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இவர்கள் ஏன் கடன்படுகிறார்கள். இதுபோன்றதொரு நிலைமை ஏன் வருகிறது? அடைவு வைத்தவர்களில் பலர் அதை மீட்பதில்லை என்றும் அறிந்தோம். அவர்கள் நோக்கம் என்ன? போரின் பின்னால் அபிவிருத்தி என்ற போர்வையில் பல நிதி நிறுவனங்களே குடாநாட்டை முதலில் முற்றுகையிட்டன.

கடன் கொடுக்கின்ற இத்தகைய நிறுவனங்களின் பெருக்கம் என்பது ஒரு ஆரோக்கியமாக வளர முற்படுகின்றதொரு சமுதாயத்துக்கான நல்லதொரு அறிகுறியா? என்பது விவாததற்குரியதாகக் காணப்பட்ட காலத்தில், இதையிட்டுப் பல தற்கொலைகள் நடைபெற்றன. பலர் சித்த சுயாதீனமற்றவர்களாகிக் காணப்பட்டனர். பலர் திடீர் ஏழையானார்கள். பலர் ஒளிந்து ஒளிந்தே வாழ்க்கை நடத்தினர். நிதி நிறுவனங்களினால் மக்கள் மிரட்டப்பட்டனர், விரட்டப்பட்டனர். இதுபோன்ற பல சம்பவங்கள் நடைபெறத் தொடங்கியபோதுதான் வட மாகண அரசு விழித்துக் கொண்டது. இது பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வட மாகாண அரசு தரப்பும் பல வழிகளில் முயன்றிருந்தது. இருந்தும் அவர்களெடுத்த நடவடிக்கைகள் போதாது என்று நினைக்கிறேன். கடன்பெறுபவர்கள் என்ற விடயத்தில் சமூக மேம்பாட்டுக் குறியீடானது கீழ் நோக்கியதாகவே இன்னும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K



# விருதுகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

வி.மணிகண்டன்

இப்பொழுதெல்லாம் வாரம் ஒரு விருது அறிவிப்பு வந்து கொண்டே இருக்கிறது. பெரும்பாலான விருதுகளை யாருமே பொருட் படுத்துவதில்லை. 'விருது கொடுக்குறியா? நீ யாருக்குக் கொடுப்பேன்னு தெரியும்... கொடுத் துட்டு போ' என்கிற மனநிலை தான் நிலவுகிறது. வெகுஜன சமூகத்தின் இத்தகைய மனப்போக்கு விருது வழங்குகிறவர்களுக்கு பதற்றத்தை உண்டாக்கிவிடுகிறது. அதுவும் விருது கொடுப்பவர்கள் இலக்கியக் காவலர்களாகவும் விளம்பர மோகம் கொண்டவர்களாகவும் இருந் தால் கேட்கவே வேண்டிய தில்லை. புலி வருது கதையாக ஏதாவது முயற்சித்துக் கொண்டேயிருக்கிறார்கள். எப்படியா வது சர்ச்சையை உண்டாக்கி கவனத்தை தம் மீது குவியச் செய்துவிடுவதிலும் குறியாக இருக்கிறார்கள்.

இந்த வருடம் சுஜாதா விருது அறிவிப்பை ஒட்டி நடக்கும் சர்ச்சைகளை அப்படித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதைப் பேசி இதைப் பேசி கடைசியில் தமக்கான கவன வெளியை உண்டாக்குவதற்காக சுஜாதாவை இழுத்துத் தெருவில் விட்டி ருக்கிறார்கள். 'சுஜாதா சாதியே பார்க்கவில்லை' என்று ஒரு தரப்பு ஊதிப் பெருக்க 'அவர் ஒரு சாதி வெறியன்' என்று இன்னொரு குழு கிளம்ப கடைசியில் எல்லோருமாகச் சேர்ந்து அந்த மனிதனை அம்மணமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பாவம் அந்த ஒல்லிப்பிச்சான் வாத்தியார். தமது பெயரில் விருது வழங்கச் சொல்லி அவர் கேட்டாரா என்ன?

ஒரு விருது வழங்கப்படும் போது, விருது யாருடைய பெயரால் வழங்கப்படுகிறதோ அவரையே அசிங்கப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கித் தருவதற்கு என்ன பெயர்? அவரது படைப்புக்களை விட்டுவிட்டு தனிமனித வசைகளை முன்வைப்பதற்காக களம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு தமக்கான விளம்பரத்தைத் தேடிக் கொண்டு குளிர்காய்வதுதானே பச்சைவாதம்? உலக இலக்கியம் வாசிக்கிறோம் என்கிறார்கள். புத்தகங்களைக் கரைத்துக் குடிக்கிறோம் என்கிறார்கள். பொதுவெளியில் விவாதிக்கிறோம் என்று மார் தட்டுகிறார்கள். இந்த அடிப்படை கூடத் தெரியாதா என்ன? இவ்வளவுதான் பக்குவம்.

கடங்கநேரியான் என்பவர் சிறுபத்திரிகை மனநிலை கொண்டவர். தமக்கு ஒவ்வாததை எந்தத் தயக்கமுமில்லாமல் அப்பட்டமாக வெளிப்படுத்துகிற மனநிலை அது. விடாமல் கலாய்த்துக் கொண்டிருப்பார். அவரை மனுஷ்ய புத்திரன் இணையப் பொறுக்கி என்று எழுதுகிறார். தமக்கு ஒவ்வாத கருத்தைச் சொல்கிறவர்களை பொறுக்கி என்று விளிப்பது எந்தவிதத்தில் நியாயம்? ஒரு விருது வழங்கப்படும் போது ஆளாளுக்கு எதையாவது சொல்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைக்கூட புரிந்து கொள்ள முடியாதா?

தமக்குக் கீழாக வாலைச் சுழற்றிக் கொண்டேயிருப்பவர்களை ஊக்குவிப்பது அவரவர் விருப்பம் சார்ந்தது. வாலைச் சுழற்று கிறவர்களின் சுயமரியாதை சார்ந்தது. அதுபற்றி நாம் எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால் தம்மை விமர்சிப்பவர்களைப் பொறுக்கி என்று எழுதுவதற்கான உரிமையை யார் கொடுத்தார்கள்? இனி கடங்கநேரியான் விடமாட்டார். சிலம்பம் ஆடுவார். அதைத்தான் மனுஷ்ய புத்திரன் எதிர்பார்க்கிறார். எதிர்மறையான பிரபலத்துவமடைவது இப்படித்தான்.



கடந்த பல ஆண்டுகளாக சுப்பிரமணியசாமி செய்வதும் இதைத்தான். திடீரென்று சம்பந்தமேயில்லாமல் சட்டையைப் பிடித்து இழுத்து ஒரு குத்துவிடுவது. குத்து வாங்கியவன் கூட்டம் சேர்த்துவிடுவான். 'நீ என்ன வேண்டுமானாலும் பேசிக்கோ.. ஆனா என்னைப் பற்றி பேசு' என்று சுயகுவியம் சார்ந்து அலைகிறவர்களுக்கு சமூக ஊடகங்கள் நன்றாகத் தீனி போட்டு வளர்க்கின்றன. அதை இவர்களும் நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

கிளப்பிவிடப்பட்ட உரையாடல் திசை மாறுவது பற்றியும், தனிமனிதத் தாக்குதலாக உருக்கொள்வது குறித்தும் யாருக்கும் எந்தக் கவலையுமில்லை. 'என்னைப் பார்' 'என்னைப் பார்' என்று அடித்து ஆடிக் கொண்டேயிருப்பார்கள். வேறொரு பிரச்சினை கிடைத்தால் அப்படியே தொட்டுவிட்டு அங்கே போய் நின்று கொள்வார்கள்.

இலக்கிய விவாதம் என்ற பெயரில் படைப்புக்களை முன் வைத்து உண்டாக்கப்படும் வாதங்களும், பிரதி வாதங்களும் அர்த்தமுள்ளவை. ஆரோக்கியமானவை. உரையாடல்களின் வழியாக பார்வையாளர்களுக்கு வேறொரு புரிதல் உண்டாகும். உரையாடலில் பங்கேற்பவர்களும் இன்னொரு கட்டத்துக்கு நகர்வதற்கான வாய்ப்பிருக்கிறது. அத்தகைய ஆரோக்கியமான உரையாடல்கள்தான் இலக்கியத்துக்கு ஏதாவதொரு வகையில் பங்களிப்பைச் செய்யக்கூடியவை. இப்போதைய சச்சரவில் எங்கேயாவது விருது பெற்ற ஏதேனுமொரு படைப்பு பற்றி எழுதப்பட்டிருக்கிறதா? துழாவிப் பார்த்தால் 'ஏய்...ங்கோ...நான் யார் தெரியுமா?' என்கிற ரீதியில்தான் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். வெற்றுப் பெருங்காய டப்பாவை உருட்டிவிட்டு அதன் மீது 'இலக்கிய சர்ச்சை' என்று லேபிள் வேறு குத்துகிறார்கள். கண்றாவி.

எதைப் பற்றியும் கண்டுகொள்ளாமல் நகர்ந்துவிட வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். எதையாவது சொல்லப் போக நம்மையும் திட்டுவார்கள். அதற்கு பதில் சொல்வதற்கு மெனக்கெட வேண்டும். சுஜாதா எனக்கு ஆதர்சம். என்னைப்போன்ற பலருக்கும் அவர்தான் ஆதர்சம். அவர் பெயரில் விருது வழங்கினாலும் வழங்காவிட்டாலும் அவரது புகழ் வெளிச்சம் அப்படியேதான் இருக்கும். எங்கேயாவது ஒரு வாசகனை சப்தமில்லாமல் வாசிப்பு நோக்கி இழுத்துக் கொண்டேதான் இருப்பார். இப்படியெல்லாம் அவரை அவமானப்படுத்தி முச்சந்தியில் நிறுத்துவதற்குப் பதிலாக அவர் பெயரில் விருது வழங்குவதையே நிறுத்திவிடலாம்.

இதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
திடசங்கற்பம். வேலையாட்கள் சகாயம். புதிய உறவு

**ரிஷபம்**
மன மாற்றம். பிணக்கு. தொழில் விருத்தி அச்சம்.

**மிதுனம்**
காரியக்கேடு. புத்திரர் கல்வி விருத்தி. மனைமாட்சி

**கடகம்**
கோயில் தரிசனம். வேலையாட்கள் சகாயம். தர்மம்.

**சிம்மம்**
ஆலய தரிசனம் மனித நேயம் மக்கட்பேறு. பலம்

**கன்னி**
சுகச் செலவு. பொருள் வரவு. மனச்சஞ்சலம். தயக்கம்

**துலாம்**
தர்ம சிந்தனை. உறவு விருத்தி பொருள் நஷ்டம்.

**விருச்சிகம்**
தெய்வ சிந்தனை. கனவு பலிதம். காரியக்கேடு. தொண்டு.

**தனுசு**
வீண் செலவு. மனை மாட்சி கல்வி மேன்மை. பயம்

**மகரம்**
தார சுகக் குறைவு. அதிக செலவு. வீண் அலைச்சல்

**கும்பம்**
சோர பயம். மனைவிருத்தி. தயக்க நிலை. தாகம்.

**மீனம்**
பொருள் வரவு. சுகச்செலவு. சமநிலை. தார சுகம்.



07.05.2017 தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 'மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருக்கும் மயானங்கள்' என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நிகழ்வின் காட்சிகள்.

## புதுவிதியின் அஞ்சலிகள்





இலங்கை வானொலியில் செய்தி வாசிப்பில் சகாப்தம் படைத்த செல்வி சற்சொரூபவதி நாதன் 2017.05.04 அன்று காலமானார். இலங்கையின் மூத்த அறிவிப்பாளரான இவர், உண்டா சர்வதேச விருதை வென்ற முதலாவது பெண் அறிப்பாளர். வானொலி கலைஞராக பணியாற்றிய அவர் தமிழ் இலக்கியத் துறை உட்பட பல்வேறு துறைகளுக்கும் பங்களிப்புக்களை வழங்கி பல்துறை அறிஞராகத் திகழ்ந்தார். அவருக்கு புதுவிதியின் ஆழ்ந்த அஞ்சலிகள்.

கடந்த 07.05.2017 அன்று மறுமலர்ச்சி மன்றத்தினரால் வவுனியா, மற்றும் மன்னாரில் Spelling Bee Sri Lanka - 2017 போட்டி நிகழ்வின் காட்சி.














திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் "வர்ணச் சாரல்கள்" என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சி யாழ். நகர் பிரதான வீதி - டேவிட் வீதியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் 6,7ஆம் திகதிகளில் இடம்பெற்றது.





06.05.2017 மாலை யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்[illegible] க என அழைக்கப்படும் திருநாவுக்கரசு சிறிதரனின் 'மனிதாபிமானம் கொண்ட புதிய தலைமுறையினருக்காக...' என்ற நூல் வெளியீட்டின்போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றாதே ஏமாறாதே...!

நீண்ட காலத்துக்கு முன்னர், அனான்சி என்ற பேராசைக்கார சிலந்தி ஒன்று வாழ்ந்தது. அது தன்னுடைய பொருள்கள் எதையும் மற்றவர்களுடன் எப்போதுமே பகிர்ந்துகொள்ளாது. 'பகிர்ந்துண்டு வாழ்வாரே வாழ்வர்' என்பதை அது புரிந்துகொள்ளவில்லை. ஒரு நாள், அது தனது தோட்டத்தில் விளைந்த சுவையான சேனைக் கிழங்குகளைச் சமைத்துக் கொண்டிருந்தது. சேனைக்கிழங்கின் வாசனை அதன் மூக்கைத் துளைத்து மேலும் பசியை உண்டு பண்ணியது. ஆனால், எப்படியோ மதிய உணவுவேளை வரும்வரை பொறுமையுடன் காத்திருந்தது.

சேனைக் கிழங்குகளைச் சாப்பிடத் தயாராக இருக்கும்போது, யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அனான்சிக்கு ஒரே கோபமாக வந்தது. அதே கோபத்துடன் வேகமாக வந்து கதவைத் திறந்தது. பார்த்தால், கோசோ என்ற ஆமை அங்கே நின்று கொண்டிருந்தது. அது நீண்ட தூரம் பயணித்து வந்த களைப்பிலும் பசியிலும் இருந்தது.

"வணக்கம் அனான்சி, நீ என்ன சமைத்துக் கொண்டிருக்கிறாய்? ஏதோ நல்ல வாசனை வருகிறது" என்றது கோசோ.

"மதிய உணவுக்காக சேனைக் கிழங்குகள் சமைத்திருக்கிறேன்" என்று தயக்கத்துடன் சொன்னது அனான்சி.

"ஓ, அப்படியா? நீண்ட பயணம் முடித்து திரும்பியிருப்பதால் களைப்புடனும் பசியுடனும் இருக்கிறேன். இன்று உன்னுடன் நான் சாப்பிடலாமா?" என்று கேட்டது கோசோ.

அனான்சிக்கு கோசோவுடன் உணவைப் பகிர்ந்து கொள்வதில் சற்றும் விருப்பமில்லை. ஆனால், உணவு நேரத்தில் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுடன் உணவைப் பகிர்ந்து கொள்வது என்பது அந்த நாட்டின் வழக்கம். அதனால், அனான்சியால் மறுக்க முடியவில்லை. ஆனால், எப்படியிருந்தாலும் கோசோவுடன் சேனைக் கிழங்குகளைப் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்ற முடிவுடன் இருந்தது.

"அதற்கென்ன தாராளமாக, உள்ளே வா! இந்த இருக்கையில் உட்கார்! நான் உனக்கு சாப்பிட எடுத்து வருகிறேன்" என்று அனான்சி கோசோவிடம் சொன்னது.

இருவரும் சாப்பிடத் தயாரானார்கள். அப்போது, திடீரென்று அனான்சி கோசோவை சாப்பிட விடாமல் தடுத்தது.

"சாப்பிடுவதற்கு முன்னர் கைகளைக் கழுவ வேண்டுமென்பது உனக்குத் தெரியாதா? போய், உன் கைகளைச் சுத்தமாகக் கழுவிக்கொண்டு வா!" என்றது அனான்சி.

கோசோ தன்னுடைய கைகளைப் பார்த்தது. பயணத்திலிருந்து அப்படியே சாப்பிட வந்ததால் அவை மிகவும் அழுக்காக இருந்தன. அருகிலிருக்கும் ஆற்றுக்குச் சென்று கைகளைக் கழுவிகொண்டு வந்தது கோசோ.

அதற்குள் அனான்சி சாப்பிடத் தொடங்கியிருந்தது. "சேனைக் கிழங்குகள் ஆறிக்கொண்டிருந்தன. அதனால் சாப்பிடத் தொடங்கிவிட்டேன். நீயும் என்னுடன் சாப்பிடத் தொடங்கு!" என்றது அனான்சி.

ஆனால், மறுபடியும் அதே காரணத்தைச் சொல்லி கோசோவை சாப்பிடவிடாமல் திருப்பி அனுப்பியது அனான்சி. பாவம் கோசோ! அது தன்னுடைய கைகளைப் பார்த்தால் மீண்டும் அவை அழுக்காகியிருந்தன. ஆற்றிலிருந்து



வீட்டுக்குவரும் வழியில் மீண்டும் அதனுடைய கைகள் அழுக்காகியிருந்தன.

கோசோ மிகவும் சோர்வடைந்துவிட்டது. ஆனாலும் மறுபடி ஆற்றுக்குச் சென்று தன் கைகளைக் கழுவிகொண்டு வந்தது. இந்த தடவை கைகள் அழுக்காகிவிடக் கூடாது என்பதற்காக கவனமாகப் புற்களின்மீது நடந்துவந்தது. ஆனால், இந்த முறை அது திரும்பிவருவதற்குள் அனான்சி கிட்டத்தட்ட எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்திருந்தது. ஒரேயொரு சேனைக்கிழங்கு துண்டு மட்டும்தான் கோசோவுக்குக் கிடைத்தது.

கோசோ கோபத்தோடு அவமானத்தோடும் கிளம்பத் தயாரானது. "உன்னுடைய சுவையான உணவுக்கு நன்றி! ஒருநாள் நீயும் என் வீட்டுக்கு சாப்பிட வர வேண்டும்" என்று கூறிவிட்டு கோசோ புறப்பட்டுச் சென்றது.

சில நாள்கள் கழித்து, அனான்சிக்கு கோசோவின் அழைப்பு நினைவுக்கு வந்தது. கோசோவின் வீட்டுக்குச் சென்று அறுசுவை உணவு சாப்பிட முடிவுசெய்தது. ஏனென்றால், கோசோவின் சமையல் கைப்பக்குவத்தைப் பற்றி அதற்குத் தெரியும்.

அடுத்த நாள், ஆற்றங்கரைக்கு அனான்சி சென்றது. அனான்சியைப் பார்த்த கோசோ, "வணக்கம் அனான்சி, என் அழைப்பை ஏற்று சாப்பிட வந்ததுக்கு நன்றி. வா, சாப்பிடலாம்!" என்றது. ஆற்றுக்கு அடியில் இருக்கும் தன் வீட்டுக்கு அனான்சியை அழைத்தது.

கோசோவின் சமையலின் கைப்பக்குவத்தை ருசிப்பதற்காக உடனடியாக ஆற்றில் குதித்தது. ஆனால், ஐயோ பாவம்! அனான்சியால் ஆற்றுக்குள்ளே நீந்திச் செல்ல முடியவில்லை. அதனால் நீரின் மேலே மிதக்க மட்டுமே முடிந்தது. இதற்குள் வீட்டுக்குச் சென்ற கோசோ, உணவைத் தயாராக எடுத்துவைத்தது.

அனான்சி நீருக்குள் நீந்திச் செல்ல எவ்வளவோ முயற்சிசெய்து பார்த்து. ஆனால், அதனால் முடியவில்லை. அனான்சிக்கு திடீரென்று ஒரு யோசனை வந்தது. அது தன்னுடைய 'கோட்' பொக்கெற்றில் கற்களை எடுத்து போட்டுக்கொண்டது. அனான்சியின் எடை கூடியதால் எளிதாக நீந்திச் சென்று கோசாவின் வீட்டை அடைந்தது.

அனான்சி கோசோ சாப்பாட்டு மேசையில் எடுத்துவைத்திருந்த சுவையான உணவைப் பார்த்தது. அது அவசர அவசரமாக சாப்பிடத் தயாரானது. "அனான்சி, சாப்பிடும்போது நாம் 'கோட்' அணிந்துகொண்டு சாப்பிடமாட்டோம். அது நம்முடைய வழக்கத்தில் கிடையாது. அதனால், 'கோட்'டைக் கழட்டிவைத்துவிட்டுச் சாப்பிட வா!" என்றது. அனான்சி கற்களைப் போட்டுவைத்திருந்த 'கோட்'டைக் கழட்டியது. உடனே, ஆற்றின் மேலே மிதக்கத் தொடங்கியது.

அந்தச் சுவையான உணவை கோசோ ரசித்து சாப்பிடுவதை மேலேயிருந்து பார்த்தது அனான்சி. பின்னர் தான் முன்னர் செய்த தவறை வருந்தியபடி சோகத்துடன் கரையேறியது.

# ஹாய் குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# எப்படி வந்தது தொப்பி?

கொளுத்தும் வெயிலுக்கு வெளியில் செல்ல அஞ்சாதவர்கள் எவருமில்லை. வெளியே சென்றே ஆக வேண்டும் என்ற நிலையில் செல்பவர்கள் தலையில் கட்டாயம் தொப்பி அணிந்திருப்பதை நாம் பார்த்திருப்போம்.




இதெல்லாம் சரி எப்படி இந்தத் தொப்பி வந்தது தெரியுமா?

ஆதி மனிதன் வெயில், பனி, மழையில் இருந்து காத்துக்கொள்ள தலையிலிருந்து கழுத்து வரை அகன்ற இலைகளையும் சிறு கிளைகளையும் கட்டிக் கொண்டான். பின்னர் விலங்குத் தோல்களைக் கொண்டு தொப்பி தயாரித்து அணிந்தான்.

கிரேக்கம், எகிப்து நாடுகளின் மக்கள் கம்பளித் துணிகளால் தொப்பிகளைத் தயாரித்துப் பயன்படுத்தினர். 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பருத்தி, பட்டு துணிகளாலான தொப்பிகள் தயாரிக்கப்பட்டன.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் அலங்காரம் மிக்க தொப்பிகள் உருவாகின. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் மேற்கு ஆசியர்கள் விளிம்பு இல்லாத சிவப்பு நிறத் தொப்பிகளை அணிந்தனர். அரேபியர்கள் தாங்கள் அணியும் தொப்பிகளில் விலையுயர்ந்த ஆபரணங்களைப் பதித்தனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் பனை ஓலையால் செய்யப்பட்ட தொப்பிகளை அணிந்தார்கள். இப்போதும் இந்தத் தொப்பிகள் பாவனையில் உள்ளன.

# 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



# தகவல்கள் அறிவோம்



மான்கள் நின்றும், படுத்தும் தூங்கக் கூடியவை. சில வகை மான்கள் தூங்கும்போதே ஆபத்தை ஏற்படுத்தும் விலங்குகள் வருவதை சுவாசத்தின் மூலம் அறிந்து கொள்ளக்கூடியவை.

பாம்புகள் உடலை வளையம் போன்று சுருட்டிக் கொண்டு அதன் மீது தலையை வைத்துத் தூங்கும். பாம்புகளுக்கு இமைகள் இல்லை என்பதால் கண்கள் திறந்தவாறே இருக்கும்.





வாத்துக்கள் தரையில் நின்றவாறும், நீரில் நீந்திக் கொண்டும் தூங்கக்கூடியன. அரிதாக தரையில் படுத்தவாறு தூங்கும்.

பூச்சி வகைகளில் எறும்புகள் விசித்திரமாகத் தூங்கும் பழக்கம் கொண்டவை. மண்ணில் மணல் மெத்தைகள் உருவாக்கி மல்லாந்த நிலையில் தூங்குவன. அதுமட்டுமன்றி 3 மணி நேரமே நித்திரை கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உன்னை நீயே அறிவாய்

ஒரு தொழிலைத் தொடங்கி, அதை வெற்றிகரமாக நடத்திப் பரம்பரை பரம்பரையாகத் தழைக்க என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதைத் தொடர்ந்து பேசி வருகிறோம். ஏற்கெனவே சொன்னதுபோல, தொழில் என்பது ஏதோ போகிற போக்கில் பெட்டிக்கடை வைப்பது மாதிரி அல்ல. 'Doing Business is an Art.' அந்தக் கலையை எப்படிக் கற்பது என்பதை இனி பார்க்கலாம்.

ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு செயல்முறை வடிவம் இருக்கிறது. எல்லாத் தொழிலுக்கும் ஒரே மாதிரியான செயல்முறையைப் பயன்படுத்த முடியாது. தொழில் வகை, அதன் அளவு, இலக்குகள் போன்றவற்றைப் பொறுத்துதான் நமக்கான செயல்முறை வடிவத்தை நாம் திட்டமிடவேண்டும். அதன்படி ஒரு தொழிலைச் செய்யும்போது வெற்றி என்பது நிச்சயம் சாத்தியம் என்பதில் சந்தேகமே இல்லை.

எம் தொழில் தொடர்பான செயல் முறையைத் திட்டமிடுவதில்தான் நாம் அதிக நேரத்தைச் செலவிடவேண்டும். ஒவ்வொரு தொழிலிலும் நாம் வகுத்திருக்கும் திட்டங்கள், எம்முடைய கொள்கைகள், இலக்குகள், வாடிக்கையாளருடனான தொடர்பு ஆகிய விடயங்களை அடிப்படையாக வைத்தே எம் தொழில் செயல்முறை வடிவத்தை நாம் திட்டமிட முடியும்.

அதாவது, நம் தொழில் உற்பத்தியா, சேவையா, உள்நாட்டில் தொழில் செய்யப் போகிறோமா அல்லது ஏற்றுமதி செய்யப் போகிறோமா, யார் யாருக்கு என்ன வேலை, யார் யாரிடம் பதில் சொல்ல வேண்டும் என்பது போன்ற அனைத்தையும் திட்டமிட்டுக் கட்டமைப்பதே தொழில் செயல்முறை வடிவம்.

இந்த செயல்முறை வடிவத்தில் பிரதானமாக இருப்பது மூன்று விடயங்கள் - ஒன்று, மனிதர்கள். இரண்டாவது பொருள்கள். மூன்றாவது பணம். இந்த மூன்றையும் சுற்றித்தான் தொழிலின் வேலையின் ஓட்டம் (WorkFlow) இருக்கும். அவற்றை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும்தான் தொழில் செயல்முறை வடிவத்தின் முக்கியமான அம்சம். இனி ஒவ்வொன்றைப் பற்றியும் தனித் தனியாகப் பார்க்கலாம்.

**குடும்பத்தை உருவாக்குங்கள்**

ஒரு தொழிலின் செயன்முறை வடிவத்தில் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொருவரும் அவர்களுக்கான பணிகளையும், அவர்கள் யார் யாருடன், எவற்றுடன் தொடர்பில் இருக்கவேண்டும் என்பதையும், யாரிடம் அவர்கள் அறிக்கையிட வேண்டும், யாரிடமிருந்து பணிகளுக்கான உத்தரவுகளைப் பெறவேண்டும் என்பது உள்ளிட்ட பல விடயங்களையும் தெளிவுபடுத்திக் கொண்ட பிறகே அதனைச் செயற்படுத்தவேண்டும். இது நிறுவனத்தின் முதலாளி முதல் வாடிக்கையாளர் வரை அனைத்துத் தரப்பு மனிதர்களையும் உள்ளடக்கியது.

இவர்கள் அனைவருமே ஒரே குடும்பமாக இருக்கும் வகையில்தான் எம்முடைய செயன்முறை வடிவமும், அதற்கான கொள்கைகளும் வகுக்கப்பட வேண்டும். அதாவது, ஒரு குடும்பத்தில் ஆயிரம் பிரச்சினைகள், நெருக்கடிகள், இன்ப, துன்பங்கள் வந்தாலும், எல்லாவற்றையும் தாண்டி ஒரே குடும்பமாக இருக்கும் கலாசாரம் ஒரு தொழிலில் இருக்கவேண்டும்.

மனிதர்களைக் கையாள்வதற்காகவே படித்து நிபுணத்துவம் பெற்ற ஒரு மனிதவளத்துறை நிபுணரின் தலைமையில், ஒரு குழுவை அமைத்து ஒரு தொழிலின் அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் வேலையைச் செய்யவேண்டும்.

பணியிலிருக்கும் ஒருவர், தனது செயற்பாடுகளைத் தெளிவாகப் புரிந்துவைத்திருந்தாலே அவருடைய பணியைச் சரியாகச் செய்துமுடிப்பதில் எந்தப் பிரச்சினையுமே வராது. அதை மிகவும் கவனத்தோடு செய்யவேண்டும். அவரவர் திறமை மற்றும் செயற்திறனுக்கேற்ப வேலைகள் ஒதுக்கப்பட வேண்டும். அவர்களுடைய மனநிலைக்கேற்ப அவர்களை வழிநடத்தவேண்டும்.

மாறாக, ஒருவரை வேலைக்கு நியமித்துவிட்டு, என்ன வேலை, யாரிடம் ஆலோசனை கேட்பது, யாரிடம் வேலையை முடித்துக் காட்டுவது போன்ற எதையுமே சொல்லாமல் விட்டுவிட்டால், அவரால் நம்முடைய தொழிலுக்கு எந்த முன்னேற்றமும் இருக்காது. அவரும் விரைவில் அந்த வேலையிலிருந்து வெளியேறிவிடுவார். அவர் வேலையை விட்டுப்போனால் என்ன? வேலைக்கு ஆள்களா இல்லை என முடிவெடுப்பது மிகவும் தவறான போக்கு. தெரிவு செய்யப்பட்ட ஒருவரின் இழப்பு நம்முடைய நேரத்தையும் உழைப்பையும் சேர்த்தே எடுத்துச் சென்றுவிடுகிறது என்பதை மறந்துவிட வேண்டாம்.

எந்த வேலையை எப்போது செய்யத் தொடங்கவேண்டும், எப்போது முடிக்கவேண்டும் என்பது தெளிவாக இருக்க வேண்டும். வேலையின் ஓட்டத்தில் முடிக்கப்பட வேண்டிய வேலைகளை அட்டவணைப்படுத்த வேண்டும். அதில் முதலில் செய்யவேண்டிய பணிகளை முதன்மையாக வைத்துக்கொண்டு, பின்னர் மற்ற வேலைகளைத் திட்டமிடலாம்.

**பொருள்களின் நகர்வு**

தொழிலுடன் தொடர்புடைய பொருள்களின் நகர்வு, மிகச் சரியாக இருக்க வேண்டும். கொள்முதல் செய்வது தொடக்கம் உற்பத்தி, விற்பனை, விநியோகம், மீள்வது வரை அத்தனை நிலைகளிலும் பொருள்களைக் கையாள்வது என்பது நன்கு திட்டமிடப்பட்ட செயற்பாடாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நிலையிலும் பொருள்களைக் கையாள்வதற்கு சரியான நபர் நியமிக்கப்பட வேண்டும். அதே சமயம், பொருள்களின் நகர்வுகள் என்பது ஒவ்வொரு நிலையிலும் பதிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில், அப்போதுதான் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ளவும், இழப்புக்களைக் குறைக்கவும், அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் திட்டமிடவும் முடியும்.

**பாதாளம் வரை பாயும் பணம்**


ஒரு தொழிலுக்கு மிக முக்கியமான தேவை பணம். தொழிலில் விற்றமின் என்பதை [illegible] சுருக்கமாகச் சொல்லப்படுகிற பணம்தான். இதன் நகர்வு என்பது சரியாக இல்லாவிட்டால், மிகப் பெரும் நஷ்டத்தை அடைய வேண்டி வந்துவிடும்.

இந்தப் பணம் நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்றால் அதன் நகர்வைக் கண்காணித்துக் கொண்டே இருக்கவேண்டும். பணத்தைக் கையாள்பவரை முடிவு செய்வதிலிருந்து, பணம் எங்கெல்லாம், எதற்கெல்லாம் போகிறது என்பது வரை அனைத்தும் திட்டமிடப்பட வேண்டும். பணம் பாதாளம் வரை பாயும் என்பார்கள். ஆனால், பாதாளம் வரை பாயாமல் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

தொழில் செயன்முறை வடிவத்தில் செய்ய வேண்டிய முக்கியமான விடயங்கள்:

1. செயற்பாடுகளைத் திட்டமிடல்
2. செயலை ஒருங்கிணைத்தல்
3. விவரங்களைச் சேகரித்தல்
4. விவரங்களை ஆராய்தல்
5. பிரச்சினையைக் கண்டறிதல்
6. அடுத்தகட்ட நடவடிக்கையைத் திட்டமிடல்
7. தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவைதான்.

**தொழில் செயல்முறைத் திட்டம்**




(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர் சி "சங்கமித்ரா" என்ற சரித்திரப் படத்தை இயக்கி வருகிறார். பெரும் பட்ஜெட்டில் உருவாகும் இந்தப் படத்தில் ஸ்ருதி ஹாசன் வீரமிக்க இளவரசி வேடத்தில் நடிக்கிறார்.

அவரின் வாள்வீச்சுப் பாய்ச்சலைப் பார்த்தால் ரசிகர்கள் மிரண்டு விடுவர் எனக்கூறியுள்ளது படக்குழு. இந்தப் படத்துக்காகவே ஸ்ருதி லண்டனில் வாள்வீச்சுப் பயிற்சி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



நடிகர் கமல்ஹாசனின் மகள்களான ஸ்ருதி ஹாசன், அக்ஷரா ஹாசன் திரையுலகில் தமக்கெனத் தனியான இடத்தைப் பிடித்துள்ளனர்.

ஸ்ருதி ஹாசன் எப்போது நடிக்க வந்தாரோ அப்போதிருந்தே பிரபலங்கள் பலருடன் கிசுக்கப்பட்டார். பலருடனான அவரின் உறவு தோல்வியிலேயே முடிந்தது என்று கூறப்பட்ட நிலையில், அவர் ஓர் ஆங்கில இதழுக்கு அளித்த நேர்காணலில் பின்வருமாறு குறிப்பிட்ட விடயம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

"எந்த ஒரு நபரும் என் தனிப்பட்ட சுதந்திரத்திலும், நான் எடுக்கும் முடிவுகளிலும் தலையிடக்கூடாது. எனது வேலைக்கு குறுக்கீடாக யார் வந்தாலும் அவர்களை என் வாழ்விலிருந்து தள்ளியே வைப்பேன்" என்று கூறியிருக்கிறார் ஸ்ருதி.



விஜய், ...
நாயகர்களு...
சுரேஷ், இப்...
சேரவுள்ளா...

விக்ரம் -...
வெளியாகி...
படம் சாமி....
படத்தின் இ...
இயக்குநர் ஓ...
இதிலும் வி...
ஜோடியாக...
நடிக்கவுள்ள...

ஆனால்...
முக்கிய பாத்...
சுரேஷ் நடிக்...



கார்த்திக் ந...
"நரகாசுரன்" பட...
இயக்கவுள்ளார்...
முக்கியமான பா...
அரவிந்தசாமி ந...
இந்தப் படத்தில்...
நடிக்கவுள்ளார்.

இதுவரை ந...
நடித்து வந்த ஸ்...
இந்தப் படத்தில்...
நடிக்கவுள்ளார...
கதையைக் கேட்...
சம்மதித்து விட்...


ராகவா லாரன்ஸ் அடுத்து நடிக்கவிருக்கும் படத்துக்கு பாகுபலி படத்தின் கதையை எழுதிய விஜயேந்திர பிரசாத் எழுதவுள்ளார்.

இந்தப் படத்தை ராஜமௌலியின் உதவியாளர் மகாதேவ் இயக்கவுள்ளார். அத்துடன் நாயகியாக விஜய் 61, விவேகம் படங்களின் நாயகியான காஜல் அகர்வாலை நடிக்க வைக்கப் பேச்சு நடத்தப்படுகிறது.

இப்போதெல்லாம் வித்தியாசமான தலைப்புக்களை படங்களுக்கு பெயராக வைப்பது வழக்கமாகி விட்டது. இந்நிலையில் சஞ்சிதா ஷெட்டி நடிக்கும் படத்துக்கு "ஏன்டா தலைல எண்ணெய் வைக்கல" என்று பெயரிட்டுள்ளார்கள்.

இந்தப் படத்தில் கதாநாயகன் தலைக்கு எண்ணெய் வைக்காததால் ஒரு பிரச்சினையில் மாட்டிக் கொள்கிறார். அந்தப் பிரச்சினை என்ன?, அதிலிருந்து எப்படி தப்பிக்கிறார்? என்பதுதானாம் கதை. நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் படம் தயாராகி வருகிறதாம்.





ரெஜினா கசாண்ட்ரா உதயநிதி ஸ்ராலினுடன் "சரவணன் இருக்கப் பயமேன்" படத்தில் நடித்து வருகிறார். இதன் இசை மற்றும் ட்ரெய்லர் வெளியிடப்பட்டுள்ளது.

படத்தில் "எம்புட்டு இருக்கு ஆசை..." பாடலில் ரெஜினா ரொம்பவே கவர்ச்சி காட்டி நடித்திருக்கிறாராம். கடற்கரையில் பாடல் காட்சி எடுக்கப்பட்ட போது கேரவன்கூட இல்லை. இதனால் ஏராளமானவர்கள் ரெஜினாவின் கவர்ச்சி ஆட்டத்தைப் பார்க்க கூடிவிட்டார்களாம்.

ரெஜினா தமிழில் பல படங்களில் நடித்திருந்த போதும் இப்போதுதான் கவர்ச்சியாக நடிக்கிறார். ஏற்கனவே தெலுங்கில் மிகமிகக் கவர்ச்சி காட்டி நடித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஜித்தின் நடிப்பில் சிவாவின் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வருகிறது விவேகம் படம். இந்தப் படத்தின் முதல் பார்வை (பெர்ஸ்ட் லுக்) கடந்த பெப்ரவரி 02 ஆம் திகதி வெளியானது.

இந்நிலையில் அஜித்தின் பிறந்தநாளான கடந்த முதலாம் திகதி படத்தின் டீசர் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. பல்கேரியாவில் தொடர்ந்து படப்பிடிப்பு இடம்பெறுவதால் டீசர் வெளியாகவில்லை.

இந்நிலையில் வரும் 18 ஆம் திகதி நள்ளிரவு 12.01 மணிக்கு விவேகம் படத்தின் டீசர் வெளியாகும் என இயக்குநர் சிவா அறிவித்துள்ளார்.




நீண்ட இழுபறிக்குப் பின் விஸ்வரூபம் 2 படத்தின் முதல் பார்வை வெளியிடப்பட்டது. கமல்ஹாசன் தனது ருவிற்றர் பக்கத்தில் போஸ்ரரை வெளியிட்டார்.

விஸ்வரூபம் படம் வெளியானதும் விஸ்வரூபம் 2 படத்தின் உரிமையை ஒஸ்கார் ரவிச்சந்திரன் வாங்கினார். படத்தின் பணி தாமதமானதால், கமல் பட உரிமையை திரும்பப் பெற்றார்.

இந்நிலையில் விஸ்வரூபம் 2 படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்பு சென்னையில் உள்ள இராணுவ முகாமில் இடம்பெறவுள்ளது. இதனால் படத்தின் பிற வேலைகளில் படக்குழு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

நடிகை பாவனாவுக்கும் கன்னட தயாரிப்பாளர் நவீனுக்கும் திருமண நிச்சயதார்த்தம் அண்மையில் நடந்தது. இருவருக்கும் விரைவில் திருமணம் இடம்பெறவுள்ளது.

திருமணம் பற்றிக் கருத்து வெளியிட்ட பாவனா தனது சொந்த ஊரான கேரளாவின் திருச்சூரில் மிக எளிமையான முறையில் திருமணம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.




ஜய், சூர்யா என முன்னணி களுடன் கைகோத்த கீர்த்தி , இப்போது விக்ரமுடன் ள்ளார்.

ரம் - த்ரிஷா நடிப்பில் பாகி பெரும் வெற்றி பெற்ற சாமி. இப்போது இந்தப் ின் இரண்டாம் பாகத்தை நர் ஹரி இயக்கவுள்ளார். ம் விக்ரமுக்கு யாக த்ரிஷாவே வுள்ளார்.

னால் அவரையும் விட பாத்திரத்தில் கீர்த்தி நடிக்கவுள்ளார்.

க் நரேன் ” படத்தை ளார். இதில் ன பாத்திரத்தில் மி நடிக்கிறார். த்தில் ஸ்ரேயாவும் ளார்.

ரை நாயகியாக ந்த ஸ்ரேயா த்தில் வில்லியாக ளாராம். படத்தின் கேட்டதுமே நடிக்க விட்டாராம்.



நியூயோர்க்கின் மெட் கேலா நிகழ்ச்சிக்கு பிரியங்கா சோப்ரா அணிந்து சென்ற உடை பற்றித்தான் கடந்தவாரம் சமூகவலைத்தளங்கள் முழுவதும் பேச்சு.

இந்த நிகழ்ச்சிக்கு “ரால்ப் லாரன் டிரெஞ்ச் கோட்” அணிந்து சென்றிருந்தார். மேடை கூட்டுவதற்காகவா இந்த ஆடையை அணிந்தார் என்று பலரும் கிண்டலடித்து வருகின்றனர்.

கூடவே அவர் நடந்து செல்லும்போது உடையை சரி செய்வதற்கும் உதவியாளர்களையும் பிரியங்கா அழைத்துச் சென்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்தன் கணேசலிங்கம்




# காகங்கள்

"பேர்? நம ?"

"சுனித்த கமகே"

"சுன்னித நா.. சுனித்த.. சுனித்த..."

"அய்யா சுன்னித்த இல்லே சுனித்த"

நெற்றியிலிருந்து வியர்வைத்துளிகள் அவரின் இமைகளை நனைத்துக்கொண்டு இடக்கண்ணின் கூர்மை யான ஓரங்களுக்குள் சென்றுகொண்டிருந்தது. கண்ணாடியைக் கழற்றி எரிச்சலூட்டிய இடக் கண்ணை மெதுவாக தேய்த்துக்கொண்டார் அந்த எண்பது மதிக்கத் தக்க கிழவர். மீண்டும் குனிந்து டைப் ரைட்டரை கைகளால் அழுத்தத் தொடங்கினார்.

"கமகே கீயத?"

பெரும் சிரிப்பொலி, வந்திருந்த இரண்டு ஆமிக்காரன்களும் ஒருவரையொருவர் பார்த்து எக்காளமிட்டு சிரித்து கொண்டனர்.

"கமகே பேர் என்ன சேர் ?"

"மாத்தற"

"மத்தர நா அய்யே" என்று சற்று கோபம்கலந்த மொழியுடன் இருந்த கதிரையை தள்ளிவிட்டு எழுந்து கொண்டான் அதிலொருவன். மற்றவன் அவனைப்போலவே செய்துகொண்டு இருவருமாய் முணு முணுத் துக்கொண்டு அங்காலே இருந்த இளம் டைப் ரைட்டரிடம் விலகி சென்றார்கள்.

எண்பது மதிக்கத் தக்க அந்த வயதானவர் கையை ஒரு பொக்கெட்டுக்குள் வைத்து அதிலிருந்த சாயம் போயும் தெரிந்துவிடாத வெள்ளை லேஞ்சியை எடுத்து எல்லாமாக வியர்த்துப்போயிருந்த தலையை ஒரு சுற்று சுற்றினார். ஹிப்பியில் இருந்த வியர்வை அவரின் கொலரை ஈரமாக்கியிருந்தது. ஒருநாளில் எப்போதாவது ஒரு முறைதான் அவருக்கு வேலை வரும். அதில் ஏற்படுத்திக்கொள்ளும் நூறு ரூபாயைப் பத்திரப்படுத்தி அவரின் அடையாளஅட்டை வைக்கும் பேசுக்குள் வைத்துகொள்ளவார். இன்று காலியாகத்தான் வீடு செல்லவேண்டும் என்ற மன கசப்புடன் பையுக்குள் இருந்த பைபிளை எடுத்து கடைசியாக வாசித்த அதிகாரத்தில் வைத்திருந்த புறா இறக்கையை அப்புறப்படுத்தி மனதுக்குள் வாசிக்க தொடங்கினார்.

"நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டு, எமோரியரின் மலை நாட்டுக்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்து..." என்று மெல்லிய சப்தத்துடன் வாசித்துக்கொண்டிருக்கும் போது பலமில்லாத காற்று அவரின் மேசையை தாண்டிச் சென்றது. கூடவே அவர் வைத்திருந்த புறா இறக்கையையும் அடித்துச் சென்றது. காற்றில் மிதந்த இறகு மேற்தளத்தின் நடு வெளியினூடாக தரையில் விழுந்தது. அதை கவனித்தும் கவனிக்காமலும் வயதானவர்,

"கர்த்தர் உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் - ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அவர்களுக்குப் பின்வரும் அவர்கள் சந்ததிக்கும் ஆணையிட்டுக்கொடுத்த அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்றார்." என்று கொஞ்சம் விலகி வாசித்து முடித்தார். பின்னர் அவர் நெஞ்சில் கோத்திருந்த சிலுவையை ஒருமுறை தடவி விட்டு ஆமென் என்றார். அப்பக்கத்தின் ஓரத்தை மடித்து அடையாளம் இட்டு கொண்டார்.

இன்னும் அந்த ஆமிக்காரர்கள் போய்விடாததை பார்த்து, தனக்கு சேரவேண்டிய பணம் கைமாறி செல்லுகின்றதே என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டார். கீழே குனிந்து அவரின் தோற்பையை எடுத்து மேசையில் வைத்தார், அதற்குள் டைப் ரைட்டரையும் பைபிளையும் ஒரிரண்டு பைல்களையும் எடுத்து திணித்தார். பின்னர் அந்த தோல்பையை முதுகில் அணிந்துகொண்டார். மதிய உணவு சுற்றிய கடதாசியையும் பொலித்தீன் பாக்கையும் ஒருகையில் கசக்கி எடுத்துக்கொண்டு மறுகையால் ஜீன்ஸின் பின் பொக்கற்றை தடவி தன் பேர்ஸ் உள்ளதா என சரி பார்த்துக்கொண்டார். அதற்குள் காசு இல்லையே என்பது அவருக்கு வருத்தமாகவே இருந்தது. பின்னர் மேசைக்கு கீழே இருந்த தண்ணீர் போத்தலை எடுத்து இருகைகளையும் நிரப்பி கொண்டார். வேகமாக படிக்கட்டு களில் இருந்து இறங்கி சாலை ஓரத்தில் வழியே நடக்க தொடங்கினார். அவர் வயதுக்கு அந்த வேகம் அசாத்தியமானது.

அந்த இரண்டு ஆமிக்காரர்களும் தமக்குள் சிரித்துக்கொண்டதை அவரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அவர்கள் இன்னும் சென்றிருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தோடு வெறுக்கென்று திரும்பி படிகளுக்கு விரைந்தார். அதற்கு முன்னரே இருவரும் கீழே இறங்கி விட்டிருந்தனர். அவர்களின் முதுகுப்புறம் மட்டுமே வயோதிபருக்கு தெரிந்திருந்தது. உடனே அவர்களை நோக்கி நடக்க தொடங்கினார். அவர்கள் பஸ் ஸ்டாண்டின் நடுவாக சென்றுகொண்டிருந்தனர். திடீரென அந்த வய தானவர் நடையை நிறுத்திக் கொண்டார். கையில் சுருட்டி வைத்திருந்த குப்பையை அங்கேயே போட்டுவிட்டு திரும்பி வந்த வழியேயே சாலை ஓரத்தை அடைந்து மிக மெதுவாக ஊர்ந்தார். வழியெல்லாம் அவரின் மனதை ஏதோ ஒன்று குடைந்துகொண்டே இருந்தது. காதில் செப்பை ஊற்றியதுபோல அவர்களின் சிரிப்பொலி ஒலித் துக்கொண்டே இருந்தது.

நிலத்தை நோக்கியபடி நடந்து கொண்டிருந்தவர் தனக்கு முன்னால் சாலை ஓரத்தில் ஒரு பூனைக்குட்டி முனகிக்கொண்டிருந்ததை அவதானித்தார். தன்னைப்போலவே அதன் நிலையும் என புரிந்துகொண்டவர் அதனருகே போய் தலை முடிகளை வருடிவிட்டார். இதன் போது தன் ஹிப்பியை யாரோ வருடுவது போல உணர்ச்சியுற்றார். அந்த பூனையின் கண்களில் குடிகொண்டிருந்த வறட்சி, அவரின் கீழ் உதட்டை நடுங்க வைத்தது. தாடைகள் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் ஆடிஅமர்ந்தன. அவர் தனது கையிலிருந்த தண்ணீர் போத்தலை வைத்துவிட்டு தோற்பையை கழட்டினார். அதன் வாய்ச்சுருக்கை அகற்றி அதிலிருந்த டைப் ரைட்டரை வெளியே எடுத்து நிலத்தில் வைத்தார். இருகைகளாலும் பூனைக்குட்டியை தூக்கி தன் தோற்பைக் குள் வைத்துவிட்டு, டைப் ரைட்டரை குவிந்துபோயிருந்த சருகு குவியலுக்குள் மறைத்து வைத்தார். முதுகில் தோல் பையையும் கையில் தண்ணீர் போத்தலையும் கொண்டு எடுத்துக்கொண்டு வேகமாக வீட்டு வாச லுக்கு விரைந்தார். வாசல் மதிலின் ஓரமாக நின்று மதிலின் மேலே போத் தலை வைத்துவிட்டு தோல்பையை கழட்டி பூனைக்குட்டியை எடுத்து சுவருக்குள் நோகாமல் போட்டார்.

முன்னைய சந்தர்ப்பங்களை விட வேகமாய் தாய் அடிக்க துரத்தும் சிறுவனைப்போல டைப் ரைட்டர் ஒளித்துவைத்த இடத்தை நோக்கி ஓடினார். அங்கே சருகு குவியலும் இல்லை டைப் ரைட்டரும் இல்லை. கைகளை நிலத்தில் ஊன்றி அந்த ஓரத்திலிருந்த மரத்தின் தண்டில் முதுகை சாய்த்து எதிரே மின்கம்பத் தில் நின்ற காகங்களை பார்த்தவாறு சில தேவ வாக்கியங்களை உதிர்த்துக் கொண்டிருந்தார். மனதுக்குள் அந்த இரண்டு ஆமிக்காரங்களுள் ஒருவனின் பூட்சுக்குள் சிதைந்துபோன புறா இற கும் தோற்பைக்குள் இறந்து கிடந்த பூனைக்குட்டியின் வறட்சியால் வெளிறிப் போன கண்களும் மாறி மாறி வந்துபோய்க்கொண்டிருந்தது. அந்த காகங்கள் மின்கம்பத்தை விட்டு பறக்கத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசியப்படுகின்ற ஆடம்பரங்கள்



பணம் அதிகம் இருந்தால் ஆடம்பரச் செலவுகளும் கைகோத்து விடுகின்றன. இன்றைய நாள்களில் கொழுத்த பணக்காரர்கள் பணத்தை வாரி இறைத்து பல ஆடம்பரங்களில் செலவழிப்பதைப் பார்க்கும்போது நமக்கு மயக்கம் வராத குறைதான். இந்தப் பணக்காரர்களுக்கு இந்த ஆடம்பரங்கள் அவசியப்படுகின்றன என்பதே யதார்த்தம்.

4மில்லியன் டொலர் பெறுமதியான இரு ஆடம்பரப் படகுகள் திருடப்பட்டுள்ளன. ஆள் கடத்தலுக்கும் ஆயுதக் கடத்தலுக்கும் பயன்படுத்தவே இவற்றைக் களவாடி இருக்கின்றார்கள் என்கிறார்கள் அதிகாரிகள். இங்கிலாந்திலிருந்து அழைக்கப்பட்டுள்ள தனியார் துப்பறியும் அதிகாரிகள் கொள்ளைக் கும்பலைக் கண்டுபிடிக்க அழைக்கப்பட்டுள்ளார்கள்.

டுபாய் நகரிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இதன் உரிமையாளர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்து கொண்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். திருட்டுடன் தொடர்புடையவன் என்று சந்தேகிக்கப்படும் சியாம் என்பவன் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் பதுங்கி உள்ளதாக சந்தேகிக்கின்றார்கள். இவன் வேறு குற்றங்கள் சம்பந்தமாக டுபாய் பொலிஸாரால் தேடப்படுபவன். ஐக்கிய அரபுக் குடியரசு வங்கிகளில் இவன் பெயரில் பெரும் தொகைப் பணம் வைப்பில் இருப்பதாக நம்பப்படுகின்றது. இஸ்ரேல், ஜோர்டான் ஆகிய இரு நாடுகளின் கடவுச்சீட்டு இவனிடம் இருக்கின்றது என்று அறிந்து வைத்துள்ள பொலிஸார் இதுகால வரை இன்னொரு படகின் உதவியுடன் ஆள்கடத்தலில் இவன் ஈடுபட்டிருந்தான் என்று கூறுகின்றார்கள். களவாடப்பட்ட படகுகள் ஒரு நிறுவனத்தின் பெயரிலேயே பதியப்பட்டுள்ளன. இவர்களிடம் 35க்கு மேற்பட்ட படகுகள் இருப்பில் உள்ளன.

பெரிய அளவில் செயற்படும் இந்தத் திருட்டுக் கும்பல் சட்டத்தின் பிடியில் மாட்டுமா?

# அநாகரிகமும் அதிர்ச்சியும்



அத்துமீறல்களை யார்தான் அனுமதிப்பார்கள்? அதிலும் அது அரச விவகாரம் என்றால் அதற்கான பெரு விலையை கொடுத்தே தீர வேண்டும்.

இளவரசி கேட் வில்லியம்ஸின் மேலாடை இல்லாத போட்டோக்களை பிரெஞ் சஞ்சிகை ஒன்றில் பிரசுரித்தார்கள் என்று குற்றஞ்சாட்டி இதனால் ஏற்பட்ட அபகீர்த்திக்கு 1.3 மில்லியன் பவுண்ட்ஸ் தொகை செலுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

2012இல் தெற்கு பிரான்ஸ் பிரதேசத்தில் சூரியக் குளியல் செய்தபோதே இந்தப் படம் திருட்டுத்தனமாக எடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஒரு பிரெஞ்சு பத்திரிகையும் மார்பகங்கள் மறைக்கப்பட்ட நிலையில் படமெடுத்து பிரசுரித்திருந்தது. இதற்கு42000 பவுண்ட்ஸ் தொகை செலுத்தும்படி கோரி உள்ளார்கள்.

பல கோடிகளுக்கு அதிபதியான இந்த அரச ஜோடி இப்படி ஒரு பெரிய தொகையைக் கோருவது அபத்தம் என்று குறிப்பிடுள்ளார் சஞ்சிகைக்காக வாதாடும் வழக்கறிஞர்.

மிகவும் அந்தரங்கமான போட்டோக்களை, அதிலும் தன் மனைவிக்கு இளவரசர் கிறீம் பூசுவதைக் கூட சக்தி வாய்ந்த கமராவினால் படம் எடுத்து அதை உலகம் பார்க்க பிரசுரிப்பது மகா மோசம் என்று அரச தம்பதிகளின் சட்டத்தரணி கடிந்து கூறி உள்ளார். பிரான்ஸ் தன் மண்ணுக்கு வருபவர்களது தனிப்பட்ட வாழ்வை எப்பொழுதுமே மதிப்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். இப்படி இவர்கள் களவாகப் படங்களை எடுத்துள்ளமை அநாகரிகமானது மட்டுமல்ல, அதிர்ச்சியையும் தருகின்றது என்று அரச தரப்பு சட்டத்தரணி கவலை தெரிவித்துள்ளார். இப்படித்தான் இளவரசி டயனாவையும் இந்தப் படப்பிடிப்பாளர்கள் மொய்த்து அவர் ஒரு விபத்தில் சிக்கி உயிர் துறக்க வழி செய்தார்கள். இந்த வலி இன்னமும் பலர் நெஞ்சுகளில் ஆறாத வலியாக இருக்கின்றது என்று இவர் கூறியிருக்கின்றார். பொது இடத்தில் எடுத்த படங்கள் இவை. எப்படி அதிர்ச்சியைத் தரும் என்று கேட்கிறார்கள் எதிர்த் தரப்பினர்.

யாருக்கு வெற்றி கிடைக்கப் போகிறது?




# அசுர வேகத்தில் அசத்தும் ரயில்கள்

வேகம் வேகம் வேகம் ... இப்பொழுதெல்லாம் நாம் அன்றாடம் காண்பது எதிலும் வேகத்தைத்தான்! டெஸ்ட் போட்டிகள் வேகமான ரி 20 என்னும் வடிவத்துக்கு மாறி விட்டன. வேக உணவு விரும்பிகளாக உலகம் மாறிக்கொண்டு வருகின்றது. இந்த லட்சணத்தில் நம்மைச்சுற்றி உள்ள வாகனங்கள் கூட அதி வேகமாக, குறுக்கும் நெடுக்கும் ஓடத் தொடங்கி விட்டன.

பிரிட்டன் மணிக்கு 400 மைல் வேகத்தில் ஓடக்கூடிய ரயில்களை சேவையில் விடத் தயாராகிக் கொண்டு வருகின்றது. முன்பெல்லாம் மணிக்கு 320கி.மீ. வேகத்தில் நகரில் ஓடிய ஜப்பானின் புல்லெட் ரயில்கள் பலருக்கும் கிளுகிளுப்பைத் தந்தன. ஆனால் இன்று இவைக்கு மதிப்பில்லை.

எனவே அதிவேகமான - மணிக்கு 500கி.மீ. வேகத்தில் ஓடக்கூடிய ரயில்களை தயாரிக்கும் பணியில் ஜப்பான் இறங்கி விட்டது. டோக்கியோ, நகாயா ஆகிய இரு நகரங்களை 40நிமிடங்களில் இணைத்து விடக்கூடிய ரயில் சேவையை 2045இல் அறிமுகப்படுத்துவ்து என்று தீர்மானித்துள்ளன. இதற்கான செலவாக 100பில்லியன் டொலர் தொகையை ஒதுக்கி உள்ளார்கள். என்றாலும் பிந்திய செய்திகளின்படி எட்டு வருடங்களுக்கு முன்பு இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படலாம் என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

காந்த சக்தியின் உதவியுடன் தண்டவாளங்களில் பட்டும் படாமல் ஓடும் இந்த முறையில், தண்டவாளங்களுக்கு சேதம் குறைவு என்பதோடு வேகமாகவும் ரயில் பயணிக்கின்றது.

இப்படியான ரயில்கள் முதல் தடவையாக இங்கிலாந்தின் பெர்மிங்ஹாம் நகரின் விமான நிலையத்திலேயே ஆரம்பித்துள்ளன. சீனாவிலும் பரவலாக இப்படியான ரயில் சேவையை ஆரம்பித்து விட்டார்கள். மக்லேவ் ரயில்கள் என்றே இதை அழைத்து வருகின்றார்கள்.

வேகம் நல்லதுதான். ஆனால் கடும் வேகம் கண்ணைக் கெடுத்து விடக் கூடாது.

**புதினப்பூங்கா**
**ராஜேஷ்மணாளன்**




கிறிஸ்தவர்களுக்கு பைபிள் எப்படி புனிதமோ, அப்படி முஸ்லிம்களுக்கு குர் ஆன் ஒரு புனித புத்தகமாக அமைகின்றது. கபிரியல் என்ற தேவதூதர் மூலம் இது வெளிப்படுத்தப்பட்டதாக இவர்கள் நம்புகிறார்க்ள்.

பல அத்தியாயங்களைக் கொண்ட இது அளவில் சிறியது.

ஆனால் இப்பொழுது புதினம் என்னவென்றால் எகிப்திய நாட்டு ஓவியர் ஒருவர் தனது மூன்று வருட முயற்சியில் உலகின் மிகப்பெரிய குர் ஆனை உருவாக்கி இருப்பதுதான். இவர் பாதிவழியில் பாடசாலைப் படிப்பை நிறுத்தி விட்டு தனக்குத்தானே ஆசிரியராக மாறியவர்.

இவரது பெயர் சாட் முஹம்மத். தனது வீட்டு சுவர்களில் பல இஸ்லாமிய க் கோட்பாடுகளை ஓவியங்களாக வரைந்தவர். இப்பொழுது 700 மீற்றர் நீளமான கடதாசியில் புனித நூலை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

"என்னிடம் சொல்லிக் கொள்ளும்படி எந்தச் சொத்தும் இல்லை. நான் ஒரு சராசரி மனிதன். நானே செலவிட்டு கடந்த மூன்று வருட உழைப்பில் என் சாதனைதான் இது" என்கிறார் இந்த ஓவியர். இந்தத் தாளை வைக்க ஜோடிக்கப்பட்ட ஒரு அழகான பெட்டியையும் உருவாக்கி இருக்கிறார் இவர்.

இதை இவர் கின்னஸ் சாதனையாக பதிவு செய்யத் திட்டமிடுள்ளார். கின்னஸ் நிறுவன அதிகாரிகளின் கருத்தின்படி உலகின் மிகப் பெரிய குர் ஆனின் பதிவு எம்மிடம் இருந்தாலும், இவ்வளவு நீண்ட கையெழுத்துப் பிரதி எம்மிடம் இல்லை. எனவே அந்த வழியில் இது ஒரு சாதனைதான் என்கிறார்கள்.

இன்றைய நிலையில் மிக வேகமாக வளரும் மதம் இஸ்லாம்தான். 2070இல் உலகில் மிக அதிகமானவர்களை கொண்ட மதமாக இஸ்லாம் இருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். 2010-50காலப் பகுதியில் முஸ்லிம்கள் தொகை 73வீதத்தால் அதிகரிக்கும் என்று நம்புகிறார்கள். அதே சமயம் கிறிஸ்தவ மதம் 35 வீத அதிகரிப்பை மட்டுமே காணும் என்று சொல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை

தொகுப்பு: அ.றொக்ஷன்


அதிபர் சி.சந்திரகுமார்

## வரலாறு

யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் 1935 ஆம் ஆண்டு பாலர் பாடசாலையாக யாழ். எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. காலப்போக்கில் - 1992 ஆம் ஆண்டில் தரம் 11 வரையான வகுப்புகளைக் கொண்ட வகை 2 பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு இன்றுவரை சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது.

சர்வதேச நியமனங்களுடன் வினைத்திறன் மிக்க கல்வி வழங்கும் நிறுவனம் என்ற நோக்கக் கூற்றைக் கொண்டு யாழ். எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை அதன்படி செயற்பட்டும் வருகிறது. அத்துடன் பாட, இணைப்பாடவிதான செயற்பாட்டினூடாக சமுதாய உணர்திறன் மிக்க நேர்மையான நெறிமுறையைப் பின்பற்றும் அறிவுமிக்க சமுதாயத்தை உருவாக்க பங்களிப்புச் செய்தல். எனும் பணிக்கூற்றைக் கொண்டும் இப்பாடசாலை விளங்குகின்றது.

உள்நாட்டிலே இடம்பெற்ற யுத்தத்தால் இப்பாடசாலை பலமுறை இடம்பெயர்வுகளுக்கு உள்ளானது. இதனால் பாடசாலையின் வரலாறு தொடர்பான ஆவணங்கள் சேதமடைந்துவிட்டன. இதனால் பாடசாலை தொடர்பான வரலாற்றை முழுமையாக அறிய முடியாத நிலை காணப்படுகின்றது. இப்பாடசாலையில் மார்க்கண்டு, சின்னையா, செல்வச்சந்திரன், கஜேந்திரன், கந்தசாமி போன்றோர் அதிபர்களாக கடமையாற்றியிருந்தனர். தற்போது சி.சந்திரகுமார் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். அவரின் கீழ் 33 மாணவர்களுக்கு 9 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

அடிக்கடி போரால் பாதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் வாழ்பவர்களின் எண்ணிக்கையும் மாணவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளது. அதுமட்டுமன்றி யுத்தத்தால் கல்விச் செயற்பாட்டை இடைநிறுத்தியிருந்த இப்பாடசாலை 2010 ஆம் ஆண்டு முதலே மீண்டும் இயங்கத் தொடங்கியது. இவ்வாறெல்லாம் இருந்த போதும் இங்கு 35 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் சிறப்பான முறையில் கல்வி போதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## சாதனைகள்

இந்தப் பாடசாலையில் கல்வி கற்றவர்களுள் ஒருவரான கு.சிவா என்பவர் கனடாவில் வாழ்நாள் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவரைப் போன்று கு.கணேஷ் என்பவர் அவுஸ்ரேலியாவில் விஞ்ஞானியாக உள்ளார்.

2016ஆம் ஆண்டு, யாழ். எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிக்கு மேல் பெற்றனர். இதனை வட மாகாணக் கல்வித் திணைக்களம் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தது.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவியொருவர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து உயர்தரம் கற்கும் தகுதியைப் பெற்றார். ( அந்த ஆண்டில் இந்த மாணவி மட்டுமே தரம் 11 இல் கல்வி கற்றார் என்பது குறிப்பிடத்தக்கது).

## சவால்கள்

இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் போரால் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கும், நாட்டின் பிற பகுதிகளிலும் தற்போது வாழ்கின்றனர். இதனால் பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

புதிய வகுப்புகளுக்கு மாணவர்கள் சேரும் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது.

இப்பாடசாலை வளாகத்தில் 2010 ஆம் ஆண்டு வரை இராணுவம் ஆக்கிரமித்திருந்தது. இதனால் பாடசாலையின் அயலில் வசிப்பவர்கள்கூட தங்கள் பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் சேர்த்துள்ளனர்.

பாடசாலைக்கான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது. இதனால் மழை காலங்களில் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர். சில சமயங்களில் அருகிலுள்ள சனசமூக நிலையத்திலேயே மாணவர்களுக்கு பாடசாலையாக மாற்ற வேண்டிய சூழல் நிலவுகிறது.

வகுப்பறை வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

கணினி, போட்டோ பிரதி இயந்திரம் என்பவை இல்லாததால் பெரும் சிரமங்கள் காணப்படுகின்றன.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு படமும் தற்கொலையும்

- ஜனகன்





புலிட்சர் விருதின் மூலம் உலகப் புகழ்பெற்ற இந்தப் படத்தை எடுத்த கெவின் கார்ட்டர் தற்கொலை செய்து கொண்டார் ஏன்?

கெவின் கார்ட்டர்-தென்னாபிரிக்காவின் அழகிய ஊரான ஜோஹன்ஸ்பர்க்கைச் சேர்ந்தவர். உலகப் புகழ்பெற்ற புகைப்படக்காரர். எல்லா சிறந்த புகைப்படக்காரர்களைப் போன்றே இவருக்கும் நல்ல புகைப் படங்களை எடுக்க வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் இருந்தன. இந்த ஆர்வம் அவரை நாடு, நகரம், கிராமம், காடு, மலை என்று கொண்டு சென்றது.

1993 இல் இந்த ஆர்வம் அவரைத் தனது சக புகைப்படப் பத்திரிகையாளர்களுடன் சூடானுக்குக் கொண்டு சென்றது. அப்போது சூடான் வரலாறு காணாத பஞ்சத்தில் சிக்கித் தவித்துக் கொண்டு இருந்தது.

குறிப்பாக சூடானின் தென்பகுதி மக்கள் உண்ண உணவின்றி, பருகநீரின்றி பசி, தாகத்தில் தவித்துக் கொண்டிருந்தனர்.

பசி பஞ்சத்தில் தவிக்கும் மக்களின் நிலைகளைக் கமராவில் பதிவு செய்ய கெவின் தொலைதூர கிராமங்கள் வரை சென்றார்.

இறுதியாக அவர் முயற்சி கைகூடியது. ஒரு நாள் தன் கமராவை தோளில் தொங்க விட்டுக் கொண்டு உள்ளத்தை உலுக்கக் கூடிய படத்துக்கான காட்சியைத் தேடியலைந்து கொண்டிருந்தபோது அப்படிப்பட்ட காட்சி தென்பட்டது அவரது நற்பேறு என்றுதான் கூற வேண்டும்.

பசி பஞ்சத்தால் அடிபட்ட நோஞ்சன் நிலையில் உள்ள ஒரு சிறுமி நடக்கக் கூட இயலாத நிலையில், எலும்புக் கூடு போன்ற தன்னுடலை தவழ்ந்து இழுத்துக் கொண்டு மெல்ல மெல்ல ஊர்ந்து செல்வதைக் கண்டார்.

அந்தச் சிறுமி ஐக்கிய நாடுகளின் சபையின் சார்பாக அமைக்கப்பட்டு இருந்த உணவு வழங்கும் முகாமை நோக்கி தள்ளாடியபடி தவழ்ந்து கொண்டிருந்தது உண்மையிலேயே இதயத்தைப் பிழியக் கூடியதாக இருந்தது.

தோளில் இருந்து கமராவை இறக்கி கோணம் பார்த்த கெவினுக்கு இன்னொரு வியப்பும் காத்திருந்தது.

ஆம் அந்த எலும்பும் தோலுமான சிறுமிக்குப் பின்னாலேயே சிறிது தொலைவில் ஒரு பிணம் தின்னிக்கழுகும் சிறுமியின் மீது பார்வையை நிலை நிறுத்திக் கொண்டு இருந்தது.

எப்போது சிறுமியின் உடலை விட்டு உயிர் பிரியும் மீதியுள்ள அந்தத் தோலையும் அதைச் சுற்றி இருக்கும் சிறிது மாமிசத்தையும் எப்போது சாப்பிடலாம் எனக் காத்திருந்தது பிணம் தின்னிக்கழுகு.

கெவின் கமரா லென்ஸை கண்ணுக்கு ஒத்திக் கொண்டார் சிறுமியையும் கழுகையும் ஒரு பிரேமில் அடக்கிக் கொண்டு 'க்ளிக்' செய்தார்.

இப்போது அவரது புகைப்படக்கருவியில் மிக அரிதிலும் அரிதான படம் பதிவாகி விட்டது.

இதை விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் கமராவைத் தோளில் மாட்டிக் கொண்டு தனது வண்டியை ஸ்டார்ட் செய்தார் பறந்து விட்டார். இந்த அரிதான படத்தை 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிக்கைக்கு விற்று விட்டார்.

இந்தப் புகைப்படம் 1993 மார்ச் திங்கள் 26 ஆம் நாள் காலை நாளிதழில் முதல் பக்கத்தில் வெளியானது. இந்தப் படத்தைப் பார்த்ததும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் பத்திரிகை அலுவலகத்துக்கு தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டனர்.

அனைவரும் ஒரே கேள்வியைத்தான் கேட்டனர். புகைப்படத்தில் உள்ள சிறுமி என்ன ஆனாள்? அவள் உயிருடன் பிழைத்தாளா அல்லது இறந்து விட்டாளா?

இந்தக் கேள்விக்கான பதில் பத்திரிகையின் தொலைபேசி ஒப்பிரேட்டரிடமோ படத்தை எடுத்த கெவின் கார்ட்டர்டமோ இல்லை.

1994, மே 23 அன்று பெரும் கை தட்டல்களுக்கு இடையே கெவின் கார்ட்டர் கொலம்பியப் பல்கலைக்கழகத்தின் பிரமாண்டமான அரங்கத்தில் இந்த அரிதான புகைப்படத்துக்கான புலிட்சர் விருதைப் பெற்றுக்கொண்டார். இந்த விருது புகைப்படத் துறையில் நோபல் விருதுக்கு இணையானது. விருது பெற்ற சில நாள்களுக்குப்பின் கெவின் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார்.

கெவினுக்கும் அங்கு இருந்த பிணம் தின்னிக் கழுகுக்கும் என்ன வேற்றுமை? இரண்டும் ஒரே விதமான செயற்பாடுகளே.

'குறைந்தபட்சம் புகைப்பட நிபுணர் கெவின் அந்தச் சிறுமிக்கு ஒரு வாய் தண்ணீர் அல்லது சாண்ட்விச் தந்து உயிரைக் காப்பாற்றி இருக்கலாம். அல்லது தனது வலுவான கைகளினால் அந்தச் சிறுமியைத் தூக்கிச் சென்று உணவளிக்கும் அமைப்பு அலுவலகத்தின் வாயிலிலாவது சேர்த்து இருக்கலாம் கல்லெடுத்து வீசி அந்தக் கழுகையாவது விரட்டி இருக்கலாம். ஆனால் இவற்றில் எதையும் செய்யாமல் வெறும் ஒரு படத்தை எடுத்தார் அதை அதிக விலை தந்த பத்திரிகைக்கு விற்று விட்டார் என்று ஒருவர் அவர் மீது குற்றஞ் சாட்டியதுதான் காரணம்.

புகைப்பட வல்லுநர் கெவின் விரைவில் ஜோஹன்ஸ்பேர்க் திரும்பி விட்டர். இரண்டு மாதங்களுக்குப் பின் கடற்கரைக்கு அருகில் அவரது கார் நின்று கொண்டிருந்தது. அதில் அவர் பிணமாகக் கிடந்தார். காரின் லைசன்ஸரில் வாயை வைத்து, அதிலிருந்து வெளியேறும் புகையை உட்கொண்டு, கெவின் தற்கொலை செய்துகொண்டிருந்தார்.

அவரது பிணத்துக்கு அருகில் காவல்துறைக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் சில வரிகளே இருந்தன. முதல் வரி "I am Really, Really Sorry"

இன்று பல்வேறு செய்தி சேனல்களிலும் அடிபட்டும் விபத்துக்குள்ளாகியும் இரத்தச் சிதறலில் துடித்துக் கிடப்பவர்களைப் படங்களாய்ப் பார்க்கும்போதும் அவர்களின் அபயக் குரலைக் கேட்கும் போதும் ஏனோ கெவின் கார்ட்டர் நினைவுக்கு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பி தப்பி சாதல்....

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுவே உன்னைப் பாதுகாக்க வல்லது. அதைவிட வேறு வழியில்லை.

வீட்டில் சாமி அறை இல்லாவிட்டாலும் கட்டாயம் பங்கர் இருக்கவேணும். சாமியறையை கூட்டித் துப்புரவாக்கலாம், விடலாம். அதனால் எந்தப் பாதிப்பும் யாருக்கும் ஏற்படாது. ஒரு மனத்திருப்திக்கு மேல் அதிகம் ஆகப்போவதில்லை எதுவும். ஆனால் கட்டாயம் பங்கரைத் தினமும் கூட்டிச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். அதற்கு விளக்கேற்ற வேணும். அதைக் கண்காணிக்க வேணும். இல்லையென்றால் அதற்குள் மரணம் வந்து புகுந்து விடும். சாவுக்கு அஞ்சிச் சரணடையுமிடத்திலேயே சாவு வந்து அழைத்துச் சென்று விடும்.

கவனக்குறைவான பங்கர்களில் பாம்போ, பூச்சியோ குடியேறிவிடுவதுண்டு. மரணத்துக்குத்தான் எத்தனை முகங்கள்? எத்தனை வேஷங்கள்? எத்தனை குணங்கள்? அது எத்தனை வடிவங்களில் சூழ்ந்திருக்கிறது? அதிலும் எம்மை ஏன் இப்படிச் சூழ்ந்திருக்கின்றது?

எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது மரணந்தானா? மற்றதெல்லாம் அந்த நிரந்தரத்துக்கிடைப்பட்ட தற்காலிக நிகழ்ச்சிகளா?

விமானங்கள் குண்டுகளுடன் அலையும்போது அவற்றுக்கு அஞ்சிப் பங்கருக்குள் பாதுகாப்பு தேடி நுழைந்தவர்களை பாம்புகள் தீண்டியிருக்கின்றன, தீண்டிக் கொன்றிருக்கின்றன. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை என்பார்களே! அதேமாதிரித்தான் இது.

வெளிச்சக்குண்டுகள் இன்னும் எரிகின்றன. இரவைப்பகலாக்கும் என்பார்களே. அப்படி எரிகின்றன. திருவிழாவில் இப்படி ஒரு வெளிச்சப்பந்து என்றால் எத்தனை ஆனந்தமாக இருக்கும்! இங்கே இப்போது முப்பது குண்டுகள் வானத்தில் எரிகின்றன. இதோ வானம் எரிகிறது. இனிக் கீழே பூமியும் எரியப்போகிறது. இதைத்தான் 'முகில்களின்மீது நெருப்பு தன் சேதியை எழுதியாயிற்று' என்று எழுதினாரா சேரன்?

முப்பது எரிகுண்டுகள் இந்த இரவில் - இருளில் - வானத்தில் எரியும்போது எப்படி இருக்கும்? அதை வேடிக்கை பார்க்கக்கூடியமாதிரியா இப்போது நிலைமை இருக்கிறது?

வீடுகளில் வெளிச்சமில்லை. ஊர்களில் வெளிச்சமில்லை. ஆள்கள் பதுங்கியிருக்கிற பங்கருக்குள் வெளிச்சமில்லை. அடுத்து வரும் கணம் எப்படி இருக்குமென்பதற்கு வெளிச்சமில்லை. ஆனால் வானம் பற்றி எரிகிறது. வானம் மட்டுமா பற்றி எரியுது. எங்கள் வயிறும் தான் பற்றி எரியுது. கடவுளே, கடவுளே ...

இது உயிரைத்தின்கிற வெளிச்சம். உயிரைத்தேடியலைகிற வெளிச்சம். வெளிச்சப் பாம்புகள். மரணத்துக்கு இப்படியுமொரு நிறமா? இப்படியொரு வடிவமா? 'தலையை உள்ளுக்குள்ளே அமத்துங்கள்' என்று ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளை அதட்டுகிறாள். அது உண்மையில் அதட்டல் அல்ல. மன்றாட்டம், எச்சரிக்கை, கட்டளை, வேண்டுதல், அறிவுறுத்தல்.

அப்படி ஒருதாய் மட்டும்தானா பிள்ளைகளை அதட்டினாள்? அறிவுறுத்தினாள்? மன்றாடினாள்? எச்சரித்தாள்? கட்டளையிட்டாள்?

பங்கருக்குள்ளிருந்த அத்தனை தாய்மாரும் தங்களின் பிள்ளைகளின் உயிருக்காக அப்படித்தான் வருந்தினார்கள், மன்றாடினார்கள், வேண்டினார்கள்.



வெளிச்சத்தைக் கண்டே பயப்படுகிற வாழ்க்கை இது. வெளிச்சமில்லாமலே பங்கருக்குள் அடைபட்டிருக்கிற வாழ்க்கையும் இதுதான். முன்பும் இப்படி வெளிச்சத்தைப்போட்டு யாரையோவெல்லாம் தேடினார்கள். எதையோவெல்லாம் தேடித்திரிந்தார்கள்.

வயிற்றில் 'லைற்'றைப் பொருத்திய 'ஹெலிகொப்டர்'கள் அப்போது இரவிரவாக இப்படித்தான் தேடின. போதாக்குறைக்கு அவை தாக்குதலையும் நடத்தின. அது யுத்தம் தொடங்கிய காலத்தில்.

அது பங்கர் பெரிதும் அறிமுகமாகியிராத காலம். மரங்களுக்குக் கீழேயும் பாலங்களுக்கு அடியிலும் மலசல கூடத்திலும் அவரவர் பாதுகாப்புத் தேடினர்.

நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் இது உண்மை. பலர் மேசைக்குக் கீழே கூட பாதுகாப்புத் தேடினார்கள். விமானத்தாக்குதலையோ 'ஹெலிகொப்ட'ரின் தாக்குதலையோ தாக்குப்பிடிக்கக்கூடிய அளவுக்கு எந்த மேசைக்கும் திராணியில்லை. ஆனால் அவர்கள் வேறு வழியில்லாமல் பயத்தில் ஒரு மன ஆத்திக்காக மேசைகளின் கீழே பதுங்கினார்கள். 'ஹெலிகொப்டர்' அடித்துக் கொண்டு வரும்போது ஒரு மூதாட்டி கையில் வைத்திருந்த கடகத்தைத் தூக்கித் தலைக்குக் கவசமாகப் பிடித்ததை நான் கண்டேன். 'பங்கரே' சில வேளைகளில் பாதுகாப்பில்லாமிலிருக்கும்போது இந்தக் கடகம் மட்டும் பாதுகாப்பைக் கொடுக்குமா?

அதைப் பார்த்த எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் அந்தச் சிரிப்பை விடவும் அந்த மனுசி அப்போது அந்தரப்பட்டதும் உயிர்ப்பயத்தில் அவ அப்படி கடகத்தைத் தலையில் கவிழ்த்ததும் பெரிய பரிதாபம்.

எப்படியெல்லாம் இந்தச் சனங்களைப்போட்டு அலைக்கிறார்கள்? எத்தனை வருசமாக இந்தச் சனங்கள் இப்படித் துன்பப்பட்டுக் கொண்டேயிருப்பது?

இதெல்லாம் பாதுகாப்பில்லை என்று அவர்களுக்கு அப்போது தெரியாது. ஆனாலும் அவர்கள் தங்களுக்குத் தெரிந்த அளவில் அப்படிச் செய்தார்கள. தாங்கள் உணர்ந்த விதத்தில் அதுதான் அவர்களுடைய பாதுகாப்பு ஏற்பாடு.

அப்போது ஆட்சியில் ஜே.ஆர். இருந்தார். பகலில் தேடிக் காணமுடியாததையெல்லாம் அவர் தன்னுடைய படை ஆள்களைக்கொண்டு இரவிரவாகத் தேடினார். வெளிச்சம் போட்டுத் தேடினார். கவசவானங்களிலும் 'ஆமட் ட்றக்' குகளிலும் 'லைற்'றைப் பொருத்திக் கொண்டு ஒழுங்கை தெருவெல்லாம் ஆமிக்காரர் தேடினார்கள். யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், வன்னியிலும் தமிழ்ப்பெடியளை இப்படித் தேடினார்கள். ஹெலிகளும் தேடின. இரவிரவாகத் தேடியும் எதனையும் அவரால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

அவர் பகலிலேயே கடைசி வரையில் பார்வை தெரியாதவராகவே இருந்தவர். பிறகெப்படி இரவில் எதையும் அவரால் காணமுடியும்? அதனால்தான் கடைசிவரையும் இனப்பிரச்சினையை அவரால் காணமுடியவில்லை. அதனால் அதை அவரால் தீர்க்கவும் முடியவில்லை.

'தமிழருக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை இருக்கு?' என்று கேட்டவரல்லவா அவர்.

அவரைப்போலவே இப்போது ஆட்சியிலிருக்கிறவர்களும் வெளிச்சம் போட்டுத்தேடுகிறார்கள். பலியெடுக்கக்கூடிய தலைகள் தெரிகிறதா என்று பார்க்கிறார்கள்.

இது யுத்தம் உக்கிரமடைந்த காலத்துச் சங்கதி.

சிறிலங்காவில் யார்தான் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ்ப்பெருங்குடிகள் இப்படித்தான் வதங்க வேண்டியிருக்கிறது. பண்டாரநாயக்கா காலம் தொட்டு இப்ப மகிந்த ராஜபக்ஷ வரையில் இதுதான் நிலைமை. வரவர இன்னும் இந்தத் துன்பக்கதை கூடுதே தவிர கொஞ்சமும் குறைவதாகவில்லை.

இதோ குண்டுகள் வீழ்ந்து வெடிக்கின்றன. எங்கே, எங்கே ... எந்தத்திக்கில் குண்டுகள் போடப்பட்டிருக்கும் என்று தெரியவில்லை. பூமி பிளக்கின்றதைப்போல பேரதிர்வு.

என்ன செய்கிறார்கள்? இப்படியெல்லாம் இந்த இரவில்வந்து வெறித்தனமாக கொலைத்தாண்டவம் புரிய யார் அனுமதித்தது இந்த மடையர்களை?

ஆறு குண்டுகளா? இதோடு முடிந்ததா? இல்லை இன்னும் இருக்கிறதா, உயிரைத்தேடும் வெறிப்படலம்? இரவிரவாக தூக்கமில்லாமல் இப்படியே பங்கருக்குள்தானிருப்பதா? இதென்ன கொடுமை?

குழந்தைகள் அழுகின்றன. வீரிட்டுக்கத்துகின்றன. எங்கே அந்தக்குண்டுகள் வீழ்ந்திருக்கும்? அங்கே என்ன நிலைமையோ? யார் காயப்பட்டார்களோ? யார் செத்தார்களோ? குழந்தைகளா? பெண்களா? அல்லது முதியோரா? ... கடவுளே கடவுளே ...!

அம்மாவும் பங்கருக்குள் இருக்க முடியாமல் அவதிப்பட்டா. அதற்காக வெளியில் வந்து ஆபத்தில் மாட்ட முடியுமா? அவ முட்டுக்காரி. தூசியோ வெக்கையோ ஆகாது. அதற்காக இப்பொழுது என்ன செய்ய முடியும்? கண்முன்னே பெத்த தாய் படும் பாட்டைச் சகிக்க முடியவில்லை. ஆனால் எதுவும் செய்வதற்கில்லை.


அழும் குழந்தைகளை எப்படி ஆறுதல் படுத்துவது.

எனக்கெதுவும் தெரியவில்லை. இத்தோடு முடிந்ததா துயர்ப்படலம்?

ஒரு 'மிக்' விமானம் இரையும்போது உங்களின் அடிவயிறு தானாகக் கலங்கும். இதயமும் ஈரலும் கரைந்து இடந்தெரியாமலே போய்விடும். அடி வயிற்றில் ஆயிரங் கத்திகள் குத்துவதாக உணர்வீர்கள். அப்படியிருக்கும், அந்த இரைச்சலும் அதின்ர வேகமும். குண்டு வீசாமலே அதின்ர சத்தத்தால் பலரைக் கொன்று விடலாம். நான் செத்துப் பிழைக்கிறேன். பிழைத்துப் பிழைத்துச் சாகிறேன். எத்தனை தடவைதான் இப்படிச் சாவது,

ஒவ்வொருவரும்? ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிசமும்?

## நியந்தனைக்குட்பட்டது...



(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கும் எல்லா நடவடிக்கைக்கும் நான் கட்டுப்பட்டவனாவேன்" என்று உறுதிமொழியும்கொடுத்திருப்பீர்கள். ஏனெனில் அந்த நேரத்தில் பணம் பெறுவதுதான் உங்கள் நோக்கமாக இருக்கும். அந்த நேரத்தில் "திருப்பிக் கட்ட முடியாது போனால்" என்றெல்லாம் நீங்கள் சிந்தித்திருக்க மாட்டீர்கள். சிந்திப்பதற்கும் சந்தர்ப்பம் வராது.


அடுத்ததாகக் கடன் பெற வருகின்ற வாடிக்கையாளர்களை இருத்தி என்னவிதமான கடன் எடுக்க வந்திருக்கிறார். இது அவருக்குத் தேவைதானா? அவர் கடன் எடுத்தால் கட்டுவாரா? தங்களுக்குத் தேவையான யாரையாவது அவருக்குத் தெரியுமா? என்ற விவரத்தை சேகரிக்கின்ற ஒரு அலுவலரோ அல்லது அதிகாரியோ தனது நிறுவனத்தைப் பாதுகாப்பதிலே மட்டுமே குறியாக இருப்பர். வாடிக்கையாளர் பற்றி அக்கறைப்படமாட்டார். அவரைக் குறை கூறுவது எமது நோக்கமல்ல. அவர் சார்ந்த நிறுவனத்தை அவர் பாதுகாப்பதில் எந்தவித தப்புமில்லை. பொது நியாயமாகத்தன்னும் நடக்கலாமே! முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரளவேனும் சமூகப் பொறுப்புள்ளவராகவேனும் இருப்பது அவர் கடமையில்லையா!. கடன் எடுக்கப்போகும் ஒருவருக்கு ஆரம்பத்தில் வழங்கும் கடன் தொடர்பான விளம்பரத்திலும் சரி விண்ணப்பப் படிவத்திலும் சரி எங்கேயாவது ஒரு மூலையில் "நிபந்தனைக்கு உட்பட்டது" (CONDITIONS APPLY) என்ற வாசகம் மிகவும் சிறியதாகக் கண்ணுக்குத் தெரியாமல் அச்சிட்டிருப்பர். அதுதான் அங்கே மிகவும் முக்கியமான விடயம். உங்களை பிடிக்க வைக்கும் எலிப்பொறி அது. அதற்குள்தான் வியாபாரத்தின் அனைத்து விடயங்களும் இருக்கும். ஆனால் அவர்கள் அதைக் கண்டும் காணாமலும் கடந்துபோய்விடுவர். உங்களுக்கு அது பற்றி ஒன்றையும் தாமாகச் சொல்ல மாட்டார்கள். கேட்டாலும் "அது சும்மா ஒரு கம்பனி சாதாரணமாகச் சொல்லுறதுதான். ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. எல்லாத்துக்கும் நானிருக்கிறன் என்று அந்த நேரத்தைச் சமாளித்துக் கொள்வர்.

உண்மையில் மேற்சொன்ன நிறுவனங்களின் ஒரு அதிகாரியோ அல்லது அலுவலரோ தம்மை நோக்கிக் கடன்பெற வந்திருக்கும் அந்த மனிதர் பற்றியும், அவர் எத்தகைய சூழலைச் சமாளிப்பதற்காகக் கடன் பெற வந்திருக்கிறார் என்ற விடயங்களைக் கேட்டு அறிய முயற்சிக்கலாம். கொடுக்கப்போகிற கடனோ அல்லது தவணை அடிப்படையிலான பொருள் கொள்வனவு வசதியோ எத்தகைய நிபந்தனைக்குட்பட்டது என்ற விவரத்தை விளக்கிச் சொல்லலாம். அதன் பின்னர் அவர் உங்கள் அத்தனை சட்டதிட்டங்களையும் விளங்கிக்கொண்டு உங்கள் கடனைப் பெறுவார்களேயானால், அவர் அதனை மீள்செலுத்தாதவர்களாகக் காணும் பட்சத்தில் அவர்களைத் தண்டிக்கலாம். ஆனால் அப்படி பெரும்பாலும் நடைபெறுவது இல்லை. மொத்தத்தில் இந்த விடயத்தில் நியாயத்திலும் விட அதிக அநியாயமே நடைபெறுவதாகக் கணக்கிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வைநயம்-22

■ கணபதி சர்வானந்தா



# பாவமன்னிப்பு

**தான்** பெற்ற கடனை அடைக்க வந்திருந்தான் கந்தையா. கடந்த மாதம்வரை எங்கள் தோட்ட வேலைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தபோது மகளின் பிரசவத்துக்காக எங்களிடமிருந்து கூலிக்கு அதிகமாகப் பெற்ற கடனைத் திருப்பித் தர வந்திருக்கிறான். இவரோடு கதைத்த அன்று போனவன்தான். கடனைத் திருப்பித்தர இன்று வந்திருக்கிறான். இருக்காமல் நின்று கொண்டே பணத்தை நீட்டினான். நான் அவனைத் தேநீர் குடிக்கக் கேட்கவில்லை. ஏனெனில் அவன் கோபமாய்ப் பதில் சொன்னால் எனக்குத் தாங்காது. இன்றுவரை அவன் என்னோடு எதையும் காரசாரமாகப் பரிமாறியதில்லை. அதனால் அதைத் தவிர்த்துக் கொண்டேன்.

நான் கூட அவன் இடத்தில் இருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கோபப் பட்டிருப்பேன். "இவர்" தான் கொஞ்சம் அதிகமாக வாயை திறந்து கொண்டார். "வயது போன நேரத்தில் வாயடக்கம் தேவை" என்று படித்துப் படித்துச் சொன்னாலும் மனுசன் கேட்க மாட்டார். "நான் தான் அதிகம் அந்த விடயத்தைக் கலவரப்படுத்தி விட்டேனோ?" என்று மனம் கூசியது. அதனால் கந்தையாவைப் நேராகப் பார்க்க கொஞ்சம் கஷ்டமாகக் கூட இருந்தது.

போன மாதம் மகளைப் பிரசவத்துக்கு விட்டு விட்டு நேராக எங்கள் வீட்டுக்குத்தான் வந்தான் அவன். வீட்டுத் தாழ்வாரத்தின் கீழ் இருந்த சிமெந்துக் கட்டில் தனது சால்வையை விரித்து இருந்தவன் மிகவும் களைத்துப் போயிருந்தான். "கந்தையா! தேத்தண்ணி தரட்டே?" நான் கேட்டேன். "காலமையிலையிருந்து ஒரு சொட்டு தண்ணி வெந்நி இல்லாமை நிண்டுட்டன். பிள்ளை பிறக்கும்வரை வீட்டுக்காரி என்னை அரக்க விடேல்லை" அவனுக்குத் தாகம் அதிகம் என்று தெரிந்தது. எவர்சில்வர் கப் இரண்டில் தேநீரைத் தயார் செய்திருந்தேன். சிரித்தபடி குடித்துக் கொண்டிருந்தான். "ஆம்பிளைப் பிள்ளை பிறந்திருக்கு. மூல நட்சத்திரம்." கந்தையா சொன்னான். "பிழையில்லை. அவன் ஆண் மூலம். அரசாளுவன்" நான் சொன்னதைக் கேட்டுப் புளுகத்தில் சிரித்தான் கந்தையா. அவனது குடும்பத்தில் ஆண்கள் இல்லை. அவனுக்குப் பிறந்ததெல்லாம் பெண்பிள்ளைகள். இதுதான் ஒரு ஆண். சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டான்.

போன பங்குனியில் எங்கள் மகள் மலருக்குக் கல்யாணம். அந்த நேரத்தில் எங்கள் உறவு கூட அப்படி நடந்து கொண்டதில்லை. அவர்கள் நேரத்துக்கு வருவதும் போவதுமாக இருந்தார்களே யொழிய எமக்குப் பிரயோசனமான எந்த பங்களிப்பையும் செய்ததாகவில்லை. கந்தையா குடும்பமாக ஒரு கிழமை எங்கள் வீட்டோடுதான் இருந்தான். கூட்டித் துடைத்துப் பாத்திரம் விளக்கி சகலபாடுகளையும் பார்த்தான் கந்தையா. அவ்வளவு நாளும் பின்னிக்கிருந்த பத்தியிலேதான் படுத்துக் கொண்டான். இடையிடையே மழையும் வர அதில் நனைந்ததனால் அவனுக்குச் சாதுவாகத் தடிமன் காய்ச்சலும் இருந்தது. "கடவுளே கந்தையா காய்ச்சல் தடிமன் எண்டு படுத்துக்கொள்ளக்கூடாது" என்று நான் தான் அடிக்கடி கடவுளை வேண்டிக் கொண்டேன். அது எனது சுயநலமாகக் கூட இருக்கலாம்.

தினமும் காலை ஐந்தரைக்குக் கோயில் மணி அடிக்கும். தோளில் மண்வெட்டியைச் சுமந்தபடி புறப்பட்டுவிடுவான் கந்தையா. காலை உணவாக நாங்கள் சமைக்கும் புட்டோ இடியப்பமோ அதையும் சுற்றி ஒரு சிறிய கேத்தலில் கொஞ்சம் சூடாகத் தேநீர் கொடுத்தனுப்பிவிடுவேன். இவர் கொண்டுபோய் கொடுத்துவிட்டு வருவார். மதியம் ஒன்றரை வரை தோட்டத்தை வளைய வளைய வருவான். வரம்பு வாய்க்காலெல்லாம் புல் பூண்டு இல்லாமல் பார்த்துக் கொள்ளுவான். பின்பு அவன் வீட்டில் அவனுக்காகப் பனங்கள்ளு காத்திருக்கும். மதியம் சோற்றுக்கு கீழிப்பொடிதன்னும் மணக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்குச் சாப்பாடு இறங்காது. இது காலம் காலமாய் கந்தையாவுக்குப் பழக்கப்பட்ட விடயம். இதைவிட வேறுஉலகம் என்று ஒன்று அவனுக்கு இல்லை.

அன்றும். மதியம். அந்த சிமெந்துக் கட்டில் மீது இருந்தான். நான் அவனுக்குத் தேநீர் பரிமாறிக் கொண்டிருந்தேன். இவர் அங்கு திடீரென வந்தார். "கந்தையா, நான் கொழும்பிலை இருந்து வாங்கிக் கொண்டு வந்து வச்ச முதலை மார்க் மண்வெட்டியை காணேல்லை. பின் பத்தியிலை பார்சாலோடை கிடந்த புது மண்வெட்டி அது. அலகு போட எண்டு வைச்சனான். நீ கண்டனியே" கண் சிவக்க வந்த கேள்வி கொஞ்சம் காரமாயிருந்தது. "இல்லை, நான் காணேல்லை ஐயா." ஏக்கத்துடன் பதில் சொன்னான் கந்தையா. "எனக்குத் தெரியாது . உன்னைவிட இஞ்சை ஆரும் வெளியாக்கள் வாறேல்லை." மொட்டையாகக் கதை சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் போய்விட்டார் இவர். "அப்ப.நான்தான் எடுத்தெண்டு சொல்லுறியள்" சட்டென எழுந்தவன் சால்வையை உதறிப் போட்டுக் கொண்டு போய்விட்டான். நான் கொடுத்த தேநீர் ஆறிப்போய்க் கிடந்தது.

அன்று போனவன்தான். வரமாட்டான் என்று தான் எண்ணியிருந்தோம். போய்க் கூப்பிடக்கூட எங்களிடம் திராணியில்லை. பிழை எங்களுடையது. எப்படி அவன் முகத்தைப் பார்க்க முடியும். "கந்தையா, மன்னிச்சுக் கொள்." வீட்டுக்கு வெளியே வந்தார் இவர். "மண்வெட்டிப் பார்சலுக்கு மேலை ஆரோ பழைய சாக்குகளைக் கொண்டுபோய்ப் போட்டுட்டினம். பிறகு தேடிப்பார்க் கேக்கைதான் கண்ணிலை பட்டுது." இவர் சொல்லிக் கொண்டே கந்தையாவின் கைகளைப் பற்றிப் பிடிக்கப் போவதற்கு முன்னர் இவரின் காலடியில் கிடந்தான் கந்தையா. வீழ்ந்து கிடந்த கந்தையா என் மனதில் உயர உயரச் சென்று கொண்டிருந்தான். இவர் முகத்தைப் பார்க்கத்தான் எனது மனம் கூச்சப்பட்டது.

நான் கூட அவன் இடத்தில் இருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கோபப் பட்டிருப்பேன். "இவர்" தான் கொஞ்சம் அதிகமாக வாயை திறந்து கொண்டார். "வயது போன நேரத்தில் வாயடக்கம் தேவை" என்று படித்துப் படித்துச் சொன்னாலும் மனுசன் கேட்க மாட்டார். "நான் தான் அதிகம் அந்த விடயத்தைக் கலவரப்படுத்தி விட்டேனோ?" என்று மனம் கூசியது. அதனால் கந்தையாவைப் நேராகப் பார்க்க கொஞ்சம் கஷ்டமாகக் கூட இருந்தது.

**செய்த பாவத்தைச் சரிவரப் புரிந்து கொண்டால் மன்னிப்புக் கிடைக்கும் என்கிறது ஆன்மிகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுமலர்ச்சி...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்த வியாபாரிகள் சிங்கள வியாபாரிகளைவிட குறைந்த விலையில் பண்டங்களை விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. சிங்கள வியாபாரிகள் இந்நிலைமையில் வெற்றிகொள்வதாயின் பகைமை உணர்வை வெளிப்படுத்துவதன்மூலம் அதனைச் செய்ய முடியாது. வங்கிகளில் இருந்து வட்டியுடன்கூடிய கடனைப்பெறும் நிலைப்பாட்டை அவர்கள் மாற்றியமைக்க வேண்டும். பகைமை உணர்வை பரப்புவதன்மூலம் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதோடு அவர்களது வியாபாரமும் வீழ்ச்சியடையும். மேலும் இத்தகைய சம்பவங்கள் பொதுவாக இலங்கையின் பொருளாதாரம் மீது பாதகமான அழிவுத் திசையிலேயே தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சிங்கள வியாபாரிகள் தமது தொழில் முயற்சிகளின் பங்குகளை சந்தையோடு தொடர்புடைய நவீன வியாபாரக் கம்பனிகளாக மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும் கடன்களை விநியோகிக்கும்போது உரித்துரிமை மேற்படி கம்பனிகளுக்கு கிடைக்கும் வகையில் வட்டி அறவிடா முறையில் கடன்களை வழங்க வேண்டும். இதன் மூலம் வியாபாரத்துக்கு அவசியமான மூலதனத்தைப் பெறுவதற்கான ஆற்றல் கிடைக்கிறது.

அப்போது சிங்கள வியாபாரிகளுக்கும் தன்னம்பிக்கையுடன் போட்டியிட்டு முஸ்லிம் வியாபாரிகளுடன் செயற்பட முடியும். மேற்படி ஆற்றலைப் பெறுவதற்கு மேலதிகமாக முஸ்லிம் வியாபாரிகளுக்கிடையே நிலவும் வியாபார ஒழுங்கை சிங்கள வியாபாரிகளும் அனுசரித்து மேம்படுத்த வேண்டுமெனவும் நான் வலியுறுத்தினேன். முஸ்லிம் வியாபாரம்பற்றி என்னிடம் கேள்வி கேட்ட நபரைப் போலவே சபையோரும் நான் கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டனர் என எனக்குத் தோன்றியது.

கிராமிய விவசாயப் பிரதேசங்களில் நடத்தப்படும் கலந்துரையாடல்களின்போது நச்சுத்தன்மையற்ற பயிர்ச் செய்கை என பெயரளவில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கை, இதுவரை சிறுநீரக நோய்க்கான காரணத்தை சரியாக அடையாளம் காணாது, விவசாய இரசாயனப் பொருள்களின் பெறுபேறே இதற்கான காரணம் என்ற தவறான கருத்து என்பன பற்றியும், பயிர்களை வனவிலங்குகளுக்கு உண்ண இடமளித்து விவசாயிகளுக்குப் பதிலாக வன ஜீவராசிகளைப் பாதுகாக்கும் கொள்கைபற்றியும் நாம் விமர்சன ரீதியாக கருத்துக்களை முன்வைத்தோம். மேற்ப்டி விமர்சனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து சாதகமான பிரதிபலிப்பே கிடைத்துள்ளது. மறுமலர்ச்சி இயக்கம் நாடு பூராகவும் பல்வேறு பிரதேசங்களில் நடைமுறைப்படுத்திவரும் கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் உரையாடல்கள் காலம் கடந்த பாரம்பரிய கருத்தியலுக்கு எதிராக புதிய திசையில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். அதேசமயம் இக்கலந்துரையாடல்கள் மறுமலர்ச்சி இயக்கத்தின் கருத்தியலை பொதுமக்கள் என்ற கல்லில் போட்டு பட்டைதீட்டப்பட வேண்டுமெனவும் நாம் கவனத்தில்கொள்ள வேண்டி உள்ளது. இது மறுமலர்ச்சி இயக்கத்தின் கேந்திர சக்தியான அத்திபாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கும், மேலதிகமாக சிதைந்துபோயுள்ள தேசத்தை ஒன்றுதிரட்டி, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளும் ஒரு பெரும் முயற்சியாகவும் கருதவேண்டும். (முற்றும்)

# மறுமலர்ச்சி இயக்கம்: கலந்துரையாடல் வழிமுறைகள் அபிலாஷைகள்

சிங்கள மூலம் :
விக்டர் ஐவன்
தமிழில் :
சபாபதி சிவகுருநாதன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் தமக்குக் கிடைக்கும் நிதிக்கு ஏற்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் சிறு எண்ணிக்கையான அமைப்புக்கள் இருக்கின்றன. சித்திரவதைகளுக்கு ஆளாவோருக்கு பாதுகாப்பையும், அவர்களது உரிமைகளையும் வென்றெடுப்பதற்கு 'ஜனசங்சதய' என்ற அமைப்பு செயற்பட்டு வருகிறது. வெளிநாட்டு உதவியில்லாமலும் மக்களின் அன்பளிப்புக்களுடனும் இலங்கையில் சமூக இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியுமென மறுமலர்ச்சி இயக்கம் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளது.


நாம் சிறு எண்ணிக்கையினர் ஒன்றிணைந்து இலங்கையை மீட்க முடியுமென நம்பவில்லை. மேற்படி குறிக்கோளை வெற்றிகரமாக அடைவதால் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கையின் வெகுஜனங்களும் செயற்பாட்டு ரீதியாக பங்குபற்ற வேண்டும். மேற்படி குறிக்கோள் மக்களின் உண்மையான குறிக்கோளை நோக்காகக் கொண்டு இருப்பின், பொதுமக்கள் தமது உழைப்பையும், அறிவையும் மாத்திரமல்லாமல் நிதியையும் அதற்கு ஒதுக்குவார்கள். பெரும் குறிக்கோள் ஒன்றை அடைவதற்கு பெரும் முயற்சியும், உழைப்பும் இருத்தல் வேண்டும். மேற்படி இலக்கை குறிக்கோளாகக் கொண்டே மறுமலர்ச்சி இயக்கம் பயணித்து வருகிறது.

**கருத்தியலைப் பட்டை தீட்டுதல்**

மறுமலர்ச்சி இயக்கத்துக்கு ஒரு கருத்தியல் இருக்கிறது. ஆனால், அது பூரணத்துவம் அடைய வேண்டிய அண்ணளவான கருத்தியலே தவிர பூரணத்துவம் வாய்ந்த கருத்தியல் அல்ல.. அது கடந்தகால நிலப்பிரபுத்துவ செயற்பாடுகளைப் பற்றியும் காலனித்துவ யுகத்தைப்பற்றியும், சுதந்திரத்தின் பின்னர் நிகழ்காலம் வரையிலான காலகட்டம் பற்றியும், விமர்சன ரீதியான பகுப்பாய்வு இருத்தல் வேண்டும். அதேசமயம், இலங்கை முகம்கொடுத்துள்ள நெருக்கடிநிலை பற்றியும் விமர்சன ரீதியான பகுப்பாய்வு இருத்தல் வேண்டும்.

தற்போது செயற்படுத்தப்படும் கலந்துரையாடல் முறை, மறுமலர்ச்சி இயக்கத்தின் கருத்தியலை பட்டை தீட்டிப் பார்க்கும் முக்கிய தருணமென குறிப்பிட வேண்டும். நாம் சிங்கள மக்கள் மத்தியில் செல்லும்போது சிங்கள இனவாதத்தை விமர்சிக்கின்றோம். அதேசமயம் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் செல்லும்போது தமிழ், முஸ்லிம் இனவாதத்தையும் விமர்சித்து வருகிறோம். சிங்களம் அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட விடயம்பற்றி முஸ்லிம் சமூகத்தின் பிரவேசம் பற்றி நான் விமர்சித்தேன்.

மார்ச் 25 ஆம் திகதி 'திஹாரியில்' இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போது, அரசகரும மொழியாக சிங்களம் பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு முஸ்லிம் சமூகம் ஆதரவு தெரிவித்த போது, சிங்கள, தமிழ் பேதம் காரணமாக ஒருவர் பயன்பெறும் நிலைக்கு செல்வதன்மூலம் ஓர் தீவிரவாதப் பயணத்தை போஷிக்குமென நான் குறிப்பிட்டேன். அவர்கள் அந்த விமர்சனத்தை ஆழமாக செவிமடுத்தனரேயொழிய அதன் காரணமாக என்னுடன் மோதவில்லை. யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் தமிழ் தீவிரவாதத்தை நான் விமர்சித்தேன். சிங்கள இனவாதத்துக்கு பிரதிபலிப்பாக இறுதியில் மேற்கொள்ளும் தீவிரவாத நிலைப்பாடு நாட்டில்



பெரும் அழிவை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்ததென நான் கூறினேன். எனது விமர்சனத்தையிட்டு அவர்கள் ஆத்திரமடையவில்லை. சிங்களப் பிரதேசங்களுக்குச் சென்று மேற்கொள்ளும் கலந்துரையாடல்களின்போது சிங்கள இனவாதத்தை விமர்சித்தபோதிலும் எந்தவொரு கலந்துரையாடலிலும் அவர்கள் ஆத்திரமடையவோ, தமது எதிர்ப்பை தெரிவிக்கவோ இல்லை. சிங்களம் மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் செல்லும்போது சிங்களம் மற்றும் தமிழ் சமூகத்தில் சாதி முறைமை காரணமாக நிலவும் பேதங்களைப் பற்றியும் அந்த ஏற்றதாழ்வுகளை இல்லாதொழிக்கும் தேவைபற்றியும் வழக்கமாக நாம் உரையாற்றி வருகிறோம். சில இடங்களில் மேற்படி விடயம் சூடான விவாதங்களுக்குக் காரணமாக அமைந்தாலும், இக்கலந்துரையாடல்கள் மக்கள் மத்தியில் ஆர்வத்தைத் தூண்டுகின்றனவேயொழிய, பெரும் எதிர்ப்புக்குக் காரணமாக அமையவில்லை. மறுமலர்ச்சி இயக்கம் சமூகத்தில் நிலவும் கருத்தியலின் சார்பில் செயற்படும் ஓர் இயக்கமாக அமையாது, சமூகக் கருத்தியலை [illegible] உட்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்ட ஓர் இயக்கமாகும். எனவே, சமூகத்தில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஜனரஞ்சகமான நம்பிக்கைகளை கேள்விக்குட்படுத்துவதற்கும், விமர்சிப்பதற்கும் நாம் தயாராகி உள்ளோம். ஆனால், மேற்படி விமர்சனங்கள் பொதுமக்கள் மத்தியில் ஆர்வத்தைத் தூண்டுபவையாக அமைகின்றதேயொழிய மக்கள் மத்தியில் எதிர்ப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையமாட்டாது.

மாத்தளையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது முஸ்லிம் சமூகத்தின் வியாபாரம் பற்றி ஒரு சூடான விவாதம் ஏற்பட்டது. அக்கலந்துரையாடலில் பங்குபற்றியவர்களில் அதிகமானோர் சிங்களவராவர். அதற்கு மேலதிகமாக அங்கு இரண்டு முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவர்களும், ஒரு மலையகத் தமிழரும் இருந்தனர். நாம் மாத்தளைக்குச் சென்றபோது சிங்களக் கடைகளில் பொருள்களை விலைக்கு வாங்கவேண்டுமென வலியுறுத்தி நகரத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. சிங்களக்கடைகளில் தேசியக்கொடி ஏற்றப்பட்டிருந்ததையும் காணமுடிந்தது. சிங்கள, தமிழ் புத்தாண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்படும் வியாபார நடவடிக்கைகளின்போது முஸ்லிம் கடைகளுக்குச் செல்லாமல் சிங்களக் கடைகளுக்கு வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுக்கும் குறிக்கோளுடனேயே மாத்தளை சிங்கள வியாபாரிகள் சங்கம் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

இக்கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்த இக்கருத்தியலின் சார்பில் தோன்றிய ஒரு நபர், முஸ்லிம் சமூகத்தின் வியாபார முயற்சிகளைப்பற்றி விமர்சித்தார். எனவே, அக்கருத்துபற்றி நான் பிரதிபலிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. குறிப்பாக தயாரித்த ஆடைகள் விற்பனை செய்வதற்கு [illegible] முஸ்லிம் வியாபாரிகள் சிங்கள வியாபாரிகளை விஞ்சி முன்னணியில் நிற்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலைமை சிங்கள வியாபாரிகளின் பொறாமைக்கும், கோபத்துக்கும் காரணமாக அமைந்துள்ளது.

வியாபாரம் முஸ்லிம் சமூகத்தின் மரபு வழிப் பண்பாகும். அநுராதபுர யுகத்தில் இருந்தே நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரம் முஸ்லிம் சமூகத்தின் கையில் இருந்ததெனவும், சிங்களவர்கள் ஆதிகாலத்தில் இருந்தே பிரித்தானிய யுகம்வரை வியாபாரத்தை ஓர் தரக்குறைவான தொழிலர்கக் கருதியதாகவும், நான் எடுத்துக்கூறினேன். மேலும், இப்பிரச்சினையை அவர்களுக்கு விளக்கிக்கூற நான் முயற்சித்தேன். ஓரளவு சிறு அளவிலேனும் ஒல்லாந்தர்களின் காலத்திலேயே சிங்கள சமூகத்தினர் வியாபாரத்தில் இணைந்தனர் எனவும் குறிப்பிட்டேன். பிரித்தானியர் காலத்தில் மேற்படி போக்கு வளர்ச்சியடைந்தது. பிரித்தானிய யுகத்தில் முஸ்லிம் வியாபாரிகள் சாராய விற்பனையில் ஈடுபடாத காரணத்தால், சாரய வியாபாரம் அதிகமாக சிங்கள வியாபாரிகளின் கைகளிலேயே இருந்தது. ஆனால், சாராய வியாபாரம் அதிக இலாபத்தை ஈட்டக்கூடிய ஒரு வியாபாரமாக இருந்தாலும் வியாபாரத்தின் நுட்பங்களைக் கற்றுக்கொள்ளக்கூடிய தொழிலாக அது அமையவில்லை. பிரித்தானிய யுகத்தில் செயற்பட்ட பெரும் வியாபாரிகளாத அல்லது வணிகமையங்களின் சொந்தக்காரர்களாக சிங்களவர்கள் வளர்ச்சியடைந்தனர். ஆனால், ஒருசிலர் மாத்திரமே இத்துறையில் முன்னேற்றம் கண்டனர். இதன்போது அநாகரிக தர்மபாலவின் தந்தை (டொன் கரோலிஸ் ஹேவா வித்தாரன) முக்கிய பாத்திரத்தை வகித்தார். நீண்டகால அனுபவம் காரணமாக வெற்றிகரமான வியாபாரிகளாக மாறும் கட்டுப்பாடும் ஆற்றலும் இலங்கையில் முஸ்லிம் சமூகத்துக்கே கூடுதலாக இருந்து வந்தது.

முஸ்லிம் கடைஒன்றுக்கு பிரவேசிக்கும் வாடிக்கையாளர் ஒருவர், அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஸ்பரிசித்து, நீண்டநேரம் அங்கு தங்கி, விலைகளை விசாரித்து, ஒரு பொருளையும் விலைக்கு வாங்காமல், கடையில் இருந்து வெளியேறினாலும், மேற்படி வாடிக்கையாளர் முஸ்லிம் வியாபாரியின் கோபத்துக்கு ஆளாக மாட்டார். ஆனால், இது சிங்கள வியாபார நிலையத்தில் இடம்பெற்றால், வாடிக்கையாளர் சிங்கள வியாபாரியின் கோபத்துக்கு ஆளாவார். மறுபுறம் தைத்த ஆடைகள் விற்பனையில் பிரதான முஸ்லிம் கடைகளை தெரிவு செய்வதற்குக் காரணம், பல வகை ஆடைகள் அங்கு விற்பனைக்கு இருப்பதாகும். அதே சமயம் அங்கு விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ள தைத்த ஆடைகளை நன்கு பரிசீலனை செய்வதற்கான உரிமையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வழி முறை மேற்படி வியாபார நிலையங்களில் உண்டு. மறுபுறம் தைத்த ஆடைகளை விற்பனை செய்யும் சிங்களக் கடைகளை விட முஸ்லிம் கடைகளில் விலை மலிவு.

முஸ்லிம் வியாபார நிறுவனங்கள் வங்கிகளில் இருந்து பெறும் கடன் தொடர்பான மூலதனத்தில் வட்டி உள்ளடக்கப்படாமையும் இம்மலிவு விலைக்கு ஒரு காரணமாகும். சிங்கள வியாபார நிறுவனங்கள் வங்கிகளில் இருந்து கடனாகப் பெறும் மூலதனத்தைப் பொறுத்தவரை வட்டியும் அதில் உள்ளடக்கப்படுகிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாய்ப்பன்

ஈழத்தின் தனித்துவமான உணவு வகைகளில் வாய்ப்பனும் ஒன்று. யாழ்ப்பாணத்தின் தீவகப் பிரதேசங்களில் பிரபல்யம் பெற்ற இந்த உணவு வகை இன்று இலங்கையின் பெரும்பாலான உணவகங்களில் கிடைக்கிறது. இன்று புலம்பெயர் தேசங்களிலும் வாய்ப்பன் அனைவருக்கும் பரிச்சயமான சிற்றுண்டி.

இந்தச் சிற்றுண்டியை இந்தியாவின் கேரளாவின் பழம்பொரியுடன் ஒப்பிடுவர். இதற்குக் காரணம் இந்த இரு உணவுகளினதும் பிரதான மூலப்பொருள்களாக வாழைப்பழம், மா, சீனி இருப்பதுதான்.

**வாய்ப்பன் செய்முறை:**

தேவையான பொருள்கள் : நன்கு கனிந்த வாழைப்பழம் - 5 (பெரிது)

கோதுமை மா - 400 கிராம்

அப்பச்சோடா - தேவையான அளவு

சீனி - 100 கிராம்


உப்பு - தேவையான அளவு

எண்ணெய் பொரிப்பதற்கு

செய்முறை : கோதுமை மாவுடன் அப்பச்சோடா, சீனி, உப்பு என்பவற்றைச் சேர்த்து நன்கு கலக்கவும். வாழைப்பழங்களின் தோலை உரித்து விட்டு நன்கு மசித்து மா கலவையுடன் சேர்க்கவும். ரொட்டிக்கு குழைப்பது போல் பதமாகும் வரை பிசையவும். தேவைப்பட்டால் தண்ணீர் சிறிதளவு சேர்க்கவும்.

கலவையை சில மணி நேரம் - குறைந்தது 2 மணித்தியாலம் வைத்துப் பின்னர், சிறு சிறு உருண்டைகளாக்கவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி நன்கு கொதித்த பின்னர் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

# நீற்றுப்பெட்டி



யாழ்ப்பாணத்தவர்களின் உணவுப் பட்டியலில் முதன்மையான இடம் பிட்டுக்கு உண்டு. பிட்டு அவிக்க நீற்றுப்பெட்டி, குழல் என்பவை மரபுவழியாகப் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் நீற்றுப் பெட்டியில் அவிக்கப்படும் பிட்டே பிரபலம்.

பனை ஓலையில் மட்டுமே நீற்றுப் பெட்டி செய்யப்படுகிறது. குருத்து ஓலையை அளவாக சீவி கூம்பு வடிவில் நீற்றுப் பெட்டி இழைக்கப்படும். எனினும் அதனை இறுக்கமாக இழைக்க மாட்டார்கள். நீராவியாலேயே பிட்டு அவிக்கப்படும். இதனால் நீராவி செல்லும் வகையில் கொஞ்சம் தளர்வாகவே இருக்கும். சில நீற்றுப் பெட்டிகள் துளைகள் இருக்குமாறும் இழைக்கப்படுவதுண்டு.

தற்போதும் நீற்றுப் பெட்டிகள் பயன்பாட்டில் இருக்கின்றன. இப்போது அலுமினியத்தில் செய்யப்பட்ட குழல் அறிமுகத்தால் நீற்றுப் பெட்டி பாவனை குறைந்து வருவது கவலைக்குரியது.




# நீர்வேலி

வரலாற்றுக் காலந்தொட்டே நீர்வேலிக் கிராமம் மிகப் பிரசித்தி பெற்றது. விவசாயப் பாரம்பரியம் மிக்க இக்கிராமத்துக்கு நீரை வேலியாகக் கொண்டமையால் நீர்வேலி எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது. இப்பகுதியில் நீர் மேலோட்டமாக இருப்பதால் வாழைகள் செழித்து வளர்கின்றன. இதனால் இந்த ஊருக்கு கதலிவனம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இங்கு விளையும் வாழைப்பழங்களுக்கு இலங்கை முழுவதும் நல்ல வரவேற்பு உள்ளது. வாழைகளின் அதீதத்தால் அது சார்ந்த கைவினைப் பொருள்களின் உற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கம்மாலை வேலைகளுக்கு பிரபல்யமான நீர்வேலி கிராமத்தில் உற்பத்தியாகும் கத்தி, பூட்டுக்கள் நாடுமுழுவதும் பெரும் புகழ் பெற்றவை. சிற்ப வேலைகள், பிற கைத்தொழில் உற்பத்திகளுக்கும் நீர்வேலி புகழ்பெற்றது. பல கல்விமான்களை உருவாக்கிய இந்த மண்ணில்தான் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர், எழுத்தாளர் நீர்வை பொன்னையன் போன்றோர் பிறந்து பெரும்பணியாற்றினர்.

அரசகேசரிப் பிள்ளையார், கந்தசுவாமி கோயில், வாய்க்கால்தரவைப் பிள்ளையார் போன்றவை புராதன காலம் தொட்டு புகழ்பெற்றவை. செல்வக்கதிர்காம சுவாமி ஆலயம், காமாட்சியம்பாள் ஆலயம், ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், காளியம்பாள் ஆலயம், மீனாட்சியம்மாள் ஆலயம் எனப் பெருங்கோயில்களும் வைரவர், காளிக்கு சிறுகோயில்கள் பலவும், பரலோக மாதா தேவாலயமும் அமைந்துள்ளன.

தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீர்வேலி மண்ணின் பங்கு மிகப்பெரியது. கப்டன் அக்காச்சி என அறியப்பட்ட சிவகுமாரன் சிறீகாந்தன் விடுதலைப் புலிகளின் ஆரம்ப காலம் தொட்டே பங்காற்றியவர். 1989 செப்ரெம்பர் 15 ஆம் திகதி வீரமரணம் அடைந்தவர். இவரின் வழியைப் பின்பற்றி ஏராளமான இளைஞர், யுவதிகள் புலி வீரர்களாகி போராட்டத்தின் முக்கிய பங்காளர்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


கப்டன் அக்காச்சி

# இரணைமடுக் குளம்

இரணைமடுக்குளம் வடக்கு மாகாணத்தின் மிகப் பெரிய நீர்த்தேக்கம். இந்தக் குளத்தின் மூலம் 20 ஆயிரத்து 882 ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன. நீண்ட போர் நடந்தபோது - பொருளாதாரத் தடையில் சிக்கியபோது வடக்கு மக்களின் உணவுத் தேவையில் ஒரு பகுதியை நிறைவு செய்ய உதவியது இரணைமடுக்குளமே.

பிரித்தானியர் ஆட்சியின்போது சேர் ஹென்றி பொட் என்பவர் 1885 இல் இரணைமடுக்குளத்தை அமைக்கும் திட்டத்தை முன்வைத்தார். 1900 ஆம் ஆண்டு பிரிட்டனில் இருந்து வந்த பிரவுண் இடத்தைப் பார்த்து ஆய்வு செய்தார். 1902 ஆம் ஆண்டு குளம் கட்டும் பணி தொடங்கியது.

1920 இல் இந்தப் பணி நிறைவடைந்தபோது 19 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டிருந்தது. பின்னர் காலத்துக்கு காலம் விஸ்தரிக்கப்பட்டது. இந்தக் குளம் அமைக்கப்பட்ட பின்னரே பெருமளவான குடியேற்றங்கள் கிளிநொச்சியில் இடம்பெற்றன. எனினும் இப்பகுதியில் முன்னர் குளம் இருந்ததாகவும், அதனையே பிரித்தானியர்கள் விஸ்தரித்தனர் என்று கூறுவோருமுள்ளனர். இதற்கு சான்றாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இப்பகுதியில் குடியிருப்புக்கள் இருந்தமைக்கான சான்றுகளும் உள்ளன.

போர்க் காலத்தில் வடக்கு மாகாணம் முழுமையையும் ஒன்றிணைக்கும் சக்தியாக இருந்த இரணைமடுக்குளம் அரசியல்வாதிகளின் குறுகிய போக்கால் - வாக்கு அரசியலால் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களிடையே பிரதேசவாதக் கருத்துக்கள், மோதல்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் மஹிந்தவின் ஆட்சி வந்தால்...?

ஒரு கற்பனை

■ ஸபர் அஹமட்

1. முஸ்லிம் எம்.பிக்கள் எல்லாம் வழக்கம்போல அமைச்சுப் பதவிகளில் இருப்பார்கள்.இலாகாக்களும், வாகனங்களும்,பாதுகாப்புப் பொலிஸாரும், அவர்களின் மோப்ப நாய்களும் மட்டுமே மாற்றமடைந்திருக்கும். மற்றபடி சமூகத்தின் எல்லாப் பிரச்சினைகளும் பத்து நாளாக கழுவ வேண்டிய பெரும் அழுக்குத் துணி மலைபோல அப்படி அப்படியே இருக்கும்.

2. எந்த அரச உற்சவங்களிலும் 'அப்பம் ' பரிமாறக் கூடாது என்று மஹிந்தவின் 'கிச்சன் கபினெட்'டில் இருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கும்.

3 . அமைச்சர்மார்களின் வீடுகள், படுக்கை அறை முதல் குளியலறை வரை சீ.சீ.ரீ.வி. கமரா பொருத்தப்பட்டு இருக்கும். இதை எல்லாம் அவதானிக்க ஒரு விசேட பிரிவு அலரி மாளிகையில் இருந்து இயங்கிக் கொண்டு இருக்கும்.

4 . பொன்சேகாவுக்கு எதிராக எழுபத்து சொச்சம் வழக்குகளும் ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக அவருக்கே எண்ண முடியாத அளவுக்கு வழக்குகளும் பதிவாகி இருக்கும். முன்னாள் மத்திய வங்கி தலைவர் உட்பட தற்போது உச்சத்தில் இருக்கும் பலருக்கு நிரந்தரச் சிறை தயராகி இருக்கும்.

5. வடகொரியா ஜனாதிபதி உயிருடன் இருந்தால் நாட்டுக்கு வருவார். ரொக்கட் சயன்ஸ் படித்து இருக்கும் மஹிந்தவின் இளைய மகன் ரோஹித்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து பொன் மாலைப் பொழுது ஒன்றில் கோல் ஃபேஸில் ஏவுகணை விடுவார். அது 'யூ டேர்ன்' அடித்து வந்து எங்கோ குடைக்குள் இருக்கும் காதல் ஜோடியின் மேல் விழுந்து வெடித்துச் சிதறும். இந்தச் செய்தி மறு நாள் பத்திரிகைகளில் வராமல் இருட்டடிப்பு செய்யப்பட்டு இருக்கும் அதேவேளை, 'ஏகாதிபத்திய அமெரிக்கா முதலாளி வர்க்கமே ஒழிக' என்று கூட்டறிக்கைவிடப்பட்டு இருக்கும்.

6. சொப்பன சுந்தரி ஞானசாரவை தற்போதைய ஆட்சியாளர்கள் வைத்திருப்பது போன்று மஹிந்த ஆட்சி செய்யும்போது அவர் அரசில் யாராவது வைத்திருப்பார்கள். மாவனல்லையிலோ, அளுத்கமையிலோ, கண்டியிலோ கூட்டம் வைப்பார். 'ஆறு மணிக்கு முன்பு வீடுகளுக்கு போய்விடுங்கள்' என்று நியூஸ் சேவை நடத்துபவர்கள் எமக்கு எஸ்.எம்.எஸ். அனுப்புவார்கள்.

7. உலமா சபையின் தலைவராக தற்போதைய தலைவரே இருப்பார். சமூகம் வழக்கமாக எதிர்கொள்ளும் நெருக்கடிகளில் எந்தவித மாற்றமும் இருக்காது படியால் எல்லாமே பழைய பாடத்திட்டம். ஆகவே தீர்வு சொல்வதில் எந்தத் தயக்கமும் சபைக்கு இருக்காது...அதே கோட், அதே டெய்லர்.....அதே வாடகை.........!

8. ஐ.தே.க. தலைவர் ரணில் கொள்ளுப்பிட்டி ஐந்தாம் லேனில் உள்ள தனது வீட்டில் சோர்ட்ஸ் அணிந்து பர்கர் சாப்பிட்டுக் கொண்டு இருப்பார். இங்கிலீசில் யோசித்து கஷ்டத்துடன் சிங்களத்தில் யாருடனாவது பேசிக் கொண்டு இருப்பார்.

9. இலங்கையில் சீனா மெட்ரோ ரயில் சேவை வேலைகளை ஆரம்பிக்கும். நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படத் தொடங்கும். சீனர்களுக்கு இலங்கையில் வசிக்க இரட்டை பிராஜவுரிமை வழங்கப்படும் என்பதால் அதை எதிர்த்து ஜே.வி.பியினரும் பல்கலை மாணவர்களும் ஆர்ப்பாட்டம் செய்வர்.

10. அநேகமாக இம்முறை உலமாக்கட்சித் தலைவர் முபாரக் மௌலவி, தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தில் இருப்பார். உடனுக்குடன் லைவ் வீடியோ, பதிவுகள் என்று வேற லெவலில் அசரவைப்பார். கடைசியாய் அவர் போட்ட பதிவுக்கு நான்கு மணி நேரத்தில் 42 லைக்ஸ் வந்து இருக்கும். மௌலவியைக் கலாய்த்து கமெண்ட்ஸ் எழுதிய ஏழெட்டு ஆசாமிகள் புளொக் செய்யப்பட்டு இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பும் புலிகளும்

# தனது மனதில் பரமதேவாவுக்கு உயரிய இடம் வழங்கிய பிரபா!

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரிடம் ஒப்படைத்திருந்தார் பிரபாகரன். திருமலைக்குச் சென்ற சந்தோசம் அப்போது ஆதரவாளராக இருந்த மனோ மாஸ்டரையும் அழைத்துக்கொண்டு சென்றார். டாக்டர் ஜெயகுலராஜாவைத் தவிர ஏனையோரைத் திருமலை வழியாகச் சந்தோசம் அழைத்துச் சென்றார்.

டாக்டரை பசீர் மட்டு. சிறைக்கு அண்மையிலுள்ள டானியலின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து மன்னார் வழியாகப் பரப்புக்கடந்தானில் உள்ள தமது இல்லத்துக்குப் போகவேண்டும். மட்டுநகரிலிருந்து பேருந்தில் பயணமாவதால் யாருடைய கண்ணிலாவது சிக்க நேரிடும். எனவே சித்தாண்டிக்குச் சென்று அங்கு இரவு தங்கி விட்டு காலையில் அங்கிருந்து புறப்படுவது பாதுகாப்பாக இருக்கும் எனக் கருதினார்.

அங்கே கிழக்கின் முதல்போராளி யோகனின் (பாலிப்போடி சின்னத்துரை) வீடு உள்ளது. அங்கே இவர்கள் சென்ற சிறிது நேரத்தில் கவிஞர் காசியானந்தனும் குடும்பத்துடன் வந்து சேர்ந்தார். தலைமன்னாரில் இருந்து கப்பல் மூலம் பயணமாவது அவரது திட்டம்.

இரு பகுதியினரதும் ஐடியாவும் ஒரே மாதிரி அமைந்ததுதான் சிக்கல். காசி அண்ணா பிரபலமானவர். அவர் போகும் வண்டியைச் சோதனை செய்ய முயன்றால் இவர்களுக்கும் சிக்கல் வந்துவிடும். எனவே நிச்சயமாக அவர் போகும் பேருந்தில் பயணிக்கக்கூடாது என பசீர்,யோகன், டாக்டர் என மூவரும் தீர்மானித்தனர். எனவே வவுனியாவுக்கான பேருந்தில் போக முடிவெடுத்தனர்.யோகன் தனது தாயாரையும் இவர்களையும் அடுத்த நாள் காலை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றிக்கொண்டு வாழைச்சேனை வரை போய் அங்கிருந்து வவுனியாவுக்கு வழியனுப்பி வைத்தார்.

மறு நாள் பரப்புக்கடந்தானில் இருந்து கல்லேற்றும் லொறி, இ.போ.ச பஸ், படகு என்பவற்றில் பயணித்து கேரதீவு வழியாக யாழ்ப்பாணத்துக்கு டாக்டரைக் கூட்டிச் சென்றார் பசீர்.

எல்லாம் முடிந்துவிட்டது. இந்தச் சாதனைகளுக்குச் சொந்தக்காரர் தாமே என புளொட் அறிவித்தது. இல்லை இல்லை நாங்கள் தான் என்றது ஈ.பி.ஆர்.எல்.எவ். அடுத்துப் பனாகொடை மகேஸ்வரனின் தமிழீழ இராணுவம் தாங்களே இந்தச் சாதனையாளர்கள் என்றது. மூன்று பகுதியினரும் பரமதேவாவுக்கு நன்றி தெரிவித்தனர். எல்லா அறிக்கைகளும், உரிமை கோரல்களும் பேட்டிகளும் இந்திய - இலங்கைப் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குப் பரபரப்பான தீனியாகின.

தமிழகத்தில் பேட்டியளித்த டக்ளஸ், தான் துண்டுப் பிரசுரம் வழங்குகையிலேயே கைதானதாகத் தெரிவித்தார். எல்லாவற்றையும் வாசித்த பரமதேவா புன்முறுவலுடன் அதைக் கடந்தார். தமிழகத்தில் மட்டு. சிறையின் பெரிய வரைபடத்தை வைத்து, தாங்கள் எவ்வாறு அரசியல் கைதிகளை மீட்டோம் என்று கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்து விளக்கிக்கொண்டிருந்தனர் ஈ.பி. ஆர்.எல்.எவ்வினர். பரமதேவா அங்கு சென்றார். தன்னைக் கண்டதும்



தலைவர் பிரபாவுடன் பரமதேவா

அந்தச் சிறையிலிருந்து மீண்டு வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரமுகர் ஒருவர் "நாங்கள் நிதி சேகரிப்புக்காகத்தான் இதனைச் செய்கிறோம். தயவு செய்து இங்கு விளக்கமளிப்பவர்களிடம் கேள்வி எதுவும் கேட்டு விடாதீர்கள்" என்று தனது கையைப் பிடித்துக் கெஞ்சியதாகப் பரமதேவா புலிகள் இயக்கத்தவர் ஒருவரிடம் குறிப்பிட்டார். அவரது வேண்டுகோளுக்கு மதிப்பளித்து அங்கிருந்து திரும்பி வந்துவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்

சித்தா, தம்பிராஜா, தவம் (நாசர்) மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை (லூக்காஸ்), பாலிப்போடி செல்வநாயகம் (செல்வம் - யதுகுலன்) ஆகியோர் தமிழீழ இராணுவத்தில் சேர்ந்துகொண்டனர். இதே இயக்கம் கோடிக்கணக்கான பணம், நகைகளைக் காத்தான்குடி மக்கள் வங்கியைக் கொள்ளையிட்டதன் மூலம் பெற்றுக்கொண்டது. இதில் வரதனின் பங்களிப்பு மிகப்பெரியது. தம்மைக் காட்டிக் கொடுத்ததாக இந்த இயக்கம் ஆரையம்பதியைச் சேர்ந்த கோணா மலை என்பவரைச் சுட்டுக்கொன்றது. மற்றொருவர் இறந்தவர்போல் நடித்து உயிர் தப்பினார். ஒருசில தாக்குதல்களை இந்த இயக்கம் மேற்கொண்டது. யாழ்ப்பாணத்தில் சுவிப் ரிக்கெற் விற்பனையில் ஈடுபட்டது. ஒபரோய் தேவனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலை இராணுவத்தை தான் தடை செய்வதாக அறிவித்தது.

பின்னர் சித்தா, தம்பிராஜா முதலானோர் தமிழீழ இராணுவத்தில் இருந்து விலகி புலிகளில் இணைந்து கொண்டனர். இவர்களில் மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை (லூக்காஸ்) என்பவர் புளொட் மோகனால் சுட்டுக்கொல்லப்பட்டார். பாலிப்போடி செல்வநாயகம் (செல்வம் - யதுகுலன்) ஈ. பி.ஆர்.எல்.எவ்வினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

துன்னாலை - கரவெட்டியைச் சேர்ந்த ஜெயா, மனோ, ஆகியோர் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

வரதன் கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் விடுதலையானார்.

வரதன் 1990 இல் புலிகளுடன் இணைந்து நடவடிக்கைகளுக்காகக் கொழும்பு சென்றார்.

ஏற்கெனவே இவர் சிறையில் இருந்த போது பலதரப்பினரதும் தொடர்புகள் இவருக்குக் கிடைத்தன. அவற்றைச் சரியாகவே பயன்படுத்தினார். சிவராமை ஏதோ ஒருவகையில் புலிகளுடன் தொடர்புபடுத்தியதில் இவருக்கும் பங்குண்டு. கொழும்பில் அரசை அதிரவைக்கும் தாக்குதலொன்றை மேற்கொண்டார்.

இவரது மறைவின் பின் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், காதர் முதலானோர் கைதாக நேர்ந்தது . 1983 இல் பண்டிதரின் தொடர்பு மூலமாகக் காதர் இந்தியாவுக்குச் சென்று புலிகளைச் சந்தித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

பரந்தன் ராஜன் புளொட்டிலிருந்து விலகி உதிரிகளானோரால் உருவாக்கப்பட்ட ஈ.என்.டி.எல்.எவ் வின் தலைவரானார். சிறைக்காவலர் கிருஷ்ணமூர்த்தியும் புளொட்டில் இணைந்து பின்னர் ஈ என்.டி.எல்.எவ் என்று போனார் .

சித்தா குச்சவெளி, ஏறாவூர் பொலிஸ் நிலையங்கள் உட்பட சில தாக்குதல்களில் தனது ஆற்றலை வெளிப்படுத்தினார். இந்திய இராணுவ காலத்தில் மட்டு., அம்பாறை அரசியல்துறை பொறுப்பையும் சிறிது காலம் வகித்தார்.

## தனது மனதில் பரமதேவாவுக்கு உயரிய இடம் வழங்கிய பிரபாகரன்

பரமதேவா புலிகளில் இணைந்து கொண்டார். அவருடன் கைதாகி ஏற்கெனவே விடுதலையாகியிருந்த பொத்துவிலைச் சேர்ந்த ரஞ்சனும் (சைமன் )புலிகளுடன் இணைந்து கொண்டார் இவர் 13.02.1985 கொக்குளாய் இராணுவ முகாம் தாக்குதலில் உயிரிழந்தார் இவர் பொத்துவில் எம்.பி.கனகரத்தினத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

பரமதேவாவுக்கு தனிச் சிறப்பு உண்டு. தனது இயக்கத்தில் சேர்ந்தவர்களில் இவருக்கு மட்டுமே தனி இயக்கம் நடத்த அனுமதி வழங்கினார் பிரபாகரன். வேறு எவருக்கும் இந்த அனுமதி கிடைக்கவில்லை. எனினும் பரமதேவா இதனை ஏற்கவில்லை "எனக்கு நீங்கள் தான் சரியான தலைவராகத் தெரிகிறீர்கள். உங்கள் தலைமையின் கீழ் போராடுவது எனக்குப் பெருமைதான். அத்துடன் எனக்கும் உங்களுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு உண்டு. அது எதிர்காலத்தில் என்னுடன் இணைபவர்களுக்கு இருக்குமோ தெரியாது. வீணான இரத்தக் களரி ஏன்?" என்று சொல்லி மறுத்து விட்டார்.

22.09.1984 இல் களுவாஞ்சிக்குடித் பொலிஸ் நிலையத் தாக்குதலில் உயிரிழந்தார். உயிரிழக்கும் தருணத்திலும் "அம்மாவிடம் போய்ச் சொல்லுங்கள் - நான் களத்தில்தான் இறந்தேன் என்று. அண்ணன் புளொட்டில் இருப்பதால் நாளைக்கு வேறு மாதிரிக் கதைகள் வரலாம்" எனக் கூறினார். போராட்டத்தின் மேலும் இயக்கத்தின் மீதும் அவருக்கு இருந்த பற்றைக்கண்டு அவரைத் தூக்கச் சென்றவர் வியந்து நின்றார்.

பயிற்சி முடிந்து வந்த போராளிகளை அவர்களது பெற்றோரைச் சந்திக்க வீட்டுக்கு அனுப்பிவைப்பது வழக்கம். பரமதேவாவைப் பொறுத்த வரை ஏற்கனவே பிரபலமானவர். இதனைவிட இவரது தாயார் கல்லடி பிரதான முகாமுக்கு அண்மையிலேயே வசித்து வந்தார். அந்த வீடு அவரது சகோதரிக்குச் சொந்தமானது. அந்த வீட்டில் தாயாரைச் சந்திப்பது பல சிக்கல்களை உருவாக்கலாம். எனவே அமிர்தகழியிலோ அல்லது வேறு இடத்துக்கோ அம்மாவை வரவழைத்துச் சந்திக்கலாமே என இவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர் அளித்த பதில் "நான் போராட்ட வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்த பின் எனது அம்மா என்னைக் கைதியாகவே பார்த்துள்ளார். இதுவரை என்னை ஒரு வீரனாகப் பார்க்க முடியவில்லை. மட்டக்களப்பில் மேற்கொள்ளும் ஒரு தாக்குதலில் நான் பங்குபற்றி அதில் கைப்பற்றப்பட்ட ஆயுதமொன்றை ஏந்தியவனாகவே அம்மாவைச் சந்திக்க விரும்புகிறேன்."

இவ்வாறான கனவுகளுடன் இருந்தவரின் மறைவு தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் பாதிப்பாக அமைந்து விட்டது.


கிழக்குக்கான தலைமை அங்கிருந்தே உருவாக வேண்டும் என்பது பிரபாகரனின் எதிர்பார்ப்பு. அதற்கேற்ற வகையில் பொருத்தமானவராகப் பரமதேவா திகழ்ந்தார். அவருக்குச் சமர்க்களத்தில் ஓரிரு அனுபவம் கிடைத்தால் போதும். மிகுதியை அவரே பார்த்துக்கொள்வார். நிர்வாகத்திறன், இலட்சியத்தில் பற்றுள்ளவர்களின் துணை, ஒழுக்கமான வாழ்க்கை எல்லாம் அவருக்கு இருந்தது. அதனால்தான் பல்வேறு வகையான சிந்தனை, நடைமுறைகளைக் கொண்டவர்களை ஒருங்கிணைத்துச் சிறையிலிருந்து இவ்வளவு பேரைத் தப்பவைக்க முடிந்தது என்பதைக் கணித்திருந்ததால்தான் தனியாக இயங்குமாறு பரமதேவாவுக்குக் கூறியிருந்தார்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் பரமதேவா செயற்பட்ட விதம் குறித்து அறிந்ததும் அவரது நம்பிக்கை மேலும் வலுத்தது. கிழக்கில் நடந்த முதல் சமரிலேயே பரமதேவாவை இழந்ததால்தான் போராட்டம் பல சிக்கல்களைச் சந்தித்தது.

கருணாவுக்காகப் பிரபாகரன் பல்வேறு விட்டுக்கொடுப்புக்களைச் செய்திருந்தாலும், அவரது ஆற்றல்களை உணர்ந்திருந்தாலும் பரமதேவாவின் நிலையில் வைத்து அவரைப் பார்க்க வில்லை என்பதே நிஜம் .

"உண்மை, காலில் செருப்பை மாட்டிக்கொள்ள முன்னர் பொய் உலகமெல்லாம் சுற்றி விட்டு வந்துவிடும்" என்பதற்கு மட்டு. சிறை உடைப்பு நல்ல உதாரணம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



WWE நிர்வாகத்தால் 2013ஆம் ஆண்டில் இருந்து நடத்தப்பட்டு வரும் Payback நிகழ்வில் கடந்தவாரம் முதன்முறையாக House of Horrors எனும் பெயரில் திகில் உணர்வை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட வீடொன்றில் ரெண்டி ஓர்ரனுக்கும் பிறே யார்ட்டுக்கும் இடையில் போட்டி நடைபெற்றது. பிறே யார்ட் வெற்றி பெற்ற இந்தப் போட்டியில் இருவரும் மோதிக்கொள்ளும் ஒரு காட்சி.

# நினைவுப் பேருரை

கிரிக்கெட்டில் புதிய விதிகளை உருவாக்குவதில் இங்கிலாந்தில் உள்ள மெரிலிபோன் கிரிக்கெட் கழகத்தின் (எம்.சி.சி.) வகிபங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தக் கழகத்தின் முன்னாள் தலைவராக இருந்து மறைந்தவர் தான் கொலின் கௌட்ரி. இவர் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரும் ஆவார். இவரின் ஞாபகார்த்தமாக இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த பதினாறு வருடங்களாக கோடைப்பருவ காலத்தில் நினைவுப் பேருரை நடைபெற்று வருகின்றது. MCC Spirit of Cricket Cowdrey Lecture என்ற தலைப்பில் கிரிக்கெட்டில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இவ்வுரையில் விவாதிக்கப்படும். கிரிக்கெட் உலகில் தற்பொழுது இந்த உரை மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதோடு வீரர்களுக்குக் கிடைத்த உயரிய கௌரவமாகவும் கருதப்படுகின்றது.

2001ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்த நினைவுப் பேருரை நிகழ்வில் முதலாவது உரையை அவுஸ்ரேலியாவின் மறைந்த முன்னாள் வீரரும் தொலைக்காட்சி வர்ணனையாளருமான றிச்சி பேணோ ஆற்றியிருந்தார். இதைத் தொடர்ந்து இந்தியாவின் சுனில் கவாஸ்கர், மேற்கிந்தியத் தீவுகளின் கிளைவ் லொயிட், அவுஸ்ரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட், பாகிஸ்தானின் இம்ரான் கான், இங்கிலாந்தின் ரொனி கிறேக், இலங்கையின் குமார் சங்கக்கார உட்பட சில வீரர்கள் நினைவுப் பேருரையை நிகழ்த்தி இருந்தார்கள். இறுதியாகச் சென்ற வருடம் இவ்வுரையை நியூசிலாந்தின் பிரண்டன் மக்கலம் ஆற்றி இருந்தார். இவ்வுரையை பெரும்பாலும் பிரபலமான முன்னாள் கிரிக்கெட் வீரர்களே ஆற்றி வந்தாலும், 2008 ஆம் ஆண்டு நிறவெறிக்கெதிராகப் போராடிய தென்னாபிரிக்காவின் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அவர்கள் ஆற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


அந்தவகையில் இவ்வருடம் இடம்பெறவுள்ள நினைவுப் பேருரையை பிறைன் லாறா ஆற்றுவார் என எம்.சி.சியின் தற்போதைய தலைவர் மத்தியூ பிளமிங் சில தினங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர்



மாதம் 4ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் இவ்வுரை நிகழவுள்ளது. இதுகுறித்து மத்தியூ பிளமிங் : "ஆக்ரோசத்துடன் கூடிய தனது நேர்த்தியான ஆட்டத்தால் எதிரணிகளுக்கு எப்பொழுதுமே சிம்மசொப்பனமாக விளங்கியவர் பிறைன் லாறா. அவர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றாலும் கிரிக்கெட் தொடர்பாக தனது அனுபவத்தின் வாயிலாக அவர் முன்வைக்கும் பரிந்துரைகள் எதிர்காலத்தில் கிரிக்கெட்டை மேம்படுத்த உதவும்" என்று கூறியுள்ளார்.

# பார்த்தாலே பரவசம்

இருபதுக்கு 20 போட்டிகளின் பரபரப்பு ரசிகர்களுக்கு ஏற்படுத்திய பரவசம் தனித்துவமான அங்கீகாரத்தை அதன் மீது ஏற்படுத்தி இருந்தது. பிக்பாஸ் தொடர், கரீபியன் லீக் தொடர், பாகிஸ்தான் சுப்பர் லீக் போன்ற இருபதுக்கு 20 தொடர்களுக்கு இல்லாத மவுசு ஐ.பி.எல். போட்டிகளுக்கு உலகம் பூராகவும் இருக்கின்றது. விளையாடுகின்ற அணிகள் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும் அதன் உரிமையாளர்களோ, விளம்பரதாரர்களோ, ஒளிபரப்பு நிறுவனத்தினரோ ஐ.பி.எல். தொடரால் நட்டப்பட்டதில்லை. இந்திய இளம்வீரர்களை இனங்காண்பதற்கான



தேடல் என்ற போர்வையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொடர் அதன் நோக்கத்தை நிறை வேற்றியதோ இல்லையோ வணிக ரீதியிலான இலாபத்தை மட்டும் வருடம் தோறும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இந்நிலையில் இவ்வருடம் ஐ.பி.எல். போட்டிகள் ஆரம்பிக்கும் பொழுது முன்னைய தொடர்களில் இல்லாத அளவுக்கு பல வீரர்கள் காயமடைந்திருந்ததனால் இம்முறை போட்டிகள் சோபிக்குமா ? என்ற கேள்வி ரசிகர்களிடம் எழுந்திருந்தது. குறிப்பாக இது போட்டிகளைப் பார்வையிடும் ரசிகர்களின் எண்ணிக் கையில் அது பிரதிபலிக்கும் என்றே கருதப்பட்டது. ஆனாலும் தற்போது ஐ.பி.எல். போட்டிகள் பிளேஓவ்ஸ் சுற்றை நெருங்கி உள்ள நிலையில் சில தினங்களுக்கு முன்னர் போட்டியை ஒளிபரப்பும் சொனி தொலைக்காட்சி குழுமத்தினர் ஒரு தகவலை வெளியிட்டுள்ளனர்.

அதுதான் சென்ற வருடம் நடைபெற்ற 9 ஆவது ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி வரை 361 மில்லியன் பார்வையாளர்கள் தொலைக்காட்சியில் பார்த்து ரசித்துள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை,தற்போதைய தொடரின் 32 ஆவது போட்டியின் முடிவிலேயே 363.9 மில்லியன் பார்வையாளர்கள் பார்வையிட்டதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளதான தகவலே அது.

இன்னும் சில போட்டிகள் மீதமுள்ள நிலையில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்றே நம்பப்படுகின்றது. அதிலும் இம்முறை 32 போட்டிகள் வரை வணிக ரீதியாகத் தாக்கத்தைச் செலுத்திய மாநிலங்களில் தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், குஜராத் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன.

அத்தோடு இம்முறை ஐ.பி.எல். தொடரில் ரசிகர்கள் ஒரு போட்டியை சராசரியாக 64 நிமிடங்களாவது கண்டு களித்துள்ளனர். இதுகூட சென்ற வருடத்தை விட அதிகமானதே. சென்ற வருடம் இந்தச் சராசரி 53 நிமிடங்களாக இருந்தது. அதேசமயம் அடுத்த ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளும் விளையாட இருப்பதால் இந்தவருடம் தொலைக்காட்சியில் பார்வையிட்ட ரசிகர்களின் எண்ணிக்கை சாதனை நிச்சயம் முறியடிக்கப்படும் என்பதையும் உறுதியாகச் சொல்லலாம்.

தொகுப்பு: **சி.விமலன்**

# மகுடம் யாருக்கு?

ஸ்பெயினில் நடைபெற்று வரும் லாலிகா உதைபந்தாட்டத் தொடரில் வில்லா றியல் அணிக்கெதிரான போட்டியில் பார்சிலோனா 4 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டியில் பார்சிலோனா சார்பில் நெய்மர் ஒரு கோலையும் மெஸி இரண்டு கோல்களையும் சுவாரஸ் ஒரு கோலையும் அடித்திருந்தனர். மெஸி இந்தப் போட்டியில் ஒரு கோல் அடித்ததும் இந்தப்பருவகாலத்தில் பார்சிலோனா அணிக்காக அவர் அடித்த 50 ஆவது கோலாக அது அமைந்தது.

வில்லா றியல் அணிக்கெதிரான வெற்றியைத் தொடர்ந்து புள்ளிப்பட்டியலில் பார்சிலோனா 36 போட்டிகளின் முடிவில் 84 புள்ளிகளுடன் முதலிடத்திலும் றியல் மட்றிட் 35 போட்டிகளின் முடிவில் 84 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது. இரண்டு அணிகளும் 84 புள்ளிகளைப் பெற்றாலும் கோல்களின் அடிப்படையில் பார்சிலோனா 108 கோல்களையும் றியல் மட்றிட் 96 கோல்களையும் அடித்துள்ளன.

அத்தோடு பார்சிலோனாவுக்கு எதிராக 34 கோல்களும் றியல்மட்றிட்டுக்கு எதிராக 39 கோல்களும் இதுவரை அடிக்கப்பட்டிருந்தன. எனவே இவையும் புள்ளிப்பட்டியலில் தாக்கத்தைச் செலுத்தியதால் பார்சிலோனா முன்னிலை வகிக்கின்றது. பார்சிலோனாவுக்கு இன்னும் 2 போட்டிகளும் றியல் மட்றிட்டுக்கு இன்னும் 3 போட்டிகளும் கைவசம் உள்ளன. எஞ்சிய 2 போட்டிகளிலும் பார்சிலோனா வென்றாலும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றுமா என்பது சந்தேகமே.

ஏனென்றால் றியல் மட்றிட் எஞ்சிய 3 போட்டிகளில் வெற்றி பெற்றால் றியல் மட்றிட்டே சம்பியனாவதற்கான வாய்ப்பு உண்டு. ஒருவேளை பார்சிலோனா இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று றியல் மட்றிட் ஒரு போட்டியில் தோற்று இரண்டு போட்டிகளில் வென்றால் இரண்டு அணிகளுக்கும் புள்ளிகள் சமனாக இருக்கும். தற்போதைய நிலவரப்படி பார்சிலோனாவே அதிக கோல்கள் அடித்து முன்னிலை பெற்றும் எதிராகக் குறைந்த கோல்களையும் பெற்றுள்ளதனால் இந்தநிலை எஞ்சிய இருபோட்டிகளிலும் தொடரும்பட்சத்தில் பார்சிலோனா சம்பியனாவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.




இந்தப்பருவ காலத்துடன் பார்சிலோனா அணியின் முகாமையாளரான லூயிஸ் என்றிக் விடைபெறவுள்ளார். இந்நிலையில் பார்சிலோனா வீரர்கள் அவரை வெற்றியுடன் வழியனுப்ப எஞ்சிய 2 போட்டிகளை வென்றாலும் சம்பியன் ஆவதற்கு றியல்மட்றிட் இடம்கொடுக்குமா என்பது சந்தேகமே. எதிர்வரும் 21 ஆம் திகதி இரு அணிகளும் தத்தமது இறுதிப்போட்டிகளில் விளையாடவுள்ள நிலையில் அதுவரை இதற்கான விடையை ஊகித்தறிய முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 13.05.2017 அன்று 107, [illegible] திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org